இன்றைய நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு

அறவாணன் ஆராய்ச்சி அறக்கட்டளை வரிசை

கருத்தரங்கக் கட்டுரைக் கோவை

27, 28.12.2002

பதிப்பாசிரியர்கள்

முனைவர் பழ. முத்தப்பன்

முனைவர் ந. முருகேசபாண்டியன்

இன்றைய நோக்கில்

பதினெண் கீழ்க்கணக்கு

அறவாணன் ஆராய்ச்சி அறக்கட்டளை வரிசை
கருத்தரங்கக் கட்டுரைக் கோவை
27, 28.12.2002

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **பழ. முத்தப்பன்**

முனைவர் **ந. முருகேசபாண்டியன்**

தமிழ்த்துறை
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி - 622403
புதுக்கோட்டை மாவட்டம்

நூல் விபரப்பட்டியல்

நூலின் பெயர்	:	**இன்றைய நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு**
பதிப்பாசிரியர்	:	முனைவர் பழ. முத்தப்பன்
	:	முனைவர் ந. முருகேசபாண்டியன்
பொருள்	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு, 27, டிசம்பர் 2002
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்து	:	10 புள்ளிகள்
பக்கம்	:	192
கட்டமைப்பு	:	அட்டைக்கட்டு
தாள்	:	13.7 கிரிம்வோ
எண்ணிக்கை	:	1000 பிரதிகள்
கணினிவடிவமைப்பு	:	முத்து அச்சகம், பொன்னமராவதி.
விலை	:	ரூ. **45**

நூல் கிடைக்குடம்,
விற்பனை உரிமை : **மீனாட்சி நூலகம்**
அரிமா நகர்
பொன்னமராவதி - 622407
புதுக்கோட்டை மாவட்டம்.
04333 - 260181

91/4

பதிப்புரை

ஒரு நூற்றாண்டு வரலாற்றை நோக்கிப் பீடு நடையிட்டுச் செல்லும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கண்ட கணேசர் செந்தமிழ்க் கல்லூரி பல்துறைக் கல்லூரியாக வளர்ந்து வருகிறது. கல்லூரியின் சார்பில் ஆண்டுதோறும் பலதுறைகளிலும் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இக்கல்வியாண்டில் (2002 - 2003) புதுவை - அறவாணன் அறக்கட்டளை யினரோடு சன்மார்க்க சபையும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தமிழ்த்துறையும் இணைந்து டிசம்பர் திங்கள் 27, 28 ஆகிய இருநாட்கள் திருக்குறள் நீங்கலாகிய பதினெண்கீழ்க்கணக்கு நூற்கள் பற்றிய கருத்தரங்கு கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பழநியப்பர் அண்ணாமலையார் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே நூல் வடிவம் பெற்றுள்ளது.

சபையின் துணையோடு கல்லூரித்தமிழ்த்துறையின் சார்பில் 2000ஆம் ஆண்டில் திருக்குறள் பற்றிய கட்டுரைகள் **வள்ளுவம் பன்முகப்பார்வை** என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பெற்றது. தற்பொழுது திருக்குறள் நீங்கலாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றிய கட்டுரைகளைக் கொண்ட இக்கோவையைத் தமிழுலகத்திற்கு தமிழ்த்துறையின் சார்பில் அளித்து மகிழ்கிறோம்.

கருத்தரங்கம் இருநாட்கள் சிறப்புற நடைபெற உற்றுழி உதவியதோடு இந்நூல் வெளிவர அனுமதிதந்த சன்மார்க்க சபையார்க்கு என்றும் நன்றி உரியதாகும். தமிழ்த்துறையின் சார்பில் நூலை வெளியிட இசைவளித்த கல்லூரி நிர்வாகக் குழுவினருக்கும் மகிழ்வு கலந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

கட்டுரைகள் நூல் வடிவாகும்போது உடன்இருந்து அனைத்துப் பணிகளையும் செம்மையுறச் செய்துதவிய கல்லூரி நூலகர் முனைவர் ந. முருகேசபாண்டியன் அவர்கட்கும் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி உரியதாகும்.

நூலை அச்சுவாகனம் ஏற்றித்தந்த பொன்னமராவதி முத்து அச்சகத்தாருக்கும் நன்றி

மேலைச்சிவபுரி
27.12.2002

பழ. முத்தப்பன்
முதல்வர்

வாழ்த்துரை

ப.சா.சிங்காரம்
செயலர்
சன்மார்க்க சபை

"சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக" என்ற உயர்மொழியைத் தன் தலையாய கொள்கையாகக்கொண்டு விளங்கும் எங்கள் சன்மார்க்க சபை தோன்றி இன்றைக்கு 93 ஆண்டுகள் ஆகின்றது. சபையின் அங்கமாகிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரி - பல்கலைத்துறைகளில் உயர்கல்வியை அளித்து வருகின்றது. கல்லூரியின் தமிழ்த்துறையைச் சார்ந்த ஆசிரியப் பெருமக்கள் ஆய்வுப்பணியில் சிறந்து விளங்குகின்றனர். அவர்களின் ஆய்வுப்புலமை கல்லூரியில் தமிழ் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தக்க வழிகாட்டியாக அமைந்துள்ளது. சபையின் வளர்ச்சியில் அடித்தளமாக அமைந்த தமிழறிஞர் பண்டிதமணியார் பெயரில் முதுகலை மாணவர்களுக்கு ஆய்வரங்கம் அமைத்து வாரந்தோறும் கருத்தரங்கம் நடத்தப் பெற்று வருகின்றது. பண்டிதமணி ஆய்வரங்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் தமிழறிஞர்களை வரவழைத்துச் சிறப்புக் கருத்தரங்குகளும் நடத்தப் பெறுகின்றன.

இத்தகைய அடிப்படையில் முன்னாள் துணைவேந்தர் முனைவர் க.ப.அறவாணன் அவர்கள் பெயரில் அமைந்த அறக்கட்டளை நிர்வாகத்தினரை அழைத்துப் பதினெண் கீழ்க்கணக்கு கருத்தரங்கு நடத்த, கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் மூலம் சபையார் எண்ணம்கொண்டோம். எங்கள் நோக்கம் மிகச் சிறப்பாக நிறைவேறி தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும் பேராசிரியர்கள் வருகைதந்து கலந்துகொண்டு கட்டுரைகள் வழங்கியுள்ளார்கள். அவர்களின் ஆய்வுச் சிந்தனைகள் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் இக்கட்டுரைக்கோவை வெளியிடப்பெறுகிறது. இப்பணியால் சன்மார்க்க சபையின் புகழ் மென்மேலும் வளர்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

எங்கள் முன்னோர்கள் ஏற்படுத்திய சபையைக் கட்டிக் காத்து வரும் எங்களோடு கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள் உடன் நின்று செயலாற்றுவது நன்றி பாராட்டக் கூடியது. கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களின் பணி என்றென்றும் எங்களால் நினைவு கூறத்தக்கதாகும். இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த கல்லூரி முதல்வருக்கும், பேராசிரியர்களுக்கும் அறவாணன் அறக்கட்டளை நிர்வாகிகளுக்கும் சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சபையின் சார்பில் வெளியிடப்பெறும் இவ் ஆய்வுக்கோவையைத் தமிழுலகம் பாராட்டி ஆதரவு நல்கிட வேண்டுகிறோம்.

நன்றி!

91/4

அணிந்துரை

சி. நாகப்பன்
செயலர்
க. செ. கல்லூரி

எங்கள் முன்னோர்களால் நிறுவப் பெற்றுள்ள சன்மார்க்க சபையும், அதனைச் சார்ந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் பழம்பெரும் புகழ் வாய்ந்தவையாகும். தமிழகப் பெருமக்களின் பாராட்டினைப் பெற்றுவரும் உயர்ந்த நிறுவனங்களாகும். மன்னர்களின் பின்னோர் எனப் பாராட்டப்பெறும் வணிகர் குலத் திலகங்களாம் நகரத்தார் பெருமக்களின் வரலாற்றில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுள்ள தமிழ் வளர்க்கும் நிலையங்களாகும் இவை.

நூற்றாண்டு விழாவை அண்மையில் காணவிருக்கும் சன்மார்க்க சபை எவ்வித வணிக நோக்கமின்றி நடத்தி வரும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி இப்பகுதியைச் சார்ந்த ஏழை எளிய மாணவர்கட்கு கல்வியில் கலங்கரை விளக்காகப் பல்துறைக் கல்வியை அளித்து வருகிறது. எம் நிர்வாகக் காலத்தில் கல்வி வளர்ச்சியின் உயர்ந்த இலக்குகளை நோக்கிக் கல்லூரி முன்னேறிக்கொண்டிருக்கிறது. கல்லூரியின் அடிப்படைக் கட்டமைப்பை இன்னும் வளப்படுத்திட வேண்டும் என்பதே எமது சீரிய நோக்கமாகும். கல்லூரியின் தொல்காப்பியர் நூலகம் புதுப்பொலிவுற்றுள்ளது. இத்தகு அடிப்படையில் மாணவர்கட்கு ஆய்வு நோக்கமும், அற ஒழுக்கச்சிந்தனையும் வளர்வதற்கு பதினெண்கீழ்கணக்கு நூல்கள் பற்றிய கருத்தரங்கு நடத்தப்பெறுகிறது. கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் நூலாக்கம் பெறுகின்றன.

நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிஞர் பெருமக்களால் எழுதப் பெற்றவையாகும். அறநூல்களைத் தனித்தனியே கற்பதற்குக் கால அவகாசம் பெரிதும் தேவை. ஆயின் இந்நூலில் அமைந்துள்ள செய்திகளைப் படிக்கின்றபொழுது அறநூல்களை முழுமையாகப் படித்த அனுபவம் கிடைக்கிறது. இதுவெறும் புகழ்மொழியல்ல; உண்மையான செய்தியாகும். இன்றைய இளைய தலைமுறையினராம் மாணவ மாணவியர்க்கு இந்நூல் தக்க வழிகாட்டியாகும். அறிஞர் பெருமக்களை மேலும் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

இந்நூலை உருவாக்கிய எம் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்களை வாழ்த்தி மகிழ்கிறேன். இந்நூலைப் பதிப்பித்த கல்லூரி முதல்வர் பழ.முத்தப்பன் அவர்களையும், நூலகர் ந. முருகேசபாண்டியன் அவர்களையும் பாராட்டிப் போற்றுகிறேன்.

எங்களுடன் இணைந்து கருத்தரங்கை நடத்த ஆக்கமும் ஊக்கமும் தந்த புதுவை க.ப.அறவாணன் அறக்கட்டளையைச் சார்ந்த நிர்வாகத்தார்க்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற நூல்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பெற்று, சன்மார்க்க சபைக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்த்திட திருவருள் புரியுமாறு கணேசப்பெருமான் திருவருளை நினைந்து போற்றுகிறேன்.

பொருளடக்கம்

பிறனில் விழைதல் எனும் சமுதாயக் குற்றம் அற இலக்கியங்களில் பேசப்பட்டதற்கான அரசியல் சமுதாயச் சமயப் பின்புலம்

க.ப. அறவாணன்
முன்னைத் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

ஆண் பெண் தொடர்பை அகவாழ்வாகப் படம் பிடித்துக் காட்டும் சங்க கால அகப் பாடல்களுள் பிறனில் விழைதல் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றில. பொதுவாகப் புறப்பாடல்களிலும் அது பற்றிய குறிப்பு இல்லை. சங்க காலக் கடைப் பகுதியான இரண்டாம் நூற்றாண்டு இறுதிக்காலம் தொடங்கிப் படைக்கப்பட்ட திருக்குறள் உள்ளிட்ட பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்களில் பிறன் மனைவியை விரும்பும் ஆண் பற்றிய குறிப்புகளும், பிறள் கணவனை விரும்பும் பெண் பற்றிய குறிப்புகளும் அபரிமிதமாக இடம் பெற்றுள்ளன. சிக்கனத்திற்குப் பெயர் பெற்ற திருக்குறளில் பிறனில் விழையாமை எனத் தனி அதிகாரமும (15), நாலடியாரில் பிறர் மனை நயவாமை எனத் தனி அதிகாரமும் (9) அமைக்கப்பட்டதுடன் ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் பிறர் மனைவியை நயத்தலும், கணவனை நயத்தலும் கண்டிக்கப் பட்டுள்ளன (பார்க்க. தாயம்மாள் அறவாணன், அறநூல்களில் பிறனில் விழையாமை பற்றிய கருத்துக்கள் - தொகுப்பும் பகுப்பும் - மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் கருத்தரங்கக் கோவை, திசம்பர் 2002).

பிறன் மனைவியை விரும்புதலைத் தமிழர் வழக்காகக் காட்டாவிட்டாலும் ஆரிய வழக்காகக் காட்டும் இரு குறிப்புகள் சங்க இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

1. பிறன் இல் விழைவோர் கிளையொடும் கெடுப எனும் பாவிகத்தை ஆதாரமாகக் கொண்ட இராமன் கதையைப் பற்றிய குறிப்பு (அகநானூறு 70 : 13 - 16 ; புறநானூறு 378 : 18 - 21) இடம் பெற்றுள்ளது. இராமனின் மனைவியான சீதையை இராவணன் கவர்ந்து சென்றமை புறநானூற்றில் தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

> கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
> வலித்த கை அரக்கன் வவ்விய ஞான்றை
>
> - ஊன் பொதி பசுங்குடையார் பாடல்
> புறம் 378 : 18-19

2. பிறன் மனைவியை நயத்தலில் முன்னிலை பெற்ற இந்திரனைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன (பரி பாடல் 5 : 58-60; 9: 2-4; 19: 50-52; பரி திரட்டு 2: 96-97; கலித்தொகை

105 :15; திருமுருகாற்றுப்படை 155-156 ; 157-159) அகலிகையயின் கணவர் கவுதம முனிவர் பொழுது விடிந்ததாக நள்ளிரவில் எழும்பி நீராடுதலுக்காக ஆற்றங்கரை சென்றிருந்த போது, இந்திரன் கவுதமர் உருவில் அகலியையைப் புணர்ந்த வரலாறு பரிபாடலுள் சுட்டப் பெற்றுள்ளது. திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் இப்புராண வரலாறு சிற்பமாக வடிக்கப்பட்டிருந்ததாகவும் கோயிலுக்குச் செல்வோர் அதைப் பார்த்ததாகவும் பரிபாடல் தெரிவிக்கிறது (19 செவ்வேள் 50 - 52).

இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சினன் உற கல் உரு
ஒன்றிய படி இது என்று உரை செய்வோரும்.

இந்திரனைப் பற்றிய புலனடக்கமற்ற இச்செயலைத் திருவள்ளுவரும் தம் நூலுள் சுட்டுகிறார் என்பது பரிமேலழகர் கருத்தாகும் (3 நீத்தார் பெருமை : 25).

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி

இக்குறட்பாவிற்கு உரையும் சிறப்புரையும் எழுதிய பரிமேலழகர் குறிப்பது வருமாறு :

அகன்ற வானத்திலுள்ளார் இறைவனாகிய இந்திரனே
அமையும் சான்று தான் ஐந்தவியாது சாபம்
எய்தி நின்று அவித்தவனது ஆற்றல் உணர்த்தினான்
ஆகலின்; இந்திரனே சாலும் கரி என்றார்.

இந்திரனுடைய வரலாற்றில் இடம் பெற்றுள்ள அகலிகை பற்றிய குறிப்பு மட்டுமன்றி இந்திரன் வேறு இருவர்தம் மனைவியரை விரும்பினதாகவும் அவன் வரலாறு தெரிவிக்கின்றது.

1. தேவசன்மன் மனைவியாகிய உரிசையுடன் உறவு கொண்டு விபுலனைப் பணிந்து தன் குற்றத்தை மன்னிக்க வேண்டினான் (அபிதான சிந்தாமணி ப.156).

2. முகுந்தை என்பவள் கவி முனிவர் என்பவரின் மனைவி ஆவாள். இவள் உருக்குமாங்கதனிடம் உறவு கொள்ள விழைந்தாள். அவனோ மறுத்தான். எனினும் அவனையே எண்ணி மருகிக் கொண்டிருந்தாள் முகுந்தை. இதனை அறிந்து கொண்ட இந்திரன் உருக்குமாங்கதன் உருவங்கொண்டு முகுந்தையோடு உடலுறவு கொண்டான் (அபிதான சிந்தாமணி - ப : 1325.).

இக்கதை மூலம் பெண்ணும் பிறன் ஒருவனின் கணவனை விரும்பினாள் என்பது தெரிகிறது. இவ்வரலாறு இன்னும் சற்று விரிவாக

விளக்கப்பட்டுள்ளது. இவன் வீமணின் மகனாவான். ஒரு முறை காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்தான். தாகம் மீதுற்றது. காட்டில் ஆசிரமம் ஏதேனும் இருக்கிறதா என்று தேடினான். கவி முனிவர் ஆசிரமம் இருந்தது. நீர் வேண்டுமென்று கேட்டான். உள்ளே தனியாக இருந்த முகுந்தை அவனுக்கு நீர் கொண்டு வந்து கொடுத்தாள் அவன் அழகில் மயங்கினாள். அவன் மேல் மோகமுற்று அழைத்தாள்; அவன் மறுத்தான். சினந்த முகுந்தை வெண் குட்டரோகி ஆகுமாறு அவனைச் சபித்தாள் (அபிதான சிந்தாமணி ப.249).

திருவள்ளுவர் இந்திரனைப் பற்றிய இப்புராணக் கதைகளை அறிந்து தம் குறட்பாக்களை யாத்தாரா என்பது தெரியவில்லை.

தொல்காப்பியர் நிலத்தெய்வங்களைக் குறிப்பிடும்போது (அகத்திணையியல் :5).

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

என்று நூற்பிக்கிறார். வேந்தன் எனும் சொல்லிற்கு நம் உரையாசிரியர்கள் இந்திரன் என்று பொருள் எழுதுகின்றனர். இந்திர விழாவைப் பற்றி நிறைய குறிப்புகள் சிலம்பிலும், மணிமேகலையிலும் இடம் பெற்றுள்ளன (சிலம்பு - இந்திரவிழவூர் எடுத்த காதை 5, மணிமேகலை காதை 14). மருத நிலத் தெய்வமான இந்திரனும் பூம்புகார் விழா நாயகனான இந்திரனும் அகலிகை இந்திரனும் ஒருவர் அல்லர் என்றே தோற்றுகிறது. ஆரிய இந்திரன் வேறு, தமிழ் இந்திரன் வேறு என்று கருதுதலே தகும்; இது மேலும விரிவாக ஆராயத்தக்கது.

ஆரிய இந்திரனின் பிறனில் விழைதலைப் பரிபாடல் மட்டும் சுட்டிக் காட்டியதாகக் கொண்டாலும் சங்கம் மருவிய காலத்துத் தமிழ் நிலத்தில் பிறன் மனைவியை நயத்தலும், கணவனை நயத்தலும் குறிப்பிடத்தக்க ஒழுங்கீனமாக இருந்தமையால்தான் திருக்குறளும் நாலடியாரும் தனி அதிகாரமாகவே வைத்து இவ்வொழுங்கீனத்தைக் கண்டித்து உள்ளன. சங்கம் மருவிய காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் கண்டிக்கத் தக்க அளவு இக்குற்றம் பெருகியதற்கான அரசியல் சமூகவியல் காரணங்கள் ஆழ்ந்து ஆராயத்தக்கவை.

1. சங்ககாலத்தை அடுத்துத் தம்முள்ளேயே முட்டி மோதிக் கொண்டிருந்த சேர, சோழ, பாண்டியர்தம் ஆட்சி அகப்பகை புறப்பகைக் காரணங்கால் முற்றுமாக வீழ்த்தப் பெற்றது. கி.பி. 3 ஆம் நூற்றாண்டு அளவில் அனைத்திந்திய அளவில் இலங்கை முதல் இமயம் வரை அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவை பெரும்பாலும் ஆரிய மொழியையும் நான்கு ஆரிய வேதங்களையும் முன்னிறுத்தியவை. வைதிக சமயத்தாரையும், வைதிக சமயத்தார் தம் புரோகித ஆன்மீக வருணாசிரம ஆதிக்கங்களையும் எதிர்த்தும் மறுத்தும் சைனமும் பௌத்தமும் மேலோங்கின.

வட இந்தியாவில் ஏற்பட்ட இவ் அரசியல், சமய சமுதாய மாற்றங்கள் தென்னிந்தியாவிலும் நிகழ்ந்தன. தென்னிந்தியாவில் சமணம் பரவ கருநாடகத்தில் அமைந்துள்ள சிரவண பெள் கோளா மையமாக இருந்தது. பௌத்தம் பரவ நாகார்ஜுன கொண்டா மையமாக இருந்தது. தமிழகத்தில் சமண பௌத்த மதச் சார்புள்ள அரசுகள் ஆட்சிக்கு வந்தன. முன்பே வழக்கில் இருந்த தமிழர் தம் பூர்வீகக் கருத்துக்களுடனும் பழக்க வழக்கங்களுடனும் ஆரிய வைதிக வரவுகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இவற்றுடன் சமண பௌத்த அவைதிக வரவுகளும் உறழ்ந்தன. உறழவே, ஆண் பெண் வாழ்வில் காதலுக்கு முதன்மை அளித்திருந்த தமிழ்ச்சமுதாய இயல்பு, சமண பௌத்தத்தால் மாற்றம் பெற்றது. காதல் மணம் பின்னுக்குத் தள்ளப்பட்டதுடன் பெண்ணும் பின்னுக்குத் தள்ளப்பட்டாள். பெண் வெறுப்பும், பெண் பிறப்பு மறுப்பும் பேசப்படத்தொடங்கின! விளைவாக காதல் மணம் என்பதே முற்றும் விலக்கிக் கொள்ளப்பட்டது. சங்கம் மருவிய காலத்து பெற்றோர் வழி நடந்த திருமணங்களாவன : 1) கோவலன் - கண்ணகி , 2) காரைக்கால் புனிதவதி - தத்தன் 3) சுந்தரர் - திருவெண்காட்டு நங்கை ஆகியன. இவை அனைத்தும் காதல் அடிப்படையில் நடத்தப்பட்ட திருமணங்கள் அல்ல. மூன்றுமே முறிவுக்கு உள்ளாயின. காதல் திருமண உரிமையைக் காட்டும் உடன் போக்கு இலக்கியப் பொருளாகப் பேசப்படுவதே பெரும்பாலும் கைவிடப்பட்டது. ஒரு பெண் தான் விரும்பிய ஒருவனை அடைவதற்குப் பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது என்பதைத் திருஞானசம்பந்தர் முன் நின்று நடத்திய ஒரு திருமணம் காட்டுகிறது (வைப்பூர் தாமன் மகள் 472 - 483).

காதல் மணம் குன்றிப் பெற்றோர் முன்னின்று நடத்தும் திருணமங்கள் பெருகின என்பதுடன் ஒரே ஆண் ஒருவருக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணமே செய்து கொள்ளும் (கண்டிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட முடித்துக் கொள்ளப்படாத சங்க காலப் பரத்தையர் உறவிலிருந்து வேறுபட்டது). பழக்கம் மிகப்பொதுவாகி விட்டதைச் சுந்தரர் வரலாறு காட்டுகிறது. பல்லவ அரசர்களும் அவரைத் தொடர்ந்து ஆண்ட பிற்காலச் சோழ, பாண்டிய அரசர்களும் ஒருவருக்கு மேற்பட்ட பலரைத் திருமணம் செய்து கொள்ளுதல் எளிய ஒன்றாக ஏற்கப்பட்டது (பதிற்றுப்பத்து சேரர் அரசன் இரண்டாம் மனைவியைக் கொண்டதாகக் குறிப்பு (பல்யானைச் செல்கெழு குட்டுவன் - மூன்றாம் பத்து) இருப்பினும் வையாவிப் பெரும் பேகன் அவன் மனைவியை விட்டுப் பரத்தையிடம் சென்றது புலவர்களால் கண்டிக்கப்பட்டது). நாயக்கர் கால அரண்மனைகளிலும், சேதுபதி மன்னர் அரண்மனைகளிலும் நூற்றுக்கணக்கான மனைவியர் அந்தப் புரங்களில் இருந்துள்ளனர்.

அரசன் இயல்பாக இறந்தாலோ, கொல்லப்பட்டாலோ அத்தனை மனைவிமாரும் தீக்குளிக்க வைக்கப்பட்டனர். அல்லது வாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர். அரசரின் முதல் மனைவிக்கு 50 வயது என்றால் அவனுடைய இளம் மனைவிக்கு பதினைந்து வயது கூட இருப்பதில்லை. இது அரச குடும்ப மாற்றமாக மட்டுமில்லாமல் தமிழ்ச்சமுதாய மாற்றமாகவும் அமைந்து விட்டமை கவனத்தில் கொள்ளத்தக்கது. பிறனில் விழைதலுக்குத் தமிழ் சமுதாயத்தில் பல்கிய பலதார மணமுறையும் ஒரு காரணமாக இருந்திருத்தல் வேண்டும்.

1. ஒருவர்க்கு உரிய துணைவரை ஒருவர் தெரிவு செய்ய வாய்ப்பளித்த காதல் மணம் முறிவுறப் பெற்றோர் வழி அமைந்த கட்டாயத் திருமண வரைவு, தான் விரும்பா ஆணையும் பெண்ணையும் துணையாக அடையச் செய்யும் சமுதாய மாற்றத்திற்கு இடம் அளித்தது. அளிக்கவே இந்நிலை தான்விரும்பும் பெண்ணும் அல்லது தான் விரும்பிய பெண்ணும் அல்லது தான் விரும்பும் ஆணும், அல்லது தான் விரும்பிய ஆணும் வேறு மனைக்கு உரியவர் ஆன நிலையில் நய்க்க வைத்திருக்க வேண்டும்.

2. பலதாரக் குடும்ப அமைப்பில் வயதான கணவனின் இளவயது மனைவி ஆகும் இளம் பெண். இள மனைவியை வேறு ஆணைத் தேட வழிசெய்திருக்க வேண்டும். யசோதரக் காவியத்தில் வரும் அரசனின் மனைவி கணவனுக்குத் தெரியாமல் இசைக்கலைஞனுடன் உறவு வைத்திருந்தது சுட்டத்தக்கது.

3. சமண பௌத்த வரவாலும், பின்னர் ஆதிக்கம் செலுத்த வந்த ஆரியர் வரவாலும் உறவாலும் சன்னியாசம் என்னும் ஆண் துறவு உச்சமாக எடுத்துப் பேசப்பட்டது. திருமணமே செய்து கொள்ளாமல் சமய ஈர்ப்பால் இளம் வயதிலேயே பிரம்மச்சாரியாக வாழும் துறவியர் தம் புலனடக்கத்தை இழக்கிற போது அவர் பார்வைக்குப் பாதுகாப்பாகவும், எளிதாகவும் வயப்படுபவர் திருமணம் ஆன பெண்கள் ஆவர் (இது இன்றும் போலி ஆண் சாமியாரிடம்தம் கற்பைப் பறிகொடுக்கும் பெண்களின் வரலாறாக தொடர்கிறது). பௌத்தத் துறவியர் புத்தருக்குப் பிறகு இவ்வாறு ஒழுக்கக் கேட்டில் ஈடுபட்டதைப் பௌத்த சமய வரலாறு தெளிவு படுத்துகிறது.

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பின்பற்றப்பட்டுவந்த ரோமன் கத்தோலிக்க இளம் துறவியரிடம் இவ்வரம்பு மீறல் இருந்ததைப் புராட்டஸ்டாண்டு மதத்தைத் தோற்றுவித்த செர்மானிய மார்ட்டின் லூதர் பட்டியலிட்டுக் காட்டினார். ஆக, பிரம்மச்சரிய நோற்றல் என்பது பண்டைத் தமிழரிடம் இல்லாத மரபு. இது தமிழ்நாட்டில் கி.பி. 3 ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும் வெகுவாகப் பரப்பப்பட்டது. பிறனில் விழைதலுக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருத்தல் வேண்டும்.

சங்ககாலத்திலும் அதனைத் தொடர்ந்தும் திருமணம் செய்து வந்த ஆடவர் இளம்மனைவியை இல்லத்தில் இருத்திவிட்டு பொருள் வயின் பிரிந்து செல்லுதலை முல்லைத் திணைப் பாக்களும் பாலைத்திணைப் பாக்களும் காட்டுகின்றன. பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை மாதக்கணக்கிலும், ஆண்டுக்கணக்கிலும் தலைவியர் பிரிந்திருக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு பிரிந்து இருக்கும் பெண்டிர் மேல் கொடிய ஆடவர் காம நோக்கிடுவதும் வழக்கத்தில் இருந்தது. இதனைச் சிலப்பதிகாரம் வஞ்சின மாலையில் கண்ணகி கூற்றாக இடம் பெற்றுள்ள இரு பத்தினியர் வரலாறு தெளிவு படுத்துகிறது.

1. கடல்வழி பொருளீட்டுவதற்காகத் தலைவன் பிரிந்து சென்று அவன் கப்பலில் திரும்பி வரும்வரை எதிர்பார்த்துப் பத்தினிப் பெண்ணொருத்தி கடற்கரையில் காத்திருக்கிறாள். மெய் உருவம் கொண்டு அல்ல; தன்னைக் கல் உருவச் சிலையாக மாற்றி சென்ற தலைவன் மீண்டும் வந்த பின் கல்லுருவம் நீத்துப் பெண் உருவம் பெற்றாள்.

மணல்மலி பூங்கானல் வரும்கலன்கள் நோக்கி
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள்
(21 - வஞ்சின மாலை 16 - 17)

2. இன்னொருத்தி தலைவனைப் பிரிந்து வாடியிருக்கும் தன் வேற்கண் முகத்தை ஒரு காமுகன் காம நோக்கத்துடன் பார்த்த அளவிலே, தன் திங்கள் போன்ற முகத்தைக் குரங்கு முகம் ஆக்கிக் கொண்டாள். தலைவன் திரும்பி வந்தவுடன் தன் குரங்கு முகம் நீக்கி முன்னைய நல்லுருவம் எய்தினாள்.

வேற்கண்ணாள் வேறொருவன்
நீள் நோக்கம் கண்டு நிறைமதி வாள்முகத்தைத்
தானோர் குரக்கு முகம் ஆகென்றுபோன
கொழுநன வரவே குரக்கு முகம் நீத்த
பருமணி அல்குல் பூம்பாவை
(21 - வஞ்சினமாலை : 19-23)

இவ்விரு குறிப்புகளும் கண்ணகி காலத்தில் பிறன் மனைவியைக் காமப் பார்வையில் நோக்கும் போக்கு ஆடவரிடம் இருந்தது என்பதைக் காட்டும் சான்றுகள் ஆகும்.

ஆக தமிழகத்துக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு இறுதிப்பகுதி தொடங்கி நிகழ்ந்த அரசியல், சமுதாய, சமய மாற்றங்களே திருவள்ளுவரையும் இன்னபிற பதினெண் கீழ்க்கணக்கு அடிநூல் ஆசிரியரையும் பிறனில் விழைதல் எனும் ஒழுக்கக்கேட்டைக் கண்டித்து எழுதச் செய்திருத்தல் வேண்டும்.

* * * * * *

அறநூல்களில் பிறனில் விழையாமை பற்றிய கருத்துக்கள் தொகுப்பும் - பகுப்பும்

முனைவர் **தாயம்மாள் அறவாணன்**
தமிழியல் துறைத் தலைவர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்.

சங்க இலக்கியங்களில் ஆண், பெண் நேச வாழ்க்கை அகவாழ்வாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது. திருமணத்துக்கு முற்பட்ட காதல் வாழ்க்கை களவு எனவும், திருமணத்துக்குப் பிற்பட்ட இல்வாழ்க்கை கற்பு எனவும், இரு கைகோள்களாக அக இலக்கியங்களிலும், அகத்திணை இலக்கணங்களிலும் பேசப்பட்டுள்ளன. ஆனால் கட்டுக் கோப்பாக விதவைக்காதல், விதவை மறுமணம், பெண்ணின் ஒழுங்கீனம் (ஆணின் ஒழுங்கீனம் பரத்தையிற் பிரிவாகப் பேசப்பட்டிருக்கிறது) மணவிலக்கு, மறுமணம் ஆகியன பேசப்பெறவில்லை. விதவைக்காதல் வடமொழி இதிகாசமான இராமாயணத்தில் சூர்ப்பனகை வழியாகக் காட்டப்பட்டிருக்கிறது. மணவாளன் இருக்க மறுமண முயற்சிக்கான சுயம்வரம் மகாபாரதத் துணைக் கதையான நளன் வரலாற்றில் தமையந்தி வழியாகக் காட்டப் பட்டுள்ளது. இத்தகு விதிவிலக்கான ஆண், பெண் உறவுகள் தமிழர்தம் சங்க அக இலக்கியங்களில் பதிவாகவில்லை. தமிழ் முன்னோர் காதலை மேன்மைப் படுத்தி முன்னிலைப் படுத்தியமையாலும் இல்லற இலட்சிய வாழ்க்கையை முன்னிறுத்தியமையாலும் இத்தகைய் விதிவிலக்குகளைத் திட்டமிட்டே தவிர்த்தனர் போலும்.

சங்க காலம் முடிந்த சங்கம் மருவிய கால இலக்கியங்களாகக் கருதப்பெறும் பதினெண் கீழ்க்கணக்கு, திருக்குறள் உள்ளிட்ட அற நூல்களில் சங்க மரபை மீறி முரணான ஆண் பெண் உறவு முன்னிறுத்தப்படுகிறது. அதுவே பிறனில் விழையாமை எனும் அதிகாரமாகும். திருக்குறளில் இடம் பெற்றுள்ள இவ்வதிகாரப் பொருளை விளக்கும் பரிமேலழகர், "அஃதாவது காம மயக்கத்தில் பிறனுடைய இல்லாளை விரும்பாமை" என்று விளக்குகிறார். ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தை அடுத்து இவ்வதிகாரம் அமைக்கப் பெற்றுள்ளமையும் கருதத் தக்கது. மிகக் கருத்துச் சுருக்கத்திற்கும் சொற்சுருக்கத்திற்கும் பெயர் போன திருவள்ளுவர் சமுதாயத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த சாதிச்சார்பு, மதச்சார்பு முதலானவற்றுக்குக் கூடத் தனி அதிகாரம் ஒதுக்கவில்லை. 'பிறனில் விழைதல்' எனும் ஒழுக்கக் கேட்டைக் கண்டிக்கும் முகமாகத் தனி அதிகாரத்தையும் 10 குறட்பாக்களையும் படைத்திருப்பது வியப்பைத் தருவதாகும். நாலடியார்க்கும் இது பொருந்தும். இக்கருதுகோள் சங்கம்

மருவிய காலத்தில் சமுதாயத்தில் அறிமுக மானதற்கான காரணங்கள் பல இருத்தல் வேண்டும் (பார்க்க. க.ப. அறவாணன்; பிறனில் விழைதல் எனும் சமுதாயக் குற்றம் அற இலக்கியங்களில் பேசப்பட்டதற்கான அரசியல் சமுதாயச் சமயப் பின்புலம், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, பண்டிதமணி ஆய்வரங்கக் கோவை, மேலைச்சிவபுரி திசம்பர் 2002).

திருவள்ளுவர் பிறனில் விழைதலைக் கண்டிக்கும் முகமாகப் பத்துக் குறட்பாக்களைப் படைத்திருப்பதில் இரண்டு சிறப்புக் குறிப்புகள் கருதத்தக்கன. அவை வருமாறு :

1. பிறன் ஒருவரின் மனைவியைப் பெண்டாள விரும்பும் ஆணை மட்டுமே முன்னிறுத்திக் குறட்பாக்களை அமைத்துள்ளார். இதனைப் பிறன் பொருள் (141), பிறன்கடை (142), தினைத்துணையும் தேரான் (144), இல் இறப்பான் (144, 146), இல் வாழ்வான் என்பான் (147) பிறன் மனை நோக்காத பேராண்மை (148), பிறனுக்கு உரியாள் தோள் (149), பிறன் வகை யாள் (150) என ஆணை முன் சுட்டியே குறட்பாக்களைப் படைத்துள்ளமை வழி அறியலாம்.

2. ஆணின் இச்செயலைப் பேதைமை (141, 142), தீமை (143), பகை பாவம், அச்சம், பழி நான்கும் வந்து சேருதல் (145, 146) என்று ஆணைக் கண்டித்து உரைப்பவர் பிறனில் விழைதலில் சமபொறுப்பு உடைய பெண்ணை முன்னிறுத்திக் கண்டிக்காதது வியப்பை அளிக்கிறது.

3. பிறன் ஒருவனின் மனைவியை நயத்தல் ஒரு சாதாரண மனிதனின் செயலாகவே இருத்தல் வேண்டும். அது ஒரு காமுகனின் செயல். அங்ஙனம் இருக்க அதனைச் சான்றோர் தம் பேராண்மை என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது (148) பெருந்தவியப்பை அளிக்கிறது. இதற்குப் பரிமேலழகர் எழுதி இருக்கும் உரை நம் சிந்தனையைத் தூண்டுகிறது. அவ்வுரை வருமாறு : "புறப்பகைகளை அடக்கும் ஆண்மை உடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனை அடக்கிய ஆண்மையைப் **பேராண்மை** என்றார்".

திருக்குறளுக்குப் பின்வந்த அறநூல்களில் வள்ளுவரைப் போல ஆணை முன்னிறுத்திப் பிறன் மனைவியை விரும்புதல் பிழை எனப் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் கருத்து கூறப்பட்டிருக்கிறது. அக்கருத்து இடம்பெற்ற நூலும் அடிகளும் வருமாறு.

ஆண் பிறர் மனை நயவாமைக்குச் சான்றுகள் :

பிறர் மனை நயத்தலில் வரும் துன்பங்கள்:

1. அச்சம் பெரிது; அதற்கு இன்பம் சிற்றளவால்
நிச்சல் நினையுங்கால் கோக் கொலையால்; நிச்சலும்

கும்பிக்கே கூர்த்த வினையால் - **பிறன்தாரம்**
நம்பற்க, நாண் உடையார்
- நாலடியார் - பிறர்மனை நயவாமை 1.

2. அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா; பிறன் தாரம்
நச்சுவார்ச் சேரும். பகை, பழி பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்
- மேலது 2

3. புக்க இடத்து அச்சம்; போதரும்போது அச்சம்,
துய்க்கும் இடத்து அச்சம்; தோன்றாமைக் காப்பு அச்சம்,
எக்காலும் அச்சம் தருமால்; எவன் கொலோ
உட்கான் பிறன் இல்புகடல்? - மேலது 3

4. காணின் குடிப்பழி ஆம் கையுறின், கால்குறையும்
ஆண் இன்மை செய்யுங்கால், அச்சம் ஆம்; நீள் நிரயத
துன்பம் பயக்குமால், துச்சாரி! நீ கண்ட
இன்பம் எனக்கு எனைத்தால்? கூறு - மேலது 4

5. செம்மை ஒன்று இன்றி, சிறியார் இனத்தர் ஆய்
கொம்மை வரி முலையாள் தோள்மரீஇ, உம்மை
வலியால் **பிறர் மனைமேல் சென்றாரே- இம்மை**
அலி ஆகி, அடி உண்பார் - மேலது 5

6. பல்லார் அறியப்பறை அறைந்து, நாள் கேட்டு
கல்யாணம் செய்து கடிபுக்க மெல் இயல்
காதல் மனையாளும் இல்லாளா என் ஒருவன்
ஏதில் மனையாளை நோக்கு - மேலது 6

7. பிறன் மனையாள் பின்னோக்கும் பேதைமைஇன்னா
- இன்னாநாற்பது 8

8. பெண்டீர் வெய்யோர்க்குப் படுகுழி
- முதுமொழிக்காஞ்சி, எளிய பத்து 8

9. . . . . எல்லில்
பிறன்கடை நின்று ஒழுக்வானும் - திரிகடுகம் 19

10. நிறை மாண்பு இல் பெண்டிரை நீக்கல் இனிதே
- இனியவை நாற்பது 10

11. எல்லில் பிறன்கடை நின்று ஒழுகுவானும் - திரிகடுகம் - 19.

பிறர் மனை நயவாதனுக்கு நன்மைகள் :

1. . . . . பிறன் தாரம்
நம்பற்க நாண் உடையார்
- நாலடியார் - பிறர் மனை நயவாமை - 1

2. பிறன்மனை நோக்காப் பீடுஇனிது - இனியவை நாற்பது 15.

3. . . . . தோழர் இல் துஞ்சார் - சிறு பஞ்சமூலம் - 36

4. . . . . பிறர் இல் செல்லாரே - மேலது - 50

5. . . . . இல்லார்
அறிவு இல்லார்க் காப்பு அடும்பின் - சிறு பஞ்சமூலம் - 38

6. . . . . பெண் விழைந்து பின் செலினும், தன்
செலவில் குன்றாமை - திரிகடுகம் - 29

பிறனில் விழைதல் எனும் சமூகக் குற்றத்தில் சமபங்கு உடைய பெண்ணையும் முன் நிறுத்திப் பேசும் பகுதிகள் திருக்குறள், நாலடியார் நீங்கலாக ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அழுத்தமாக இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு :

பெண் பிறர் மனை நயத்தல் :

இல்லில் மறைவாகக் கற்புக் கெடும்படி ஒழுகும் பெண்

1. கூற்றமே
இல்இருந்து தீங்கு ஒழுகுவாள் - நான்மணிக்கடிகை - 82

2. கணவன் காவல் செயினும் தான் விரும்பிய
படியே பிறரோடு மருவும் பெண்
. . . . காப்பினும்
பொட்டாங்கு ஒழுகும் பிணையிலி - மேலது - 84

3. கணவனை வஞ்சித்து ஒழுகல்
வணர்ஒலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா
- இன்னா நாற்பது - 14

4. கற்பழிந்த மனைவியரை நீக்குதல் இனிது
நிறை மாண்புஇல் பெண்டிரை நீக்கல் இனிதே
- இனியவை நாற்பது - 14

5. கணவனோடு வாழ்ந்து பெற்ற மகனால்
தன் அமையா ஒழுக்கம் மறைத்து வாழுபவள்
அமர் விலங்கி ஆற்ற அறியவும் பட்டார்
எமர் மேலை இன்னரால் யார்க் குரைத்தும்
தமர் மறையாத் தாய்வாழு மாறு - பழமொழி நானூறு - 322

6. இல்லிருந்து எல்லை கடந்தவள்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் - திரிகடுகம் - 50.

7. பெண் ஆணை விரும்புதல்
. . . . வார்குழலார் நச்சினும்
- சிறு பஞ்சமூலம் - 17

8. பெண் ஆணை விழைதல்
பெண் விழைந்து பின் செலினும்
தன் செலவின் குன்றாமை - திரிகடுகம் - 29

9. தீப்பெண்ணின் தொழில்
கள்ளுண்டல் காணில் கணவற் பிரிந்துறைதல்
வெண்கிலளாய்ப் பிறர் இல்சேறல் - உள்ளி
பிறர் கருமம் ஆராய்தல், தீப்பெண் கிளைமை
திறவது தீப்பெண் தொழில்
- சிறு பஞ்ச மூலம் - 23.

இச்சான்றுகள் யாவும் சங்க காலத்தைத் தொடர்ந்த சங்கம் மருவிய காலத்தில் பிறனில் விழைதல் வெகுவாகப் பேசப் பட்டிருத்தலைத் தெளிவாக்குகின்றன.

* * * * * *

அறநோக்கில் திணை மாலை நூற்றைம்பது

முனைவர் **பழ. முத்தப்பன்** எம்.ஏ., பிஎச்.டி.,
முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி
புதுக்கோட்டை மாவட்டம்

"சங்ககாலம் களப்பிரர் இடையீட்டினாலும் பல்லவர் ஆட்சியினாலும் வீழ்ச்சியுற்றது. அதனால் திணை இலக்கிய வளர்ச்சி முற்றிலும் தடைப்பட்டது. ஆயினும் மரபு அடிப்படையில் திணையிலக்கியம் பெற்ற வளர்ச்சியைப் பதினெண் கணக்கில் காணப்படும் அகம், புறம் பற்றிய நூல்களால் அறியலாம்"[1] என்பர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறம் பற்றியன. ஆறு நூல்கள் அகம் பற்றியன. ஒரு நூல் புறம் பற்றியது. அகம் பற்றிய ஆறு நூல்களில் ஒன்று திணைமாலை நூற்றைம்பது. அகத்திணை ஐந்திற்கும் முப்பது வெண்பாக்களாக அமைத்துக் கணிமேதாவியார் பாடியது இந்நூல். இப்பொழுது கிடைக்கப் பெற்றிருக்கும் பதிப்புகளில் குறிஞ்சி, நெய்தல், முல்லை என்ற மூன்று திணைக்கும் உரிய பகுதிகளில் ஒவ்வொரு பாடல்கள் கூடுதலாக அமைந்து 153 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. நூலின் இறுதியில் நூற் பாயிர வெண்பா ஒன்றும் அமைந்துள்ளது.

கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் அறக் கருத்துக்களை வலியுறுத்துகின்றன. அவற்றோடு அகத்துறையைச் சார்ந்த இன்பியல் பாடல்களைக் கொண்ட ஆறு நூல்களைக் கீழ்க்கணக்கில் சேர்த்திருப்பது ஆய்வுக்குரியதே. ஏதேனும் ஒற்றுமை இல்லாமல் பண்டைத்தமிழ் அறிஞர்கள் அவற்றை ஒருசேரத் தொகுத்திருக்க மாட்டார்கள். ஆறு நூல்களிலும் நம்பியகப் பொருள் உள்ளிட்ட இலக்கண நூல்கள் குறிப்பிடுவது போல் களவியல் - கற்பியல் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெறவில்லை. திணை, திணையாக - அவற்றிற்குரிய கருப் பொருள்களைத் தனித்தனியாகக் கூறுவனவாகவே பாடல்கள் அமைந்துள்ளன. அகப்பொருள் கோவை உள்ளிட்ட இலக்கியங்களைப் போலல்லாமல் சங்க இலக்கிய மரபில் தனித்தனிக் காட்சிகளையே தருகின்றன. அவ்வாறு தருகின்ற பொழுது, அகப்பொருட்காட்சிகளை வருணனை அமைப்போடு மட்டும் காட்டாது அவற்றில் மானிடச் சமுதாயம் அறிந்து நடக்கக் கூடிய அகநெறி அறத்தையும் சுட்டுகின்றன.

இத்தகு நூல்களில் திணைமாலை நூற்றைம்பது காட்டும் அறக் கருத்துக்களைச் சுட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். அதிலும் களவியல் -

கற்பியல் என்ற இரு பிரிவுகளைக் கொண்ட அக இலக்கணத்தில் களவு நோக்கிலும் கற்பியலை வலியுறுத்துகிற கருத்துக்களைச் சுட்டிக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொதுவாக அகஇலக்கிய ஆறு நூல்களில் கார்நாற்பது கார்கால வருணனையையும், கைந்நிலை பொதுவான கருத்துக்களையும் கூறிட - எஞ்சிய நான்கு நூல்களும் அறக் கருத்துக்களோடு கூடிய அதிலும் வதுவையை வற்புறுத்தும் கருத்துக்களையே அதிகமாகக் கூறுகின்றன.

நூல்களில் காணப்பெறும் அகநெறி அறக்கருத்துக்களைத் தொகுத்தால் அதுவே நீண்ட கட்டுரையாக அமைந்திடும் என்பதால் சில எடுத்துக்காட்டுகள் காட்டப் பெறுகின்றன.

“ சுனைவாய்ச் சிறுநீரை எய்யாது என்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டி - கலைமான் தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி ” (ஐந்திணை ஐம்பது - 38)

என்பது பெண்மான் முழுமையும் உண்ண - கலைமான் கிடைத்த சிறுநீரைத் தான் உண்ணுவது போல் பாவனை காட்டும் பாடலாகும். இதன்மூலம் பெண்மையைப் பாராட்ட வேண்டிய ஆண் சமுதாயக் கடமை சுட்டப் பெறுகிறது.

“ நாச்சியார்க்கு ஈதலும் நண்ணார்த் தெறுதலும்
தற்செய்வான் சென்றார் ” (கார்நாற்பது - 7)

என்பது தலைமகனின் வாழ்வியல் கோட்பாட்டில் அமைய வேண்டிய ஈகையையும் வீரத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

“ சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி
வலியாகி பின்னும் பயக்கும் ” (ஐந்திணை எழுபது - 4)

என்ற பகுதி சான்றவர்களின் நட்பே உயர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

“ மழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்
ஊறறி கௌவை தரும் ” (திணைமொழி ஐம்பது - 7)

இப்பகுதி, களவியல் தலைவனை - கற்பியல் தலைவனாக்கும் முயற்சிக்குரிய பகுதியாகும். பெரும்பாலும் திணை பற்றிய நூல்களில் குறிஞ்சிக்குரிய பகுதிகளும் ஏனைப் பகுதிகளில் சில பாடற்பகுதிகளும் வரைவு வற்புறுத்தலாகவே அமைந்துள்ளன. எனவே காதல் வாழ்க்கை - இல்லற வாழ்க்கையாக அமைய வேண்டும் என்ற அறத்தையே கூறுகின்றன எனலாம்.

"மண்ணரையோடு புறங்கண்ட வொண்டாரான் றெரிதோ
கூட லணைய வரவு " (கைந்நிலை - 12)

இப்பகுதி தலைவனின் வீரம் காதலுக்கு அடிப்படையாகிறது என்பதை அறமாகக் கூறுகிறது. இவ்வாறு தமிழர் தம் பண்பாட்டுச் சிறப்பு விளங்க அகத்துறைக் கீழ்க்கணக்கு நூல்களில் அறக்கருத்துகள் இடம்பெற்று விளங்குகின்றன. கட்டுரைக்கு மையமாக விளங்கும் திணைமாலை நூற்றைம்பதில் ஆசிரியர் கணிமேதாவியார் ஏலாதி என்ற அறநூலையும் யாத்தவர் என்பதால் அவர் அக அறக்கோட்பாடுகளைப் பலவாறு அமைத்துள்ளமை புலனாகின்றது. இத்தகைய எடுத்துக்காட்டுகள் அடிப்படையில் காணும்பொழுது அக இலக்கியங்களை அறநூல்களோடு ஒருசேரத் தொகுக்கப் பெற்றமைக்குரிய காரணம் அவற்றிலும் அக அறநெறிக் கருத்துகள் இடம் பெற்றமையால் தான் எனத் தெரிகிறது.

பெயர்க்காரணம்

திணைமாலை நூற்றைம்பது நூல் நூற்றைம்பது அகத்திணைப் பாடல்களைக் கொண்டு, ஐவகைத் திணைப் பொருளையும் விளக்குவதால் இப்பெயர் பெற்றது என்பது நூற்பெயரில் தெரிகிறது. என்றாலும் நூற்றைம்பது பாடல்களோடு நூல் முடியாமல் நூற்றி ஐம்பத்தி மூன்று பாடல்கள் பதிப்புகளில் காணப்பெறுகின்றன. மேலும் ஏனைய அகத்திணை நூல்கள் அகத்திணை ஐம்பது என்றும், ஐந்திணை எழுபது என்றும், திணைமொழி ஐம்பது என்றும், கார் நாற்பது என்றும் பெயர் பெற்றிருக்க, இந்நூல் மட்டும் ஐந்திணை நூற்றைம்பது என்று அமையாமல் "மாலை" என்ற சொல் இடையில் இடம்பெற்று விளங்குகிறது. ஆனால் அதில் கருத்துக்களைப் பார்த்தால் - மாலை போல் தொடர்ச்சியாக ஒரு ஒழுங்குபட அமையவில்லை. அல்லது நான்மணிமாலை, மும்மணிமாலை, இரட்டை மணிமாலை என்பன போன்ற அமைப்பிலும் காணப்படவில்லை. பிற அகத்திணை நூல்களைப் போலவே குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற ஐவகைத் திணைக்கும் உரிய அகப் பொருள்களைக் கொண்ட பாடல்களைப் பெற்றுள்ளது. ஆதலால் 3 பாடல்களைக் கூடுதலாகவும், மாலை போன்ற அமைப்பும் இல்லாமலும் உள்ள இந்நூல் திணைமாலை நூற்றைம்பது என்று எவ்வாறு பெயர் பெற்றது? என்பது ஆய்வுக்குரியதாகவே உள்ளது. கணிமேதாவியார் பாடிய 150 பாடல்களுக்கு மேலாக - மூன்று பாடல்கள் இடைச் செருகலாக நூல் தொகுக்கப் பெற்ற காலத்தில் சேர்க்கப் பெற்றிருக்க வேண்டும். தனித்தனி அகக்கருத்துக்களைக் (கதம்பமாலை போன்ற) கொண்ட பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப்பட்டதால் மாலை என்ற சொல் இணைக்கப் பெற்றிருக்க வேண்டும் எனக்கொண்டு பெயர்க்காரண அமைதி கொள்ளலாம்.

நூல் தோன்றக் காரணம்

இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்.[2] இந்நூல் தோன்றுவதற்குரிய காரணத்தை நூலின் இறுதியில் தனியாகக் காணப் பெறுகின்ற வெண்பா ஒன்று கூறுகின்றது. அவ்வெண்பாவை நூலின் உரையாசிரியர்கள் அனைவரும் பாயிரம் என்றே குறிப்பர்.[3] அவ்வெண்பாவில் அகப் பொருளாகிய களவியற் போக்கினை வெறுத்தவர்களின் வெறுப்பினை விலகும்படியாக இந்நூல் எழுதப் பெற்றது என்று கூறப்பெற்றுள்ளது.

> " முனிந்தார் முனிவொழிய செய்யுட்கண் முத்துக்
> கனிந்தார் களவியற் கொள்கையை "

என்பது பாயிர வெண்பாவின் முதற்பகுதியாகும். நூல் தொகுக்கப்பெற்ற காலத்தில் பாடிச் சேர்க்கப் பெற்ற இவ்வெண்பாவின் மூலம் சமண மதத்தில் வாழ்ந்த ஒருவர் - தன் சமயத்தாரால் ஏற்றுக் கொள்ள இயலாத காமப் பகுதியை - திருத்தக்க தேவரைப்போல - தன் புலமையை வெளிப்படுத்த இந்நூலைப் பாடியிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. மேலும் சமய சமயத்தின் இயல்பான அறநூல் பாடுவதற்குரிய நிலையில் இவ்வாசிரியர் ஏலாதி என்ற அறநூலையும் பாடி - தன் புலமையைப் புலப்படுத்த இவ் அக இலக்கியத்தையும் அறக்கொள்கையோடு பாடியுள்ளார் எனக்கொள்ளலாம்.

கருத்துச்சிறப்பு

நூலின் மையப்பொருள் அகத்திணை ஒழுக்கத்தைக் கூறுவது என்றாலும், பெரும்பாலும் தமிழர் தம் பண்பாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே பாடற் பொருள்கள் அமைந்துள்ளன. கற்பனைகள் அல்லது வருணனைகள் அதிகம் காணப் படவில்லை. நூலின் அமைப்பு வெண்பா அமைப்பு என்பதால் - கற்பனை அல்லது வருணனைக்கு அதிக இடம் கிடைக்காது என்றாலும், கணிமேதாவியார் அகக் கருத்துக்களைக் கூறுவதற்கே முக்கியத்துவம் அளித்துள்ளார். அதிலும் வதுவை மேற்கொண்டு இல்லறத்தில் திகழ வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறார்.

நூலில் அமைந்த முதல் திணை குறிஞ்சித்திணை. இலக்கண நெறிப்படி புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இதன் ஒழுக்கமாகும். நூலில் புணர்ச்சி வேட்கை அதிகம் இடம்பெறாது, தலைவி இற்செறிக்கப் பெற்றமையும், தலைவன் இரவுக்குறிக்குத் தடுக்கப் பெற்றமையும், தோழி அறத்தொடு நிற்றமையும் பாடு பொருளாகப் பாடல்களில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் புணர்தல் நிமித்தத்திற்குரிய செய்திகளாம். எனவே

தலைவன் - தலைவி வதுவையை மேற்கொண்டு - இல்வாழ்க்கையைத் தொடர - அகநெறியைக் காட்டுவதாகவே பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

“ என்னாங் கொல் ஈடில் இளவேங்கை நாருரைப்பப்
------- ------- -------
மருவியா மாலை மலைநாடன் கேண்மை
இருவியா ஏனல் இனி ” (18)

என்பது பகற்குறி வந்த தலைவனுக்குத் தோழி தலைவி இற்செறிக்கப் பெற்றதைக் கூறி வரைவு கடாய பொருளைக் கொண்டதாகும்.

“ நாமவேற் கண்ணாள் நடுநடுப்ப வாரலோ
ஏமவேல் ஏந்தி யிரா ” (25)

என்பது குறியிடம் வாரல் என்று தலைவனைத் தடுத்தது.

“ காடா அ மால் யானை கடிந்தானை அல்லால்
தொடா அ வால் என் தோழி தோள் ” (14)

என்பது தோழி அறத்தொடு நின்றது. இவை போன்ற கருத்தமைந்த பாடல்கள் குறிஞ்சித்திணையில் காணப் பெறுகின்றன. இவ்வாறே நெய்தல் திணைப் பாடல்களில் இரங்கலுக்குரிய நிமித்தமாகிய வதுவையை எதிர்பார்ப்பதே அதிகம் காணப்பெறுகிறது.

“ சுலா அகற்றி கங்குல் நீ வாரல் பகல்வரின்மாக் கவ்வையாம்
மங்குல் நீர் வெண்திரையின் மாட்டு ” (35)

இப்பகுதிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பாலைத்திணையில் பெரும்பாலும் பருவம் கண்டு, தலைவன் திரும்பி வந்துவிடுவான் என்பதைத் தோழி வற்புறுத்திக் கூறி - வதுவையை எதிர்பார்க்கும் பாடல்களே மிகுதி. அடுத்து இத்திணையில் மிகுதியாகக் காணப்படுவது உடன்போக்கு நிகழ்ச்சிகளே.

“ ஒத்த தகையினால் எம் சீறூர்த் தங்கினீர் ஆய்நாளை
வகையினி ராய்ச் சேறல் வனப்பு ” (69)

இது உடன்போக்கில் கண்டோர் கூற்று.

முல்லைத்திணையில் பாடல்கள் ஆற்றி இருத்தல் என்ற நிலையில் பிரிந்து சென்ற தலைவன், குறித்த நாளில் வருகை தந்து வதுவை செய்யும் நல் திறத்தைத் தலைவி எதிர்பார்த்து ஆற்றியிருப்பதையே குறிப்பிடுகின்றன.

“ வாள் இழந்தகண் தோள் வனப்பிழந்த மெல்விரலும்
நாள் இழந்த எண்மிக்கு நைந்து ” (99)

இப்பகுதி தலைவி தலைவன் எதிர்பார்த்து ஒளிஇழந்த கண்ணையும், வனப்பு இழந்த தோளையும் நாளை எண்ணி எண்ணித் தேய்ந்த விரலையும் கொண்டு ஆற்றியிருப்பதைக் கூறுவதாகும்.

இறுதித் திணையான் மருதத் திணையில் பெரும்பாலும் பாணரை மறுத்த - அதாவது பரத்தையர் ஒழுக்கை வெறுத்த பாடல்களே அமைந்துள்ளன.

" வேறிய மங்கையரின் ஆடுமோ மாக்கோல் யாழ்ப்பாண் மகனே!
எங்கையரின் ஆடலாம் இன்று "

இது பரத்தையருடன் ஆடுவ போல் என் மகனோடு ஆட வரும்படித் தலைவனுக்காக வாயில் வேண்டாதே என்று கூறுவதாக அமைந்த பாடலாகும். இவ்வாறு ஐந்து திணைகளிலும் திருமணம் கொண்டு வாழ வேண்டும் என்ற கருத்தையே பலவித நிலையில் பாடல்கள் கூறுவதை உணர முடிகிறது. மேலும் காம ஒழுக்கிலும் பண்பாட்டு நெறிகள் உண்டு என்பதை ஆங்காங்கு கணிமேதாவியார் சுட்டிச் செல்கிறார்.

" நண்ணிநீர் செல்மின் நமர் அவர் ஆபவேல்
எண்ணிய எண்ணம் எளிதரோ - எண்ணிய
வெஞ்சுடர் அண்ணானை யான்கண்டேன் கண்டாளாம்
தன்சுடர் அன்னாளைத் தான் " (89)

இப்பாடல் பாலைத்திணைப்பாடல். செவிலிக்குக் கண்டோர் கூறிய பாடல். " பொருந்தி நீர் சென்மின். அவரும் நமக்குச் சுற்றத்தார் ஆவார்கள். நீர் அவர்களைச் சென்றெய்த வேண்டும் என்று எண்ணினால் எண்ணம் எளிதாகும். அண்மையில் தான் செல்கிறார்கள். நீர் கருதிய வெஞ்சுடற் போன்ற தலைவனை நான் கண்டேன். நீர் கூறிய திங்களைப் போன்ற முகத்தாளை என்னுடன் வருகின்ற இவள் கண்டாளாம்" என்பது இப்பாடலின் பொருள். எதிர்ப்பட்ட கண்டோராம் இருவரில் ஆடவன் பிறன்மனை நோக்காப் பேராண்மையைச் சுட்டுவது இப்பாடலின் சிறப்பாகும்.

" வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர் கொடுப்பின் அல்லது - கோடா
எழிலும் முலையும் இரண்டிற்கும் முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து " (15)

இப்பாடல் நற்றாய் தன் ஐயன்மார்க்கு அறத்தொடு நின்றது தலைவனால் அனுப்பப் பெற்ற சான்றோரை ஏற்று, மகளைத் திருமணம் செய்து கொடுப்பதல்லது பரிசப்பொருளை எதிர்பார்ப்பது நன்றன்று என்று பொருள்ளக்கொண்டது.

" இம்மையே செய்ததை இம்மையே ஆம் போலும்
உம்மையே ஆமென்பார் ஓரார்காண் - நம்மை
எளியர் என நலிந்த ஈர்ங்குழலார் ஒடி
தெளியச் சுடப்பட்ட வாறு " (123)

இப்பாடல் தலைமகள் தோழிக்குக் கூறிய பாடல். " இப்பிறப்பில் செய்த வினை இப்பிறப்பிலே விளையும் போலும் - மறுபிறப்பில் விளையும் என்பர் அறியாதார். தலைவனைப் பிரிந்திருந்த நேரத்தில் நம்மை மெலிவித்த புல்லாங்குழல் துவாரத்திற்காகச் சுடப்பட்டதைப் பாராய் " என்பது இப்பாடலின் பொருள். குழலுக்குத் துவாரம் இட்டது - சுடப்பட்டதாகக் கொண்டு சமயக் கருத்து - அதாவது வினைவிளைவு வலியுறுத்தப் பெறுகிறது. ஆயின் சமணக்கருத்து ஊழ் வலிது என்பது. இங்கு "உம்மை ஆம் என்பார் ஓரார்காண் " என்று கூறியிருப்பது ஆய்வுக்குரியதாகும். சமண சமயத்தைச் சேர்ந்த கணிமேதாவியார் ஊழ்வினைக் கருத்தை அறியாதார் கருத்தாகக் கூறுவது வியப்பேயாகும்.

இதுபோன்று நூற்றிநாற்பதாவது பாடலில்,
" மண்ணார் குலைவாழை உள் தொடுத்தேன் " என்ற தொடர் காணப்பெறுவதும் ஆய்வுக்குரியதாக அமைகிறது. வாழை மரத்தில் தேன் அடை கட்டப் பெற்றமை மருத நில வருணனையாக அமைந்து - அதிகம் தேன் இல்லாத பூ கொண்ட வாழை மரத்தில் பிற பூக்களின் தேன் சேகரிக்கப் பெற்றுள்ளது என்பது ஆய்வுக்குரியதாக அமைகிறது.

இவ்வாறு திணைமாலை நூற்றைம்பதில் கணிமேதாவியார் அக ஒழுக்கிற்கு உரிய திணைப்பாடல்களை அமைத்தாலும் பெரும்பகுதி திருமணம் மேற்கொண்டு வாழ வேண்டிய இல்லற நெறியை வற்புறுத்தும் கருத்தையே மையமாகக் கொண்டு பாடியுள்ளார் என்பதை உணரலாம்.

அடிக்குறிப்புகள்

1. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப - 174.
2. ஜெ. ஸ்ரீசந்திரன் தமிழ் இலக்கிய வரலாறு
   வர்த்தமானன் பதிப்பகம், ப - 86.
3. அ: நடராசப்பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்பு, கழகப்பதிப்பு, முகவுரை

* * * * *

அறத்தமிழ்

முனைவர் **எல். இராமமூர்த்தி**
விரிவுரையாளர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி - 605 001.

உலக மொழிகளில் நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தைப் பெற்ற மொழிகளுள் தமிழும் ஒன்று. இத்தகைய இலக்கியப் பாரம்பரியத்தைப் பெற்ற ஏனைய மொழிகள் எல்லாம் வழக்கிழந்து விட , இன்றளவும் சீரிளமைப் பொழிவோடு செயல்பட்டு வருவதும் தமிழ்மொழி தான். மொழிகளின் பயன்பாட்டு இறுக்கமும், புனிதம் போற்றலும் அவற்றை வழக்கிழக்கச் செய்யும் என்பது வடமொழி காட்டும் உண்மையாகும். ஆனால் இரண்டாயிரம் ஆண்டு இடைவிடாத இலக்கியப் பாரம்பரியத்தைப் பெற்றிருந்தும், இன்றும் வாழும் மொழியாகத் தமிழ் விளங்குவதற்குக் காரணம், அதன் பயன்பாட்டு நெகிழ்ச்சியும், பயன்பாட்டு வீச்சும் ஆகும். மொழியை இத்தகைய பயன்பாட்டிற்குத் தான் பயன்படுத்த வேண்டும் என்ற இறுக்கம் இல்லாமல் பல்வேறு பயன்பாட்டிலும் புகுத்துவது பயன்பாட்டு நெகிழ்ச்சியாகும். தமிழ்மொழி இலக்கியம் மட்டும் படைக்கப் பயன்படும் என்ற நிலை இல்லாமல், பேச்சு வழக்கையும் பல்வேறு வட்டார சாதி வழக்குகளையும் வெளிப்படுத்தும் நெகிழ்ச்சி உடையது. இத்தகைய பயன்பாட்டு நெகிழ்ச்சி தமிழுக்கு இரட்டை வழக்கு மொழி என்ற புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளது. பயன்பாட்டு வீச்சு என்ற நிலையில் இலக்கியப் பொருண்மையில் தொடங்கி, இன்றைய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியை வெளியிடும் நிலை வரை தமிழின் பயன்பாடு விரிந்துள்ளது. இலக்கியப் பொருண்மையிலும், சங்க இலக்கியச் சமயம் சாராச் சிந்தனை, பக்தி காலச் சமயச்சிந்தனை, விடுதலைச் சிந்தனை, பொதுவுடைமைச் சிந்தனை, இன்றைய மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம் போன்ற பொருண்மைகளை வெளிப்படுத்தும் நிலையில் மொழியின் வீச்சு விரிந்துள்ளது. இத்தகைய புதிய பயன்பாட்டு வீச்சு, தமிழுக்கு இலக்கியத் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், அறிவியல் தமிழ், கணினித்தமிழ், ஆட்சித்தமிழ் என்ற புதிய பரிமாணங்களை வழங்கியுள்ளது. இந்தப் பயன்பாட்டு வீச்சின் புதிய பரிமாணம் தான் அறத்தமிழ் ஆகும்.

தமிழின் இத்தகைய பன்முகப் பரிமாணங்கள், அதன் வெளிப்பாட்டுத் தன்மைகளால் கட்டமைக்கப்படுகின்றன. தமிழின் ஒவ்வொரு பரிமாணமும் ஒவ்வொரு விதமான வெளிப்பாடு எனலாம். இவ்வெளிப்பாடுகள், மொழி பயன்படுத்தப்படும் துறையின் பண்புகளால் கட்டமைக்கப்படுகின்றன. இதை வேறு வகையில் கூறும் பொழுது, மொழி

ஒரு சில மொழிக் கூறுகளைப் பயன்படுத்தி, அது பயன்படுத்தப்படும் துறையின் பண்புகளை வெளியிடுகிறது எனலாம். இத்தகைய துறைப் பொருண்மைகளை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகளின் தொகுதியைத் துறை வழக்கு (Register) என்று மொழியியல் குறிப்பிடும். அறிவியல் தமிழ் என்ற கட்டமைப்பு, அறிவியல் துறையின் பண்புகளான வரையறை ஆய்வு, அறிவியல் நிகழ்வு, கருதுகோள், அறிவியல் உண்மை என்ற பல பண்புகளைக் கொண்டது. இப்பண்புகளை வெளிப்படுத்துமாறு அமைக்கப்படும் இலக்கணக் கூறுகளான ஏவல் வினை, வரலாம், செய்யலாம் என்ற கருதுகோள் வினை அமைப்பு போன்றவற்றால் கட்டமைக்கப் படுகிறது. அதே போல ஆட்சித்தமிழ் என்ற நிலையில் அத்துறையின் பண்புகளான அதிகாரச் சார்பு பணிவுத்தன்மை, நெருக்க உறவின்மை போன்றவற்றைத் தமிழின் வியங்கோள் வினை முற்றும், செயப்பாட்டு வினை வாக்கிய அமைப்பும் வெளிப்படுத்தும் (காண்க இராமமூர்த்தி 1998). இந்த வகையில் சங்க காலம் தொடங்கி ஒவ்வொரு காலத்திலும் தமிழ் மொழியின் வெளிப்பாட்டுத் தன்மைகள் மாறிவந்துள்ளன. இவ்வெளிப்பாட்டுத தன்மைகளால் அமைவுற்ற மொழி மாற்றம் மொழியின் வளர்ச்சி நிலையைச் சுட்டும். தமிழின் இலக்கிய வரலாற்றில் நீதி இலக்கியக் காலகட்டம் ஒரு முக்கியமான காலமாகும். நீதி இலக்கியங்கள் பெரும்பாலும் அறச் சிந்தனைகளையே வலியுறுத்தின. அவ்வறச் சிந்தனைகளை அதன் தன்மைகளை வெளிப்படுத்தும் மொழிக் கூறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் அறச்சிந்தனைகளை வெளிப்படுத்திய நூல்களுள் முதன்மையானவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். இந்நூல்களின் காலத்தைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கி.பி. 600 முதல் 850 வரை என்று குறிப்பிடுவார். கீழ்க்கணக்கில் அடங்கிய பதினெட்டு நூல்களையும், ஒரு தனிப்பாடல் பின்வருமாறு தெரிவிக்கிறது.

நாலடி, நாண்மணி, நானாற்பது ஐந்திணை, முப்
பால் கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவும்
கைந்நிலையும், ஆம் கீழ்க்கணக்கு.

இந்நூல்களின் பொருள் அறம், அகம், புறம் எனப் பிரிக்கப் பட்டுள்ளன. நீதி நூல்கள் என்ற பகுப்பில் திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக் கோவை, ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி என்ற பதினொரு நூல்களும் அடங்கும். இவை அனைத்தும்

அறக்கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன. இவற்றோடு, அகப்பொருள் பற்றி நூல்களும், புறப்பொருள் குறித்த நூல் ஒன்றும் பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கும்.

அறக்கருத்துக்கள் பல பொதுவானதாகவும், சில சமயம் சார்ந்தும் அமையும். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையான அறக்கருத்துக் களைக் கொண்டிருக்கும். சமயம் சாராமல் பொது நிலையில் எல்லாச் சமயத்தவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க அறக்கருத்துக்களும் உண்டு. அவற்றையே திருக்குறள் முன் மொழிகிறது. அறநூல்களில், நாலடியார், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன சமண சமயம் சார்ந்தவர்களாலும் இதர நூல்கள் வைதீக சமயத்தைச் சார்ந்தவர்களாலும், எழுதப்பட்டன என்று அறிஞர்கள் கூறுவர். கீழ்க்கணக்கு நூல்கள் வரலாற்று நிலையில் சங்கப் பாடல்களில் இருந்து பாடுபொருளிலும், பாவகையிலும் வேறுபட்டுள்ளது. சங்கப்பாடல்களில் மிகுதியாகக் காணப்படும் ஊனுண்டல், கள்ளுண்டல், பரத்தை நட்பு ஆகியன கீழ்க்கணக்கு நூல்களில் கடிந்துரைக்கப்படுகின்றன.

வெளிப்பாட்டு நிலையில் கீழ்க்கணக்கு நூல்கள் தமக்கெனத் தனி அமைப்பு உடையனவா? என்றால், அது சங்க இலக்கியங்களில் இருந்து மாறுபட்டுள்ளதைக் காணலாம். சங்க காலத்தில் நால் வகைப்பாக்கள் வழக்கில் இருந்த போதும், நூல் வழக்கில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் என்பனவே பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எல்லாம் வெண்பாவில் உள்ளன. இந்த வெண்பா அறச்சிந்தனைகள் வெளிப்பாட்டு வடிவம் என்று கூறமுடியாது. இது மொழி வளர்ச்சியின் ஒரு காலகட்டத்து நிகழ்ச்சியாகும். பிற்காலப் பாடல்கள் வெண்பாவில் இருப்பதால் அறச்சிந்தனைகளின் வெளிப்பாட்டுக்கே உரிய வடிவம் என்று கூற இயலாது.

கீழ்க்கணக்கு நூல்கள் வெண்பாவில் இருப்பினும், அறச்சிந்தனைகளில் சமயம் சார்ந்த கருத்துக்களால் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அதை இக்கட்டுரை ஆராய்வில்லை. அறக்கருத்துக்களை வெளியிடும் வகையில் அறமொழி கட்டமைக்கப்படலாம் என்று முன்னர் சுட்டப்பட்டது. அந்நிலையில் அற வெளிப்பாட்டிற்கான மொழியைப் பின்வருமாறு பிரிக்கலாம். அவை .

1. அறக்கருத்துக் கூறப்பட்ட முறை
2. அவற்றை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகள் எனலாம்.

அறக்கருத்துக்கள் கூறப்பட்ட முறை என்ற நிலையில், அறம் ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு விதமாக விளக்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறக்கருத்துக்களை ஏழே சீர்களில் குறள் வெண்பாவில் விளக்குகிறது.

சூத்திரம் போன்று இரண்டு அடிகளில் , கருதிய பொருளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. நாலடியார், பொருளைத்தக்க உதாரணம் காட்டிக் கற்போர் உள்ளம் கொள்ளும் வகையில் தெளிவுபட விளக்குகிறது. பழமொழியோ அறக்கருத்துக்களை நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து விளக்கம் கூறுகிறது. இப்பழமொழிகள், வழிவழியாக மக்களின் வாழ்வு அனுபவங்களை வெளிப்படுத்தி வழங்கி வருவதால் பொருள் புலப்பாட்டிற்கு எளிமை சேர்க்கிறது. நான்மணிக்கடிகையில் நான்கு சிறந்த ஒத்த அறக்கருத்துக்களைத் தேர்வு செய்து அவற்றைப் பிணைத்து ஆசிரியர் அமைத்துள்ளார். பழமொழியில், அறக்கருத்துக்களை ஆண், பெண் இருபாலாரையும் விளித்துக் கூறிய நிலை நான்மணிக்கடிகையில் இல்லை. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற நூல்கள் செய்யுள் தோறும் மூன்று, ஐந்து, ஆறு பொருள்களை வைத்து அறக் கருத்துக்களை விளக்குகின்றன. ஆசாரக்கோவை நாள்தோறும் வாழ்க்கையில் பின்பற்றி நடக்கவேண்டிய கடமைகளையும், அகத்தூய்மை, புறத்தூய்மைக் கருத்துக்களையும் தொகுத்துக் கோவையாக விளங்குகிறது. ஏலாதி நூல் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று அறநெறியை விளக்கி உரைக்கிறது. இன்னா நாற்பதும், இனியவை நாற்பதும் முறையே துன்பம் தரும் செயல்கள், இன்பம் தரும் செயல்கள் எனத் தொகுத்தளிக்கின்றன. எனவே அறத்தமிழைக் கட்டமைக்கும் செயலில் அறக்கருத்துக்கள் கூறப்பட்ட முறை மாறுபட்டுள்ளதால், இதன் மொழியும் மாறுபட்டிருக்கும்.

ஆனால் அறக்கருத்துக்களை விளக்கும் முறையில் வேறுபடும் மொழி அமைப்பையே அறமொழி என்று கூற இயலாது. அறக்கருத்துக்களின் மொழி ஏனைய மொழியமைப்பில் இருந்து மாறுபட்டும் அறமொழி என்ற நிலையில் ஒன்றுபட்டும் இருக்க வேண்டும். அறக்கருத்துக்களின் பண்புகளை வெளிப்படுத்தும் வண்ணம் மொழிக்கூறுகள் அமையும் பொழுது, அக்கூறுகள் அறப்பண்பை வெளிப்படுத்தும் நிலையில் ஒன்றாகவும், அதே நேரத்தில் வேறுதுறைப்பண்பிலிருந்து மாறுபட்டும் அமையும். அறநூல்களில் கூறப்பட்ட அறக்கருத்துக்கள் வேறுபட்டிருந்தாலும், அவற்றைக் கூறும் முறை வேறுபட்டிருந்தாலும், அறத்தின் பண்புகள் ஒன்றாக இருக்கும் பொழுது அதனை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகளும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

முன்னர்க் கூறியது போல அறக்கருத்துக்களின் பண்புகளுக்கு ஏற்பவே அறத்தமிழ் அமையும். எனவே அறக்கருத்துக்களின் பண்புகள் முதலில் சுட்டப்பெற வேண்டும். அறப்பண்புகளில் சிலவற்றைப் பின்வருமாறு சுட்டலாம்.

1. அறப்பண்பு என்பது எக்காலத்திற்கும் பொருந்துமாறு அமைதல்.
2. நிலைபெற்ற உண்மைகள் / வாழ்பனுபவங்களை விளக்குதல்
3. விளைவு பற்றி எச்சரித்தல்
4. கருத்தைப் பின்பற்ற அறிவுறுத்தல்

இத்தகைய அறப்பண்புகளை வெளியிடுமாறு அமையும் மொழிக்கூறுகளே அறத்தமிழைக் கட்டமைக்கும். அறக்கருத்தின் மிக முக்கிய பண்பு எக்காலத்திற்கும் பொருந்துமாறு அமைதல் அல்லது எதிர்காலத்திற்கு ஏற்றவாறு அமைதல் ஆகும். மற்றொரு பண்பு சில செயல்களைப் பிறர் மேற்கொள்ள அறிவுறுத்தல்.இவ்விரு பண்புகளை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகளை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழ் மொழியின் இலக்கணக் கூறுகள் சில பண்புகளைப் பிரதிபலிக்கும் ஆற்றல் பெற்றவை. அறநுல்கள் முழுமையும் இத்தகைய கூறுகள் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ்மொழியின் வினை முற்று மூன்று காலங்களைக் காட்டும் உருபுகளை ஏற்கும். அறக்கருத்துக்களும் மூன்று காலங்களுக்குப் பொதுவாக அமையவேண்டும். ஓர் அறக்கருத்தை இறந்த கால வினை முற்றைப் பயன்படுத்திக் கூறும்பொழுது, அது தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஏற்றது அல்லாமல் போகலாம். ஆயினும் தொல்காப்பியம் (சொல் 245)

வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வருஊம் வினைச்சொற்கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடுகிணத்தல்
விரைந்த பொ்ருள என்மனார் புலவர்

விரைவுப்பொருள் குறித்து வருமிடத்து இறந்த காலம், நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பயன்படுத்தப்படும் என்பார். ஆனால் அறக்கருத்துக்கள் முக்காலத்திற்கும் ஏற்றவாறு அமைய வேண்டும் அல்லது காலத்தைக் காட்டாது அமைய வேண்டும். இவ்வாறு காலத்தைக் காட்டாது கூறப்படும் கருத்துக்கள் மூன்று காலத்திற்கும் பொதுவானதாக அமையும். அதே போல 'இதனைச் செய்' 'இதைச் செய்யாதே' என்று கூறும் பொழுது கூற்று நிகழும் காலம் நிகழ் காலமாகிறது. அக்கூற்றின் பொருண்மை எதிர்காலத்தை நோக்கியதாகிறது. இந்நிலையில் அறச்சிந்தனைகள் காலம் சுட்டாது நிற்பினும், எதிர்காலப் பொருண்மையைச் சுட்டி வருவதால் எதிர்காலம் காட்டும் வினை உருபுகள் அமையும். அறக்கருத்துக்களின் காலம் சுட்டாத, அல்லது எதிரிகால விளைவை உணர்த்தும் பண்பைப் பின்வரும் மொழிக் கூறுகள் கட்டமைக்கும்.

அவை.

1. ஏவல், வியங்கோல் வினைகள்
2. தொழிற்பெயர்கள்
3. நிபந்தனை எச்சம்
4. வினையெச்சம்
5. அஃறிணை ஒருமை வினை முற்று
6. எதிர் மறைகள்
7. குறை வினைகள்

அறத்தை வலியுறுத்திக் கூறும் வினைகளாக ஏவலும், வியங்கோளும் காலத்தைச் சுட்டாது. கற்க , நிற்க என்ற வினையமைப்பு முன்னிலையையும், காலம் சுட்டாலும் நிற்கும்.

எள்ளற்க என்றும் எளியர் என்ப (நான்.14.227)

"இரவு எழுக" "இசை தருக" "அறம் செய்க" என வரும் நான்மணிக்கடிகை (15) பாடலை இதற்கு எடுத்துக்காட்டாகச்·சுட்டலாம்.

அறமொழியின் மிக முக்கிய அங்கம் தொழிற் பெயர்கள் ஆகும். வினையோடு தல், கை, மை போன்ற உருபுகளை இணைத்து தொழிற்பெயர்கள் ஆக்கப்படுகின்றன. இந்தத்தொழிற் பெயர்களும் இதன் எதிர்மறைகளும் காலம் காட்டாது

வரு + தல் = = வருதல்
காண் + அல் = = காணல்
செய் + ஆ+ மை= = செய்யாமை

இந்த மொழிக்கூறு அறநூல்களில் பெரிதும் பயன்படுவதைக் காணலாம்.

ஓதலின் சிறந்தன்று , ஒழுக்கம் **உடைமை**
காதலின் சிறந்தன்று, கண் **அஞ்சப்படுதல்**
மேதையின் சிறந்தன்று, கற்றது **மறவாமை**
(முதுமொழி - காஞ்சி 1,2,3)

கல்லார்க்கு இன்னா **ஒழுகலும்**; காழ்க்கொண்ட
இல்லாளைக் கோலால் **புடைத்தலும்** (திரிகடு - 2)

கெடுப்பின் வெகுளி கெடுத்துவிடல் (நான் : 79)

இடர் **தீர்த்தல்**, **எள்ளாமை**, கீழ்இனம் **சேராமை**
(ஏலாதி : 4)

தீண்டா **விடுதல்** அரிது (பழமொழி : 62)

காலத்தைச் சிறப்பாகக் காட்டும் மொழிக்கூறுகளில் அஃறிணை ஒருமை வினைமுற்று ஒன்று. இம்முற்று அமைப்பு நிகழ்காலத்திற்கும், இறந்த காலத்திற்கும் கால உருபுகளை ஏற்று நிற்கும். எதிர்கால அமைப்பில் கால இடைநிலையும், அஃறிணை விகுதியும் இணைந்து அமையும்.

(எ.க) வருகிறது - வந்தது- வரும்

கற்று அறிந்தார் கூறும் கருமம் பொருள் இனிதே

(இனிய :32)

பாற்பட்டார் கொண்டு ஒழுகும் பண்பு (ஏலாதி - 13)

தெளிந்தாள் விரைந்து கெடும் (பழ - 42)

குறைவினைகள் பயன்படும் அடிக்கருத்துக்கள் எக்காலத்திற்கும் ஏற்றவாறு அமைப்பதற்குப் பெரிதும் பயன்படும். எடுத்துக்காட்டாக அரிது, எளிது, தெரியும், புரியும், வேண்டும், போன்றன பால், கால உருபுகள் ஏற்காமல் வரும் பொழுது பொதுவானதாக அமையும் இல் என்ற எதிர்மறையும் மூன்று காலத்திற்கும் பொதுவானதாக அமையும்.

சால் போடு பட்டது இல் (திரி - 66)

நொந்தார் செயக் கிடந்தது இல் (திரி - 67)

பேர்த்து உடம்பு கோடல் அரிது (சிறு பஞ் - 17)

துன்பம் துடைத்தல் அரிது (ஏலாதி - 3)

சாவது எளிது; அரிது சான்றாண்மை (ஏலா - 39)

முகம் போல முன் உரைப்பது இல் (நான் - 45)

இத்தகைய குறைவினைகள் பெரும்பாலும் தொழிற் பெயருடன் இணைந்து வருதலால் காலம் காட்டாத நிலை மேலும் வலுப்பெறுகிறது.

எச்ச வினைகள் காலம் காட்டி நிற்கும் எனினும் அவை முழுவினையோடு வரும் பொழுது பெரும்பாலும் எதிர்காலத்தைக் காட்டுவதாகவே அமையும். இதையே தொல்காப்பியமும் பின்வருமாறு கூறுகிறது.

செய்தெ னெச்சத் திறந்த காலம்

எய்திட வடைத்தே வாராக் காலம் (239)

'நீ உண்டு வருவாய்' என்பதில் 'உண்டு' என்பது இறந்த காலத்து வந்த செய்தென் எச்சம். அது அதற்கு முடிப்பாய் வரும் 'வருவாய்' என்னும் எதிர்காலச் சொல்லோடு மயங்கிற்று என்று உரையாசிரியர்கள் விளக்கம் தருவர். இத்தகைய எச்சப்பயன்பாடு அறக்கருத்துக்களின் எதிர்காலப் பொருண்மையைக் கட்டமைக்க உதவுகின்றது. இவ்வமைப்பு பொதுவாக எதிர்மறை, தொழிற்பெயர் போன்றவற்றோடு அறநூல்களில் வந்துள்ளது.

கயவரைக் கை இகந்து வாழ்தல் இனிதே (இனிய - 29)
வெல்வது வேண்டி, வெகுளாதான் நோன்பு (இனிய - 24)
கெட்டு அறிப கேளிராள் ஆய பயன் (நான் - 3)
எச்சம் இழந்து வாழ்வார் (திரி - 62)
கூலிக்குச் செய்து உண்ணும் ஆறு (பழ - 40)

அதே போல நிபந்தனை எச்சமும், எதிர் கால வினையில் முடியும் பொழுது அறக்கருத்துக்களை விளக்குவதற்குப் பெரிதும் உதவுகின்றது.

இன்னாமை வேண்டின் இரவு எழுக! இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இடைநடுக! (நான் - 15)
உடம்பு ஒழிய வேண்டின் உயர்தவம் (சிறு - 4)
வன்கண் பெருகின் வலிபெருகும் (நான் - 90)
வெல்வது வேண்டின் வெகுளி விடல் (நான் - 15)

எதிர்மறை அமைப்புக்கள் காலம் கடந்த கருத்தைக் கட்டமைக்கப் பெரிதும் உதவும். எடுத்துக்காட்டாகப் பெயரெச்சம் நேர் பொருளில் மூன்று காலத்தில் வரும். ஆனால் எதிர்மறைப் பெயரெச்சம் மூன்று காலங்களையும் குறிக்கும்.

எடு. வந்த பையன் வராத பையன்
வருகின்ற பையன்
வரும் பையன்

அதே போல எதிர் மறைப் பெயர்களும் காலம் காட்டாத அமைப்பைப் பெற்றுள்ளன. இந்த மொழிக்கூறும் அறக்கருத்துக் கட்டமைப்பிற்கு உதவுகிறது.

ஆற்றல் இல்லாதவன் பிடித்த படை இன்னா (இன்னா-7)
பொருந்தா மண் ஆகா தவர் (பழ - 9)
காணார் எனச் செய்யார், மாணாவினை (பழ - 102)
அமையா இடத்து ஓர் அரும்பொருள் வைத்தல்
இமையாது காப்பினும் ஆகா (பழ - 336)
கொல்லன் உடன்படான், கொல்வார் இனம் சேரான்
(ஏலாதி - 42)
உள்ளம் நோய் வேண்டா, உயிர்க்கு (சிறுபஞ் - 60)
அடைந்தார் துயர் கூரா ஆற்றல் இனிதே (இனிய - 31)

அறக்கருத்துக்களை விளக்கும் எதிர்கால வினைகள் பயன்பாடும் இக்கட்டமைப்புக்கு உதவும் ஒரு மொழிக் கூறே ஆகும்.

பண்டிதராய் வாழ்வார் பயின்று (ஏலாதி - 9)
பகை கெட வாழ்வதும் . . . .
நகை கெட வாழ்வதும் நன்று (சிறு பஞ் - 14)
உமிக்குற்று க்கை வருந்துவார் (திரி - 28)
கொற்சேரி - துன்னூசி விற்பவர் இல் (பழ - 50)
கல்லில் பிறக்கும் கதிர் மணி (நான் - 5)

இக்கட்டுரையில், அடிக்கருத்துக்களின் காலம் கடந்து நிற்கும் பண்பு, தமிழ்மொழியின் வினையமைப்புகளால் எவ்வாறு கட்டப்பட்டுள்ளது என்பது சில எடுத்துக்காட்டுக்களுடன் சுட்டிக் காட்டப்பட்டது. இதே போல அறக்கருத்துக்களின் ஒவ்வொரு பண்பையும் கட்டமைக்கும் மொழிக்கூறுகள் கண்டறியப்படலாம். அற இலக்கியங்களில் பயன்படுத்தப்படும்.

முந்தையோர் கண்ட முறை
யாவரும் கண்ட நெறி
மிக்கவர் கண்ட நெறி
நின்ற புகழ் உடையார்
விண்ணகத்தும் இல்

போன்ற நெறிகளும், வினையால் அணையும் பெயர், குறிப்புப் பெயர், வினையடை போன்றவற்றின் பயன்பாடும் அவை அறக்கருத்துக் கட்டமைப்பிற்குப் பயன்படும் பாங்கும் கண்டறியப்பட வேண்டும். இம்மொழிக் கூறுகளின் தொகுதியே அறத்தமிழ் கட்டமைப்பை அறிந்து கொள்ள வேண்டும்.

துணை நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு 1957;
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட்; சென்னை

தொல் காப்பியம் சொல்லதிகாரம் (சேனாவரையின்),
1989, பதி சுந்தரமூர்த்தி, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

L. Ramamoorthy 2000, Modaraization in Tamil with
Special Referance to Administration, PILC, Pondicherry.

* * * * * *

காக்கப்பட வேண்டியவள் பெண்

முனைவர் மு. பழனியப்பன்
தமிழ் விரிவுரையாளர்
மாமன்னர் கல்லூரி தன்னாட்சி
புதுக்கோட்டை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் ஆண்களால் படைக்கப் பெற்றவை. சங்ககாலத்தில் ஏறக்குறைய முப்பத்துமூன்று பெண்பாற்புலவர்கள் இருந்துள்ளனர். அதற்கடுத்த காலமான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காலத்தில் பெண்பாற்புலவர்களே இடம்பெறாமல் இருப்பதைக் காணும்பொழுது, சங்ககாலத்தில் பெண் படைப்பாளர்களுக்கு இருந்த படைப்புரிமை முற்றிலுமாக இக்காலத்தில் பறிக்கப்பெற்றுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

நீதி நூல்கள் காலத்தில் பறிக்கப் பெற்ற இவ்வுரிமையைப் பெண்கள் மீண்டும் பெற நீண்ட நெடுங்காலம் ஆயிற்று. காப்பியகாலம், களப்பிரர்காலம் ஆகிய காலங்களைத்தாண்டி, காரைக்காலம்மையார் இலக்கியங்களைப் படைக்க ஆரம்பித்த பின்னரே இக்குறை நீங்கியது. "பெண்களுக்கான இப்படைப் பிடைவெளி ஏன் ஏற்பட்டது." என்ற கேள்விக்கு உடன் விடை கண்டுவிட இயலாது.

நீதிநூல்கள் காலத்தில், பெண்கள்மீது திணிக்கப்பெற்ற அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள், கடமைகள் முதலானவை அவர்களை இல்லற வட்டத்திலிருந்து வெளிவரவிடவில்லை. அந்தச் சிறுவட்டத்திலிருந்து கொண்டு, தன்கணவனைத், தன் பிள்ளைகளைத், தன் சுற்றத்தாரை மகிழ்விக்க வேண்டிய மகிழ்ச்சிப் பொருளாகப் பெண்கள் வாழவேண்டியவர் களானார்கள். இல்லறத்தை நல்லறமாக நடத்தவேண்டிய பெரும்பணியில் பெண்கள் தங்களை, தங்களின் படைப்புத்திறனை, தங்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்க வேண்டியவர்களாயினர். இச்சூழல் பெண்களின் படைப்பிடைவெளிக் கான ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும்.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்தவகுத்தலும் ஓர் ஆணிற்கான கடமையாகக் கருதப்பட்ட அதேநேரத்தில், பெண் தற்காத்துக், தற்கொண்டான் பேணி, தகைசார்ந்த சொற்காக்க வேண்டியவளாக்கப்பட்டாள். பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழவேண்டியநிலை, நீதிநூல்களின் தாக்கத்தால் பெண்களுக்கு ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது. நீதி நூல்களை இக்கண்ணோட்டத்தில்

ஆராயும்போது, அவைகூறும் பெண்ணைக் கட்டுப்படுத்தும் இல்லற வரையறைகள் எவை? எவை, என்பது தெளிவாகத் தெரியவரும்.

காரியாசான் இயற்றிய சிறுபஞ்சமூலம் கூறும் பெண்ணுக்கான இலக்கணவரையறைகளைப் பெண்ணிய வாசிப்பு அடிப்படையில் மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது. சிறுபஞ்சமூலம் 97 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் ஐந்தைந்து நீதிக்கருத்துக்கள் தெரிவிக்கப்படும் வண்ணம் இந்நூல் படைக்கப் பெற்றுள்ளது. இந்நூலில் இருவகைப்பட்ட பெண்கள் இடம்பெறுகின்றனர். கற்புக்கரசியர், பரத்தையர் என்போர் அவ்விருவகையினர் ஆவர். இவர்களுள் கற்புடைய பெண்களுக்கு அதிக இலக்கணங்களை வகுத்த காரியாசான், பரத்தையர்க்கு எவ்வித இலக்கண நடைமுறைகளையும் வரையறுக்காது நூலைப் படைத்துள்ளார். மேலும் பரத்தையரைச் சென்றடையவேண்டாம் என ஆண்களிடம் வேண்டுகோளிடும் போக்கில் பரத்தையர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. கற்புடைப் பெண்களுக்குக் காட்டப் பெறும் இலக்கணங்கள், பெண்களைக் காக்கவேண்டிய பொருளாகச் சுட்டுகின்றன என்பது இந்நூலைப் பெண்ணிய வாசிப்பில் அணுகும்போது தெரியவருகின்றது.

கற்பெனும் காப்பு

“கற்புடையபெண் அமிர்து”, “விலங்கிழைக்குக் கற்புடைமை” (31), “தக்கது கற்புடையாள் வனப்பு” (91) என கற்புடைமையைப் பெண்களுக்குரிய தலைசிறந்த பண்பாகக் காரியாசான் கருதியுள்ளார். கற்பு என்பதற்கான விளக்கத்தைத் தருவதாகப் பின்வரும்பாடல் அமைந்துள்ளது.

“ மக்கட் பெறுதல், மடனுடைமை, மாதுடைமை,
ஒக்க உடனுறைதல், ஊணமைவு - தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு ஐந்து
தலைமகனைத் தாழ்த்தும் மருந்து” (53)

மக்களைப்பெறுதல், அடக்கமுடைமை, கணவனின் கருத்திற்கு ஏற்ப ஒத்திசைந்து நடத்தல், உணவுபடைத்தல் ஆகிய ஐந்து கடமைகளைத் தவறாமல் ஆற்றும் பெண் கற்புடையவளாகிறாள். சுருங்கச் சொன்னால், உடலாலும், உள்ளத்தாலும் தனக்கென வாழாது, தன் கணவனுக்காக வாழும் பெண்கள் கற்புடைய பெண்களாகக் கருதத்தக்கவர்கள் என்று சிறுபஞ்சமூலம் முடிவுகொள்ளுகின்றது.

சுற்றத்தாரைப்போற்றல், அடக்கமுடைமை, பிற ஆடவரை விரும்பாமை, பெருமையுள்ளம், நாணுடைமை ஆகிய ஐந்தும் கணவனைத் தன்பால் இருக்கச்செய்யும் மனைவிக்கான குணங்களாகும்.

" பேணடக்கம், பேணாப்பெருந்தகை பீடுடைமை
நாணொடுக்கம் என்றைந்தும் நன்இன்றாப் - பூணொடுக்கம்
பொன்வரைக்கோங்கு ஏர்முலைப் பூந்திருவே ஆயினும்
தன்வரைத் தாழ்தல் அரிது." (45)

என்ற இப்பாடல் கூறும் மேற்கண்ட ஐந்து கருத்துக்களும் மண்ணில் பிறந்த பெண்களுக்கு மட்டுமன்றி, விண்ணில் உள்ள திருமகளுக்கும் உரியது எனக்கருதியிருப்பது கற்பெனும் பெருமை எக்குலப் பெண்களுக்கும் பெருமைசேர்ப்பது என்ற எண்ணத்தில் வெளிப்பாடாக உள்ளது. இப்பாடல்களின் மூலம் கற்புடைய பெண்களின் அன்றாடக் கடமைகள் தெளிவாகத் தெரியவருகின்றன.

மக்களைப் பெறுதலே மகத்தான தொழில்

மக்களைப் பெறும் கடமை பெண்ணுக்கான கடமைகளுள் இன்றியமையாததாகப் போற்றப் பெற்றுள்ளது. அக்கடமையின் இயல்பு குறித்துச் சில பாடல்கள் சிறுபஞ்சமூலத்துள் இடம்பெற்றுள்ளன.

" கலங்காமை காத்தல், கருப்பம் சிதைந்தால்
இலங்காமை பேரறத்தால் ஈற்றம் - விலங்காமைக்
கோடல் குழவி மருந்து வெருட்டாமை
நாடின் அறம் பெருமை நாட்டு" (74)

கருவானது அழியாமல் காப்பதும், கருப்பம் சிதைந்தால் அதற்காக அதனையே துறந்துவிடாமையும், எந்த குழந்தையையும் விலக்காது ஏற்றுக்கொள்ளலும், குழந்தை நோயுற்றபோது அதற்கு மருந்து பெண்களின் கடமையென மேற்பாடல் கருதுகின்றது.

கருக்கொள்ளாமை, கருக்கொள்வதால் வரும் துன்பம், குழந்தையைப் பெற்றபின் அதனை ஏற்றுக்கொள்ளாமை, ஏற்றுக் கொண்டால் அதனை வளர்ப்பதால் வரும் துன்பம், வளர்த்துவிட்டாலும் சால்பு குணங்கள் இல்லாமையால் வரும் துயரம் ஆகியனவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு மகப்பேற்றை நாடவேண்டும் என்பதனைப் பின்வரும் பாடல் தெளிவாக்குகின்றது.

" சூலாமை, சூலில் படும் துன்பம் ஈன்றபின்
ஏலாமை ஏற்றால் வளர்ப்பருமை - சால்பவை
வல்லாமை வாய்ப்ப அறிபவர்" - (75)

இவற்றின்மூலம் ஆணுக்கு உடலால் மகிழ்ச்சியை ஏற்படுத்தி, மக்களைப் பெற்றுத்தரும் சாதனம் என்ற நிலையில் பெண் விளங்கவேண்டும். அதுவே,

அவள் பிறந்ததற்கான நற்பயன் என்பதாக ஒரு வரையறைக் கற்பிக்கின்றது சிறுபஞ்சமூலம். ஏனெனில்,

"பூவாதாள் பூப்புறம் கொடுத்தாள் இலிங்கி
ஓவாதாள் கோலம் ஒருபொழுதும் - காவாதாள்
யார்யார் பிறர்மனையார் உள்ளிட்டிவ்வைவரையும்
சாரார் பகைபோல் சலித்து" (42)

என்ற பாடல் கலவிக்குப் பொருந்தாத பெண்களைப் பட்டியலிடுகின்றது. பூப்படையாதவள், பூப்புநின்றவள், துறவி, தன்னை எப்போதும் அழகுபடுத்திக் கொள்ளும் பரத்தையர், பிறரின் மனைவி ஆகிய ஐவரும் மேற்கண்ட பட்டியலில் உள்ளவர்கள் ஆவர். இவர்கள் ஆண்களால் விரும்பப்படாதவர் எனின் குழந்தைப் பேற்றை நல்கக் கூடிய, தூய காமத்திற்கு இடனான பெண்களே போற்றுதற்குரியர் என்பது தெளிவாகின்றது. இதன்மூலம் கலவிக்கு ஆகாத பெண்கள் பழிப்பிற்குரியர் ஆகின்றனர். அப்பழிப்பிற்குக் காரணம் அவர்கள் ஆண்களுக்குப் பயன்பெறாமை என்பதே ஆகும். இதன்மூலம் பெண்கள் வாழ்வது என்பது ஆணின் இன்பத்திற்காக என்ற ஆண்சார்புத்தன்மை சிறுபஞ்ச மூலத்தில் வெளிப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

உறவு எனும் காப்பு

ஒரு பெண் கற்புக்கரசியாக வாழ்ந்தாலும், அவளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அவளின் கணவன், கணவனின் உடன்பிறந்தான், மாமன், மகன், தந்தை ஆகிய ஐவருக்கும் உண்டு. அவர்களின் காவலில், அல்லது மேற்பார்வையின் கீழ் ஓரடிமையாக் மகிழ்ந்து வாழ்க்கை நடத்தவேண்டிய கடன் பெண்ணுக் குரியதாகின்றது.

இவ்விடத்தில் பெண் ஏன் மற்றவரால் காக்கப்படவேண்டிய பொருளாகின்றாள்? என்ற கேள்வி எழுகின்றது. சொத்து காக்கப்பெறலாம். பணம், பொருள் காக்கப்பெற வேண்டும்; ஏன் பெண் காக்கப்பெற வேண்டும்? என்று எண்ணினால் அவளிடம் அவளுக்குத் தேவைப்படாத ஒன்று; ஆனால் ஆண்களுக்குத் தேவையான ஒன்று உள்ளது. அந்த ஒன்றை அவள் காக்கத் திறம்பெற்றவள் அல்லள். அதனால் அதனைப்பிற ஆண்கள் காக்கவேண்டியவர்களாக உள்ளனர் என்பது தெளிவு. மேலும் ஒருபெண்ணை அவளின்தாய் உடன் பிறந்தபெண்கள், மகள், கணவனுடன் உடன்பிறந்த பெண்கள், மாமி முதலானோரால் காக்கமுடியுமா? காக்கக் கூடாதா? என்று கேள்வி எழுப்பினால் பெண்கள் அனைவரும் கற்பைக் காத்துக் கொள்ளத் தகுதியற்றவர்கள் என ஆண்உலகம் கருதியிருப்பது தெரியவரும்.

வாழ்வில் இவ்வளவு தேவைகளையும் முழுமைப்படுத்தி வாழும் பெண், இவ்வளவு காவல்களையும் ஏற்று வாழும் பெண், பின்னாளில் பத்தினி எனப் பாராட்டப் பெறுகிறாள்.

“ பத்தினி சேவகன் பொத்தில் கடுந்தவசி
பொத்தில் பொருள் திறத்துச் செவ்வியான் - பொத்தின்றி
வைத்தாரது வழக்கும் சான்றவர் தம்செம்மை
செத்தால் அறிக சிறந்து” (96)

பத்தினி, சேவகன், தவசி, பொருளை அறிந்த செம்மையுடையவன், நல்லவன் ஆகியோரின் இயல்பு செத்தபின்பு தெரியவரும் என்பது மேற்பாடலின் கருத்து. கற்புடைய பெண் என்ற பெருமை உடையவளுக்குப் பத்தினிப்பட்டம் இறந்தபின் வழாங்கப்படுகின்றது. அவளை வாழும்போது போற்றாத / போற்றவிரும்பாத, சமூகம் அவள் இறந்தபின் பத்தினி எனப்பாராட்டு வதில் - சமூகத்திற்கு வேண்டுமானால் பெருமை இருக்கலாமே தவிர, செத்தவளுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பது கண்கூடு. பெண்ணுக்குச் செத்தபின் பெருமை வந்தாலும், வராவிட்டாலும் அதனால் அவளுக்கு ஆகப்போவது எதுவுமில்லை. இந்நிலையில் பத்தினி என்ற உயர்பட்டத்தினைப் பெறுவதற்கு அனைத்துப் பெண்களையும் ஆற்றும்படுத்தும் போக்கில் நீதி நூல்கள் செய்யப்பெற்றுள்ளன என்பதற்குச் சிறுபஞ்சமூலம் ஒரு சான்றாகின்றது.

தமிழில் பத்தினியர் என உயர்த்தப் பெறும் பெண்கள் அனைவரும் அவர்கள் இறந்தபின்னரே போற்றப் பெற்றுள்ளமை இங்கு எண்ணத்தக்கது. கண்ணகி இறந்தபின்னரே பத்தினியாகக் கருதப்பெற்று உயர்ந்தோரால் ஏற்றம்பெற்றாள் என்பது நீதிநூல்களின் பத்தினி பிம்பநீட்சியாகக் கருதத்தக்கதாகும். பெண்கள் செத்தபின்பு தங்களுக்குத் தரப்பெறும் பத்தினி - பட்டத்திற்காக, வாழும்போது உரிமையிழந்து, உணர்விழந்து, தன்சொந்த விருப்பு வெறுப்பு மறந்து, பிறர்க்காக உழைக்கவேண்டிய கட்டாயத்திற்கு நீதிநூல்கள் வழியாக ஆளாக்கப்பெற்றுள்ளனர் என்பதற்குப் பலசான்றுகள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் உண்டு

தீமை அல்லது காவலில்லாமை

காவலில் வாழும் பெண்கள் போற்றப்படுவதைப்போல, காவலில்லாமல் வாழும் பெண்கள் சிறுபஞ்சமூலத்தில் கீழ்மைப்படுத்தப் பட்டுள்ளனர்.

“ கள்ளுண்டல், காணில்கணவன் பிரிந்துறைதல்
வெள்கிலளாய்ப் பிறர் இல்லேறல் - உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமை
திறமது தீப்பெண்ணின் தொழில்” (25)

கள்ளுண்ணும் பழக்கமுடைய பெண்கள், கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள், வெட்கமின்றிப் பிறர் இல்லத்தில் வாழும் பெண்கள், மற்றவர் செயலை ஆராயும் பெண்கள், தீயவளிடம் நட்பு கொண்ட பெண்கள் ஆகிய ஐவரும் தீத்தொழில் பெண்கள் ஆவர்.

இவ்வைவரும் தீயொழுக்கம் உடையவர் என்பது ஒருபக்கம் இருந்தாலும் இவர்கள் ஆண்களால் காக்கப்பெற்ற பெண்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. ஆண்களால் காவலுக்கு உள்ளாக்கப்பெறும் பெண்கள் மட்டுமே சிறந்தோர் என்பதை நிறுவுவதாகவே இப்பாடல் படைக்கப்பெற்றுள்ளது.

கள்ளுண்ணும் பெண்களையும், தீயோள் நட்புடைய பெண்களையும் தீத்தொழில் புரிவோர் என ஒதுக்குவதில் ஓரளவிற்கு உண்மை இருக்கின்றது. ஆனால் மற்றவர் தொழில் ஆராயும் பெண்களைத் தீத்தொழிலுடையவளாக ஏற்க முடியாது. அப்படி ஏற்றுக் கொண்டால் ஆராயும் உணர்வே பெண்ணுக்குக்கூடாது. யார் எது சொன்னாலும் அப்படியே ஏற்கவேண்டும் என்ற நிலையில் பெண்கள் நின்றுவிட வேண்டிவரும். சிறுபஞ்சமூலம் கூறும் இவ்வடியின்படி தன்னறிவு கொண்டு சிந்துத்துச் செயலாற்றும் இற்றைக்காலப் பெண்கள் அனைவரும் தீமையுடையோர் ஆகின்றனர். ஆகவே இந்நூலின் இவ்வடி ஏற்கத்தக்கதல்ல.

மேலும் இப்பாடலில் கணவனைப் பிரியாது வாழ்தல் வேண்டும் என வற்புறுத்துவதாக ஒரு கட்டளை உள்ளது. கணவன் எவ்வளவு தான் கொடியவனாயினும் அவனுடன் ஒத்து வாழவேண்டும். அவனை நிழல்போலப் பிரியாது செல்லவேண்டும் என்ற மரபே இங்கு போற்றப் பெற்றுள்ளது. இது ஒருபுறமாயினும் அலுவல் அடிப்படையில், உறவு அடிப்படையில் கணவனைப் பிரிவோர் முதலோனோர் தீமைசார்ந்த பெண்டிராகக் கருதத்தக்க நிலையில் இக்கட்டளையும் பெண்களுக்கு எதிராக இருப்பது நோக்கத்தக்கது.

பிறர் இல்லத்தில் இருத்தல் பெண்களுக்குரிய தீப்பழக்கம் என்று இன்னொரு கட்டளை வகுக்கப் பெற்றிருப்பதால் பெண்கள் தன்வீட்டை விட்டு வரவேண்டாதவர்களாக இருக்கவேண்டும் என்று சிறுபஞ்சமூலம் காட்டுவதாகக் கொள்ளலாம். இதன்மூலம் பெண்களை உலகறிவற்றவர்களாக, வெளிப்பழக்கம் அறியாதவர்களாக மாற்ற இந்நூல் முனைந்துள்ளது என்பது தெரியவருகின்றது.

இதனால் சிறுபஞ்சமூலம் பெண்களுக்கு ஒவ்வாத, ஆனால் ஆண்களுக்கு, அவர்களின் தேவைக்கு ஏற்ற குணங்களையுடைய ஒரு பெண்ணை உருவாக்க முயன்றுள்ளது என்பது தெளிவாகின்றது. ஆணின்

நலத்தையே மையமாக வைத்து, அவனின் உடல், உள்ள மகிழ்ச்சிக்குத் தன்னைப் பலியிட்டுக்கொள்வது என்ற பத்தினி பிம்பத்தை இந்நூல் முன்னிறுத்துகிறது. செத்தபின் பெருமை கிடைக்கும் என்ற நிலையில், பெண்களைக் காவலுக்கு உரித்தான ஓர் உயிர்ப்பொருள் என்ற அளவில் மட்டுமே இந்நூல் கண்டுள்ளது. அவளுக்கான ஆராய்ச்சி உரிமை, பேச்சுரிமை, படைப்புரிமை முதலான அனைத்தும் பறிக்கப்பெற்றதோடு மட்டுமில்லாமல் பெண் அவற்றை எக்காலத்திலும் பெற்றிடாவண்ணம் அடக்கப் பெற்றுள்ளமையும் தெரியவருகின்றது. நீதி நூல்களின் இப்பெண்ணடித்தனத்தால் தமிழிலிலக்கியப் பரப்பில் ஒரு படைப்பிடைவெளி உருவாக்கப்பெற்றுவிட்டது என்பது தெளிவு.

" இலக்கியத்தில் இடம்பெறும் பெண்பிம்பங்களையும், ஒரே மாதிரியான திரும்பத்திரும்ப வரும் பெண்மாதிரிகளையும் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பினைத் தருவதாகப் பெண்ணிய வாசிப்பு அமைகின்றது". (It offeers feminist reading of texts, which consider the images and stereo types of women in literature) என எலைன் ஷோ வால்டர் என்கிற பெண்ணியவாதி கருதுகின்றார். அவ்வடிப்படையில் சிறுபஞ்சமூலம் பத்தினி என்ற ஆண்விரும்பும் பெண்பிம்பத்தை வலியுறுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றது. மேலும் இப்பிம்பம் இந்நூலுக்கு முன்பும், பின்பும் தொடரப்பெற்று அதுவே பெண்களின் பெருங்குணமாக ஆக்கப்பெற்றுவிட்டது என்பதும் கருதத்தக்கதாகும்.

* * * * * *

நீதி நூல்கள் : ஓர் அறிவியல் பார்வை

வே. பொன்னழகு
ஆங்கிலத்துறை மாலை நேரம்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி புதுக்கோட்டை மாவட்டம்

1) இன்று நாம் வாழும் உலகம் தோன்றி பலயுகங்களைக் கடந்து விட்டாலும் கூடப் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதன் மட்டுமே ஆறறிவு பெற்றவனாகி இருந்து வந்துள்ளான் என்பதற்கு நமக்குப் பண்டைக்கால் வரலாற்று நிகழ்வுகளும், இலக்கியங்களும் சான்றாக உள்ளன. இந்நிலையில் ஏன் மனிதனுக்கு மட்டும் ஆறறிவு மற்ற உயிரினங்களுக்கு ஐந்தறிவு என்ற ஓர் காரண பூர்வமான கேள்வியைக் கிரேக்க விஞ்ஞானிகள் சாக்ரட்டீஸ், பிதாகோரஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ போன்றவர்கள் சிந்தித்து ஆராய்ந்தார்கள். அந்த உன்னத ஆராய்ச்சியின் விளைவு, படைக்கப்பட்ட ஐந்தறிவு ஜீவனுக்கு ஆறறிவு ஜீவனாகிய மனிதன் அன்பு காட்டி பராமரிக்க வேண்டும் என்ற ஓர் உயரிய கோட்பாடு தெள்ளத் தெளிவாக்கப்பட்டது.

2) இன்றிலையில் நாகரிகம் தோன்றுவதற்கு முன்னால் விலங்குகளை வேட்டையாடித் தின்ற மனிதன், இரத்த தாகம் பிடித்தவனாகவே இருந்து வந்துள்ளான் என்பது விஞ்ஞானி டார்வினின் பரிணாமக் கூற்று. பின்னர் ஓர் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னாள் நாகரிகத்தின் வளர்ச்சியால் படிப்படியாய் தெளிவு பெற்ற மனிதன் கடப்பாரை, ஈட்டி, கோடாரி போன்ற ஆயுதங்களை வைத்து விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பதிலாய் தான் வாழும் பூமியின் மேல் பயன்படுத்தினான். விளைவு விவசாயம் என்ற ஞானம் பிறந்தது. உணவுக்கு தன்னிறைவு கண்ட மனித இனம், கேளிக்கைகளில் ஈடுபட்டு சந்தோஷத்தில் திளைத்தது. இந்நிலையில் தான் இயற்கை அல்லது விதி என்னும் காலன் நீண்ட நாள் வாழும் இயல்புள்ள மனிதனை வெகு சீக்கிரத்தில் மடியச் செய்தான். காரணம் போட்டி, பொறாமை, தவறான உணவு மற்றும் நெறிமுறையற்ற வாழ்க்கையால் ஏற்பட்ட பலவிதமான நோய்கள்.

3) நாகரிக மனிதன் அன்பு, பாசம், நேசம், சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் (Liberty, Fraterrity, Equality) போன்ற இனிய அருங்குணங்களோடு வாழ வேண்டும் என்பதை நாட்கள் செல்லச் செல்ல நன்கு கற்றறிந்த ஞானிகள் கண்டறிந்தனர். இதன் விளைவாய் தோன்றியதே நீதி நூல்கள் எனலாம். நீதி நூல்கள் அந்தந்தக் காலகட்டத்திலே

உலகின் பல்வேறு நாடுகளிலும் எழுதப்பட்டன. பகவத்கீதை மனு நீதி சாஸ்த்திரம், திருக்குறள் போன்றவை இந்தியாவில் படிக்கப்பட்டன. பைபிள், குர்ரான் போன்ற கிறிஸ்துவர், இஸ்லாமியர்களின் புனித நூல்கள் மத்திய கிழக்கு ஆசியாவிலும் பெரும்பங்கு வகித்தன. நீதிநெறிச் சிந்தனைக்கும், சொற்பொழிவுகளும், மிகவும் பரவலாகச் சீன தேசம், மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் டாவோயிசம், ஷிண்டாயிசம், கன்பூசியானினம் என்ற தத்துவ இயக்கங்கள்ால் பரப்பப்பட்டன.

4) நீதி நூல்கள் வரிசையில் இன்று நாம் தமிழகத்தில் அதி வீர ராம பாண்டியன் அருளிய வெற்றி வேற்கை (நறுந்தொகை) சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நன்னெறி, குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதிநெறி விளக்கம் போன்ற நூல்களைப் பெரும்பாலும் நீண்ட நாட்களாகவே படித்தும் இன்புற்றும் வருகின்றோம். இவைகள் மக்கள் அறநெறி நின்று, தீமைகளைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் எனும் பெருநோக்குடன் எழுதப்பெற்றவை. இம்மூன்று நூல்களிலும் காணப்படும் ஒரு சில பாடல்களையும் மேற்கத்திய நாட்டில் பழகிவரும் நீதிக் கருத்துக்களையும் விளக்கும் வண்ணம் இக்கட்டுரை அமைகின்றது.

5) "வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்" என்ற பாடலில் அந்தணர்க்கு அழகு வேதம் ஓதுதலும் அவ்வேத விதிப்படி நடப்பதும் என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இது வேதமுறைப்படி வாழும் அனைத்துச் சமய மக்களுக்கும் பொதுவான ஒன்றாக அமைகின்றது. இதே கருத்தை வலியுறுத்தும் ஜேம்ஸ் ஆலன் என்பவர். மனித வாழ்க்கை என்பது நீதி, சகிப்புத்தன்மை, ஒழுக்கம் மற்றும் அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்று கூறியுள்ளார்.

"உடைமையும் வறுமையும் ஒருவழிநில்லா" (50)

என்ற பாடல் செல்வமும் வறுமையும் ஓரிடத்தில் நிலையாக நிற்காமல், மாரிக் கொண்டே இருக்கும் என்று கூறுகிறது. இதே கருத்தை ஆதரிப்பது போல் கூறு ஆலன் கூற்று பணம் என்பது உண்மையான சொத்தல்ல என்றும் வறுமை என்பது நிரந்தரமான கஷ்டமல்ல என்றும் விளக்கியுள்ளது. இரு நாட்டு நீதி இயக்கங்களின் ஒப்புமைக் கோட்பாட்டுக்குச் சான்றாக அமைகிறது.

பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய் போலும்மே (74)

என்ற பாடல் உலகம் முழுதும் பணியாற்றி வரும் வழக்கறிஞர்களைக் குறிக்கின்றது. வழக்கறிஞர்கள் தங்களின் சிறந்த வாதத்திறமையால் தங்கள் வழக்குகளில் வெற்றி கொள்ளும் நிலை அவர்களின் சிறந்த சொல்லாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இப்பாட்டு நீதி காக்கப்படவேண்டும் என்பதை மேலோட்டமாக வலியுறுத்தினாலும் தன் வழக்கிற்காக வாதாடிய

வழக்கறிஞர் தான் எடுத்த வாதத்தில் மிகவும் திறமையானவர் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. உதாரணமாக நம் தேசத்தின் மகாத்மா காந்தியடிகள் பார் அட்லா பட்டம் பெற்ற தந்தை பின் பம்பாய் கோர்ட்டில் வழக்கறிஞராய் பதிவு செய்தார். ஆனால் பின்னால் பொய் கூற முடியாத நிலையை நினைத்து தன் தொழிலையே விட்ட நிலை அனைவரும் நன்கறிவர். காரணம் அவர் இளமையிலே நீதி நேர்மை காக்கப்படவேண்டும் என்ற உயரிய நோக்குடன் வாழ்ந்தவர் இதற்கு மாறாக அவர் எழுதியது "சத்திய சோதனை" என்னும் நூலாகும். ஆகவே ஒரு நாட்டை அல்லது ஒரு வீட்டை ஆளும் ஆண், பெண் இருவருக்கும் ஆளுமைத் திறனுடன் கூடிய சிறந்த சொல்லாற்றலும் பேச்சாற்றலும் மிகவும் அவசியம் என்பது அந்தக் கவி வீரராகவரின் நீதிக் கூற்றாய் நன்கு புலனாகிறது.

6) சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறியானது நாற்பது பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பாடல்கள் அனைத்தும் மனிதர்கள் அனைத்து வகையான செல்வங்களுடன் எவ்வாறு நீதி நெறி பிறழாமல் வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துவனவாக உள்ளன. இத்தகைய காலக் கட்டத்திற்கு சற்று முன்பாக வாழ்ந்தவர்தான் ஆங்கிலேயர்களின் ஆட்சியில் இங்கிலாந்து அரச சபையில் ராஜதந்திரியாக விளங்கிய பிரான்சின் பேகன். இவர் எழுதியுள்ள நீதிக்கட்டுரைகள் உலகம் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன. திருவள்ளுவரைப் போல் பல்வேறு அதிகாரங்களில் தனது கட்டுரைகளை வடித்துள்ளார். இவரின் ஆழ்ந்த கருத்துப்புலமை இக்கால இளைஞர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைகின்றது. குறிப்பாக மந்திரி என்பவர் சிறந்த சிந்தனை வளத்துடன் செயல்பட்டால்தான் ஆட்சியில் தலைமையில் உள்ள மன்னனுக்குச் சிறந்த ஆலோசனைகள் வழங்க இயலும். இவரைப் போலவே நம் நாட்டில் சிறந்து விளங்கிய கௌடில்யர் இத்தாலியில் வாழ்ந்த மாக்சிய வில்லி, ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கரிபால்டி போன்றோரும் சிறந்த பல நீதிக்கருத்துக்களை எழுதியுள்ளனர்.

கடலேயனையம்மாங் கல்வியாலென்று
மடலே றனைய செருக் காழ்த்தி (7)

என்று தொடங்கும் பாடலில் கடல் அளவிற்கு நாம் கல்வி கற்று விட்டோம் என்று எவர் எவரும் செருக்கடயக் கூடாது என்ற கருத்து விளக்கப்படுகிறது. இதற்கு அடுத்து வரும் வரிகளில் மிகட்டுள்ள உருவம் கொண்ட அகத்திய முனிவர் பெருங்கடலையே குடித்து கடலின் செருக்கை அடக்கினார் என்ற செய்தி நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் நாம் அறியும் உண்மை கல்வியின் செருக்கு நம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதே. இரண்டாம் உலகப்போர் இத்தகைய செருக்கினால் ஏற்பட்ட விளைவாகவே

அமைந்தது. அணுகுண்டு தோன்றுவதற்குக் காரணமான $E = MC^2$ என்ற குறியீட்டினைக் கண்டு பிடித்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஜெர்மன் நாட்டில் பிறந்தார். மேலும் ஜெர்மன் தத்துவஞானி நிட்ஷே தகுதியுள்ளவர்கள் மட்டும் தான் ஒரு நாட்டில் வாழத்தகுதியுள்ளவர்கள் (Survival of the fittest) என்ற கருத்தைக் கூறினார். இதனால் ஜெர்மானிய ஆட்சியாளர் அடோல்ப் ஹிட்லர் மிருக பலம் கொண்டு தன்னுடன் இத்தாலி நாட்டின் சர்வாதிகாரி முசோலினியையும் இணைத்துக்கொண்டு ஓர் மாபெரும் யுத்தக்களத்தில் இறங்கினார். இவர்களோடு ஜப்பானும் இணைந்து உலக ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்தன. முடிவு மாபெரும் தோல்வியையும் அழிவையும் இந்த நாடுகள் சந்தித்ததுதான் மிச்சம். குமரகுருபர சுவாமிகள் அருளிய நீதி நெறி விளக்கமும் நறுந்தொகை நன்னெறி போன்றே நீதி வழுவாத் தன்மையை நன்கு வலியுறுத்துகின்றன. இப்படி நல்ல பல நீதி நூல்கள் இயற்றப்பட்டது மனிதகுலம் தன்னை ஆபத்துக்காலத்திலிருந்து காத்துக் கொள்வதற்கே. இறைவன் இயற்கை மற்றும் இறைக்கோட்பாடு போன்றவைகள் எல்லாம் நீதி மற்றும் நெறிமுறைகளை அடிப்படையாக வைத்தே நீண்ட நாட்களாக பின்பற்றப்பட்டுள்ளன என்பது நன்கு மெய்ப்பிக்கப்பட்ட கூற்றாகும். இறை நம்பிக்கை கொண்டவர் அனைவரும் நீதி நியாயத்திற்குத் தலைவணங்குவர்.

8) "நல்லவரின் ஆட்சிதனில் நன்மை நடக்கும்" என்று பாடியவர் திரு. குமரகுருபர சுவாமிகளாவார். ஆட்சியாளர்கள் நல்லவராகவும், தன்னலமற்றவராகவும் இருந்தால் தான் நாட்டில் மக்கள் நலமுடன் வாழ இயலும் என்பதை 400 ஆண்டுகளுக்கு முன்பே நன்கு வலியுறுத்தியுள்ளார். மன்னராட்சி முடிந்து இன்று மக்களாட்சி ஏற்பட்டாலும் இன்னும் உலகின் ஒரு சில பகுதிகளில் மக்கள் மிகுந்த துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். 19ம் நூற்றாண்டின் இறுதியில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டபோது சீனா மற்றும் ரஷ்யாவில் கம்யூனிசம் ஜெர்மனியில் நாசிசம், இத்தாலியில் பாசிசம், ஜப்பானில் மிலிடரினிசம் என்று பல்வேறு இயக்கங்கள் தோன்றின. இதற்குக் காரணம் நாகரிகம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட நாடு பிடிக்கும் பேராசை தனது எல்லையை விரிவாக்கும் விபரிதமான தப்பான செயல்கள் போன்றவையே. இக்காலக் கட்டத்தில் இந்நாடுகளில் ஏசுநாதரின் போதனைகள் அடங்கிய பைபிலும், மற்றய அறிஞர்களின் நீதி நெறிக்கருத்துக்களும் குழிதோண்டி புதைக்கப்பட்டன.

9) பெரும்பாலும் ஆட்சியாளர்கள் பொதுமக்களைக் குழப்புவதற் கென்றே எளிதில் புரியாத பல கடுமையான வார்த்தை ஜாலங்களை உபயோகித்து மக்களை இருளில் மூழ்கடித்தனர். இந்த இருள் ரூசோ, இங்கர்சால், கார்ல்மார்க்ஸ், லெனின் போன்ற சிந்தனையாளர்களின்

சீறிய புரட்சிக் கருத்துக்களால் விரட்டியடிக்கப்பட்டு, மக்கள் அனைவரும் அரசியல் ஞானம் பெற்றனர். விளைவு மக்களால், மக்களுக்காக மக்களாலே ஆளப்படும் ஆட்சி தான் மக்களாட்சி என்ற ஆப்ரகாம் லிங்கனின் ஜனநாயகத்திற்கான தெளிவான விளக்கம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. மறுபடியும் நீதி நெறிக் கருத்துக்கள் புத்துயிர் பெற்றன. இந்தியாவில் காந்தி அடிகள் இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை போன்ற நூல்களை மக்கள் மிகவும் விரும்பிப் படிக்குமாறு செய்தார். இவர் வழியைப் பின்பற்றிய அமெரிக்க கருப்பர் இனத்தலைவர் மார்ட்டின் லூதர்கிங்கும், நிறவெறிக்கு எதிரான தனது போராட்டத்தில் நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிக்குமாறு கருப்பர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அறிவும், நல்லெண்ணமும், மற்றவர்களை மதிக்கும் மனப்பான்மையையும் ஒரு ஜனநாயகத்தின் பெருமையினை நிர்ணயிக்கும் அளவு கோல்களாகும் என்று மின்னெட்ஜ்வில் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

ஒரு நாட்டில் ஆட்சியாளர் எப்படி விளங்க வேண்டும் என்பதைக் கீழே வரும் நீதி நெறி விளக்கப்பாடல் நன்கு விளக்குகின்றது.

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்" (53)

தாம் மேற்கொண்ட செயலை முடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பார். தம் உடம்பின் துயரத்தினையும் பொருட்படுத்தாது கடமையே தன் கண்ணெனக் கொண்டு தன் நாட்டுக்காக உழைப்பார் என இப்பாடல் விளக்குகின்றது.

ஒருவர் பொதுவாகவே நல்லவர் ஆட்சியில் இருந்து நீதி, நேர்மைப்படி நிர்வாகம் செய்ய முயல்வது இன்றைய காலக் கட்டத்தில் இயலாத ஒன்றாக உள்ளது. காரணம் நீதியின் பாதை மிகக் கடுமையான ஒன்றாகும். இவ்வழியில் செல்வதற்குப் பல தடைகளை உடைத்தெறிய வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுகிறது. ஏன் இந்த நிலை என்று நாம் வினவும் பொழுது நீதியைப் போதிப்பது எளிது. ஆனால் போதிப்பவர் கடைப்பிடிப்பது தான் மிகவும் சிரமம் என்ற பதில் நமக்குக் கிடைக்கின்றது. இருப்பினும் மற்றய பணிகளை மேற்கொள்வோர் எப்படியும் பணியாற்றி விடலாம். ஜனநாயகத்தின் ஆணிவேரான மக்களை நிர்வகிக்கும் பொழுது தெளிந்த அறிவுடனும், பொறுமையுடனும், சாதுர்யத் துடனும் மக்களை உள்ளத்தளவில் நேசித்து, ஆற்றும் பணியே சிறந்த மக்கள் தொண்டு என்பது பெரும்பாலான அறிஞர் பெருமக்களின் கூற்று.

ஆனால் அனைத்திற்கும் மேலாய் நீதி மற்றும் ஒழுக்கத்தின் சின்னமாய் ஆசிரியப் பணி விளங்கவேண்டுமென்பதே டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் அறிவுரை.

உலக நீதி நூல் கருத்துக்களை நூல்கள் வாயிலாகப் படித்து அறிவது என்பது பெரும்பாலான மக்களுக்கு இயலாத ஒன்று. இந்நிலையில் மக்கள் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் மூலம் தெரிந்து கொண்டு மக்கள் தங்கள் வாழ்வை நெறிமுறைப்படுத்தி வாழ்வில் எல்லா வளமும் பெற்று வாழ வேண்டும். "சைவமும், தமிழும் தழைத்தினிது ஓங்குக" என்ற நம் சன்மார்க்க சபையில் தலையாய நீதிக் கொள்கை தமிழர்களாகிய நாம் அனைவரும் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற உயரிய நோக்கில் வகுக்கப்பட்டதாகும்.

துணைநூல்கள்

ஜனநாயகத்தின் அறிச்சுவடி - பி.சி. கணேசன்
நீதி நூற்கொத்து - க. ந. சொக்கலிங்கம்
Life Divine - M.S. Choubey.
ஐரோப்பிய தத்துவஇயல் - இராகுல சாங்கிருத்தியாயன்.
Religion and Culture - Dr. Radhakrishnan.

* * * * * *

முதுமொழிக் காஞ்சி :
கருத்தியல் உருவாக்கமும் மாணாக்கத் தன்மைசார் இலக்கியப் படைப்பாக்கமும்

முனைவர் **இரா. அறவேந்தன்**
தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017

மதுரைக் கூடலூர்க் கிழாரால் எழுதபெற்ற "முதுமொழிக் காஞ்சி" எனும் நூலின் படைப்பாக்க நிலைமையை அறிவதும், முதுமொழிக் காஞ்சிக்கான இலக்கண உருவாக்கப் படிநிலையை அறிவதும் இக்கட்டுரையின் நோக்கம்.

புறத்திணை இலக்கண வரலாற்றில் காஞ்சித்திணை குறிப்பிடத்தக்க இடம் வகிக்கின்றது. தனி இலக்கியங்களின் பெயரில் ஒரு பகுதி பெயராக அமைதலும், அடிப்படை இலக்கண வரையறையில் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருத்தலும் காஞ்சித்திணைக்கே உரிய தனிச் சிறப்புகள்.

காஞ்சித்திணை : இரு வேறு மரபுகள்

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இரு நூல்களிலும் காஞ்சித்திணைக்குரிய இலக்கண வரையறைகள் இடம் பெற்றுள்ளன. புறநானூறு, மதுரைக்காஞ்சி, முதுமொழிக்காஞ்சி ஆகிய நூல்களில் காஞ்சித் திணை தொடர்பான சிந்தனைகள் வெவ்வேறு நிலைகளில் அழுத்தமாகப் பதிவாகி உள்ளன. இந்த ஐந்து நூல்களிலும் இடம் பெற்றுள்ள காஞ்சித்திணைத் தொடர்பான கருத்தியல் வளர்ச்சி இருவேறு மரபுகளுக்கு உரியதாக அமைந்துள்ளது.

காஞ்சி தானே பெருந்திணை புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே (76)

என்பது தொல். இடம் பெற்றுள்ள காஞ்சித்திணைக்குரிய இலக்கண வரையறை. இதனூடே சில விதிவிலக்குகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் அதற்கான துறைகளின் இலக்கணம் அளிக்கப் பெற்றுள்ளது. அவ்வகையில் 20 துறைகள் அளிக்கப்பெற்றுள்ளன (77). இந்த இலக்கண வரைமுறை களை வாசித்துப் பொருள் கொள்வதில் மாறுபட்ட கருத்துகள் நிலவுவதை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள் வழி அறிய முடிகின்றது.

மேற்குறிப்பிடப் பெற்ற நூற்பா (76) இளம்பூரணரின் வாசிப்பு முறையில் ஒரு நூற்பாகவே கருதப் பெற்றுள்ளது. நச்சினார்க்கினியரின் வாசிப்பு முறையில் முதல்வரி ஒரு நூற்பாகவும், அடுத்த இரண்டு வரிகள் மற்றொரு நூற்பாகவும் கருதப் பெற்றுள்ளன. " பாங்கருஞ் சிறப்பிற்........நெறிந்தே" எனும் நூற்பா அடிகளை விளக்கும் முறையிலும் இருவரிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

" அது பாங்காதல் அரிய சிறப்பினாற் பல நெறியாயினும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை யுடைத்து, பாங்கருமையாவது, ஒருவற்கு ஒரு துணையாகாமை, நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என"

என்பது இளம். அளித்துள்ள விளக்கம்.

" அறம் பொருள் இன்பமாகிய பொருட்பகுதியானும் அவற்றுப் பகுதியாகிய உயிரும் யாக்கையுஞ் செல்வமும் இளமையும் முதலிய வற்றானும் நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை யுடைத்துக் காஞ்சி என்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது காஞ்சியாயிற்று"

என்பது நச்சர் அளித்துள்ள விளக்கம். இருவர்தம் இவ் விளக்கங்களிலும் சமயச் சார்பு இடம் பெற்றுள்ளது கவனத்திற்குரியதாக அமைகின்றது.

தொல்காப்பியக் காஞ்சித்திணை வகைப்பாடுகளுக்குச் சான்று அளித்து விளக்கும் முறையில் இளம். நச்சர், ஆகியவர் தம் விளக்கங்களில் குறிப்பிடத்தக்க ஒற்றுமையும் நிலவுகின்றது. தொல். காஞ்சித்திணையை விளக்குவதற்குப் புறநானூற்றுப் பாடல்களே பெரிதும் இருவர் தம் விளக்கங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன. போதிய சான்றுகள் கிடைக்கப்பெறாத நிலையில் பிற நூல் பாடல்கள் சான்றாகக் காட்டப் பெற்றுள்ளன. புறம். 195-ஆம் பாடல் முதுகாஞ்சிக்குச் சான்றாக இளம். உரையில் விளக்கப்பெற்று இருக்க, அப்பாடல் பெருங்காஞ்சிக்குரிய சான்றாக நச்சர் உரையில் எடுத்தாளப் பெற்றுள்ளது. புறம். 277-ஆம் பாடல் பூசல் மயக்கத்துக்கு உரிய சான்றாக இளம். உரையில் விளக்கப்பெற்று இருக்க, மாறாகப் பூசல் மயக்கத்திற்குத் தகடூர் யாத்திரையில் இருந்து நச்சர். உரையில் சான்றளிக்கப் பெற்றுள்ளது. இளம். எடுத்தாண்ட புறம். 277 பாடலுக்குரிய திணை, துறை வகைப்பாடு தும்பைத்திணை, உவகைக் கலுழ்ச்சி என்று புறநானூற்றில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இது போன்று தொல், காஞ்சித் திணையை விளக்கும் முறையில் வேறுபாடுகளும் சில ஒற்றுமைகளும் காணப் பெறுவதை அட்டவணை ஒன்றின் வழி அறியலாம். இந்த ஒற்றுமை வேற்றுமைகள் எல்லாம் ஒரு உண்மையை உணர்த்துகின்றன.. தொல். காஞ்சித்தின்ண வகைப்பாட்டைப் புறநானூற்றுப்

பாடல்களுடன் முழுமையாகப் பொருந்தி விளக்க இயலாது என்பதைத் தொல். வாசித்த இலக்கண அறிஞர்கள் அறிந்துள்ளனர் என்பதே அவ்வுண்மை.

இதுவரை விளக்கப் பெற்ற கருத்துக்கள் வழி

தொல். காஞ்சித்திணைக்கான இலக்கண எல்லை வேறு
புறம். பாடல்களில் காணும் காஞ்சித்திணைக்கான
இலக்கண எல்லை வேறு.

எனும் இரு கருத்தியலையும் வருவித்துக் கொள்ளலாம். எனினும் இவ் கருத்தியல்களுக்கிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமை ஒன்று நிலவுகின்றது. இரண்டுமே சமயச் சார்பற்றவை. தொல். காஞ்சித்திணை இலக்கண விளக்க முறையிலும் சரி, புறநானூற்றில் காஞ்சித் திணைக்குரியவையாகக் குறிப்பிடப் பெற்றுள்ள பாடல்களிலும் சரி (அட்டவணை இரண்டு) சமயச் சார்பிற்கு இடம் இல்லை. நிலையாமையைக் குறிப்பிட்டு அறவாழ்விற்குத் தூண்டும் இயல்பே காணப்பெறுகின்றது. ஆனால் இந்த இயல்பில் இருந்து மதுரைக் காஞ்சியும், முதுமொழிக் காஞ்சியும், பு. வெ. மாலையும் வேறுபடுகின்றன. இந்த வேறுபாட்டு நிலையில் முதுமொழி- மு. மொ. காஞ்சி என்பதற்காக இலக்கண உருவாக்கம் அரும்பி இறுகி இலக்கண வரையறையாகி விடுவதை வரும் பகுதி வழி அறியலாம்.

சமயச்சார்பும் முதுமொழிக் காஞ்சி இலக்கண உருவாக்கமும்

மதுரைக் காஞ்சியில் பாண்டிய நெடுஞ்செழியன் பெருமையும் அவன் முன்னோரின் பெருமையும் மதுரை நகரச் சிறப்பும் விரிவாக விளக்கப்பெற்று உள்ளன. இவற்றுக்கிடையே முதுமொழி - முதுமொழிக் காஞ்சி தொடர்பான கருத்தியல் அழுத்தமாகப் பதிவாகி உள்ளது.

மாங்குடி மருதனார் பாண்டிய நெடுஞ்செழியனை

அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ
கொன்னொன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்
கேட்டிசின் வாழி (205 - 7)

என்று விளித்து அறிவுரைகள் இரண்டை முன்வைத்துள்ளார்:
அவை

* கரைபொரு திரங்குங் கணையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டுகழிந் தோரே (235 - 37)

* பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித்துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்

நிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
(போகிய : வியங்கோள், போவாயாக) (759 - 765)

இப்பகுதிகள் " கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் " எனும் தொல்காப்பிய முதுகாஞ்சி தொடர்பான கருத்தியலுடன் ஒப்பிடத் தக்கவை. இங்கு முதுகாஞ்சி சமயச் சார்புத் தன்மை வாய்ந்ததாக மாங்குடி மருதனாரால் விளக்கப்பெற்று இருப்பதும் இதற்கு நச்சினார்க்கினியர் கீழ்வருமாறு விளக்கம் அளித்து இருப்பதும் கவனத்துக்குரியவை. நச்சர் விளக்கம் வருமாறு.

"நல்ல யாகங்கட்குக் கூறிய துறைகள் எல்லாம் முன்னர் முற்ற முடிந்துவிட்ட பழைய ஆணைகளையுடைய நல்ல ஆசிரியர் தாங்கள் பின்பு கூடின கந்தழியாகிய கொள்ளையை அவரிடத்தே பெற்று அனுபவித்த பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போல நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டின்சின் (208) என முன்னே கூட்டுக" "என்றது அந்தணர்க்குக் கூறிய முறையே முன் உள்ள கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங்களை ஆராய்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து வீட்டின்ப மெய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையே சென்று வீட்டின்பத்தைப் பெற்ற குடுமி என்றவாறு".

இவ்வாறு பாண்டிய நெடுஞ்செழியனிடம் நிலையாமையை எடுத்துச் சொல்லி வேள்வி வேட்கத் தூண்டும் மாங்குடி மருதனார். அக்கருத்துகளின் ஊடே அந்தணர்களை" உயர்நிலை யுலகம் இவணின் றெய்தும்" இயல்பினராகவும் குறிப்பிடுகின்றார். மதுரை நகர் வாழ் மக்களின் நிலையை விளக்கும் முறையில் பௌத்தப் பள்ளியை (461 - 67) விளக்குகின்றார். அமண்பள்ளியை (475 - 88) விளக்குகின்றார். இவ்விரு பள்ளிகளுக்கு இடையே அந்தணப் பள்ளியை

" சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
................அந்தணர் பள்ளியும் (468 - 74)

என்று விளக்குகின்றார். மேலும் மூன்றையும் ' குன்று பல குழீஇப் பொலிவன தோன்ற ' (487) என்று ஒரு நிலையில் வைத்து முடித்துள்ளார்.

இதுபோன்று

1) சமணப் பள்ளிகளுக்கு நிகராக அந்தணப் பள்ளியைக் குறிப்பிடுவதும்
2) புத்தர், அருகர் ஆகியோர்க்கு நிகராக அந்தணர் குறிப்பிடப் பெறுவதும்
3) ஏனைய மக்கட் பிரிவினரான அறங்கூறு அவையத்தார் (489 - 92) காவிதி மாக்கள் (493 - 99), வணிகர் (500 - 06) நாற்பெருங் குழுவினர் (507 - 10), பிறவணிகர் (511 - 22). ஆகியோருடன் அந்தணர் விளக்கப் பெறாததும் மாங்குடி மருதனார் குறிப்பிட்ட ஒரு பிரிவு மக்கள் மீது கொண்டிருந்த உயர்நிலை மனப்பாங்கை - வெளிப்படுத்துகின்றன எனலாம்.

மாங்குடி மருதனார் தம் உள்ளக் கிடக்கையை நேரடியாக நூல் முழுவதும் விளக்கவில்லை. அதற்கெனத் தனி ஒரு உத்திமுறையைக் கையாண்டுள்ளார்.

மதுரைக் காஞ்சி போன்றே நகரப் பெயரையும் திணைப்பெயரையும் நூல் பெயராகக் கொண்ட சங்க காலத்தைச் சேர்ந்த மற்றொரு நூல் பட்டினப்பாலை ஆகும். இந்நூலில் பயன்படுத்தப் பெற்றுள்ள உத்திமுறையே மதுரைக் காஞ்சியிலும் இடம்பெற்றுள்ளது. இரு நூல்களிலும் நகரமும் அந்நகரை ஆளும் அரசனும் பெரிதும் போற்றப் பெறுகின்றனர். இதற்குரியதாக்வே நூலின் பெரும்பகுதி அமைந்துள்ளது. நூல் பெயரின் ஒரு பகுதியாக அமையும் திணை தொடர்பான கருத்தியல் சுருக்கமாக ஓரிரு அடிகளுக்குள் விளக்கப்பெற்றுள்ளது. அதாவது வர்ணனைப் பகுதியை மிகுதியாகவும் வலியுறுத்த விழையும் கருத்துப் பகுதியைச் சுருக்கமாகவும் அமைத்து இலக்கியம் படைக்கும் உத்திமுறையைப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகிய இரு நூல்களிலும் காணலாம்.

இதைக் கீழ்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

பட்டினப்பாலை		மதுரைக்காஞ்சி	
காவிரிப்பூம் பட்டிண நகரச் சிறப்பு (1-217) திருமாவளவன் சிறப்பு (221-298)	295 அடிகள்	மன்னர் சிறப்பு (1-234) நகரச் சிறப்பு (238-758) மன்னர் வாழ்த்து (766-783)	683 அடிகள்
பாலைத்திணை-நூலில் வலியுறுத்தப்பெறும் கருத்து (218-220.299-230)	6 அடிகள்	காஞ்சித்திணை (235-237) வலியுறுத்தும் கருத்து (759-765)	10 அடிகள்

இதுவரை விளக்கப்பெற்ற கருத்துக்கள் வழி மாங்குடி மருதனாரின் நோக்கம் பாண்டிய நெடுஞ்செழியனைப் புகழ்வது அன்று. மதுரை நகரை பெருமையுடன் விளக்குவது அன்று. நிலையாமையை வலியுறுத்திச் சொல்லி அறம் செய்யத் தூண்டுவது அன்று. பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போன்று தலையாளங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் அந்தணர்களின் வேள்வி முயற்சிக்கு உதவவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும் இந்த நோக்கத்தை மிக நளினமான முறையில் வெளிப்படுத்த மாங்குடி மருதனார்க்கு அவரின் முதுகாஞ்சி தொடர்பான தொல்காப்பிய இலக்கண அறிவும், பட்டினப்பாலை இலக்கிய உத்திமுறை தொடர்பான புரிதலும் பெரிதும் பயன்பட்டுள்ளன எனலாம்.

இவ்வாறு மாங்குடி மருதனாரால் தொடங்கி வைக்கப்பெற்ற முதுகாஞ்சி தொடர்பான கருத்தியல், பிற்காலத்தில் பு. வெ. மாலையில் முதுமொழிக்காஞ்சிக்குரிய இலக்கண வரையறையாக உருக்கொண்டு விட்டது. முதுமொழிக் காஞ்சி பு.. வெ. மாலையில்

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருண்முடி புணரக் கூறின்று (269)

என்றும்

ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப்
போற்றார் வழங்கிற் பொருள் பொருளாம் - மாற்றிப்
புகலா தொழுகும் புரிவளையார் மென்றோள்
அகலா தளித் தொழுக லன்பு

என்றும் விளக்கப் பெற்றுள்ளது. இக்கருத்துடன் அந்நூலுக்குரிய கடவுள் வாழ்த்து

சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் துறுமதத்
தானை-------------------------------------

கண்ணவனைக்---------------------

நெய்யொத்து நின்றானை நீல மிடற்றானை

என்று அமைந்திருப்பதையும் கருத்தில் கொண்டால், முதுகாஞ்சி - முதுமொழிக்காஞ்சி விளக்கமுறையில் சமயச்சார்புநிலை வேர்விட்டு வளர்ந்திருப்பதை அறிய முடியும். ஆக, காஞ்சித் திணையைக் குறிப்பாக முதுகாஞ்சி - முதுமொழிக்காஞ்சியை விளக்கும் முறையில் இருவேறு மரபுகள் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடலாம்.

அம்மரபுகளைக் கீழ்வருமாறு வரைபடுத்தலாம்.

காஞ்சி

↓

முதுகாஞ்சி - முதுமொழிக்காஞ்சி

↓

சமயச்சார்பற்றது | சமயச்சார்புடையது

1. தொல்காப்பியம் | 1. மதுரைக்கஞ்சி
2. புறநானூறு | 2. பு. வெ. மாலை

பகுதி : இரண்டு

முதுமொழிக்காஞ்சி இலக்கியப் படைப்பாக்க நிலை

சங்கம் மருவிய இலக்கியங்களுள் திணைப் பெயரைக் கொண்ட ஒரே நூல் முதுமொழிக்காஞ்சி. இந்நூல் பத்துப் பகுதியாக அமைந்துள்ளது. சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லைப்பத்து, பொய்ப்பத்து, எளியபத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப்பத்து என்பன அவை. இத்தலைப்புகளுக்கு ஏற்ப அப்பகுதிச் செய்யுள்கள் பத்திலும் தொடரின் ஒரு பகுதியாகத் 'தலைப்பு' அளிக்கப் பெற்றுள்ளது. பத்துப் பகுதிகளின் முதல் செய்யுள்கள் அனைத்தும் ஆர்கலி உலகத்து என்றே தொடங்கப் பெற்றுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் கூடலூர்க் கிழார். இவரே ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர். புறம் 229, குறுந் 166, 167, 214 ஆம் பாடல்களைப் பாடியவர் என்பர். இக்கருத்து உருவாக்கத்திற்குக் கூடலூர்க் கிழாரின் தலைப்பிடும் முறையும், தலைப்புச் சொற்களை உட்செய்யுட்தோறும் எடுத்தாளும் முறையும் ஐங்குறுநூற்றைப் போன்று அமைந்துள்ளது ஒரு காரணமாக அமையலாம். ஆனால், இக்கருத்து மறு ஆய்வுக்கு உரியதாகவே அமைகின்றது.

சங்க இலக்கியக் கருத்தமைவிற்கும் முதுமொழிக் காஞ்சியின் கருத்தமைவிற்கும் இடையே வேறுபாடு நிலவுகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளின் சொல்லாட்சிப் பயன்பாட்டில் இருந்து ஏனைய நூல்களின் சொல்லாட்சிப் பயன்பாடு வேறுபட்டமைகின்றது என்றும், திருக்குறளின் சொல்லாட்சிப் பயன்பாடு சங்க இலக்கியத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகத் திகழ்கின்றது என்றும் ஆதித்தன் குறிப்பிடுவார் (1985). மேலும் திருக்குறள் தவிர்த்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் சொல்லாட்சிப் பயன்பாட்டில் ஒத்தநிலை காணப் பெறுவதாகவும் குறிப்பிடுகின்றார். யாப்பு நிலையிலும் புறம், குறுந், பாடல்களில் இருந்து மு. மொ. கா. வேறுபடுகின்றது.

மு. மொ. கா. இன் முதல் செய்யுள்கள் குறள் வெண் செந்துறை அமைப்பில் அமைந்துள்ளன. ஏனைய செய்யுட்களும் இவ்வமைப்பிற்கு உரியதாகத் திகழ்கின்றன என்பர் பூரணச்சந்திரன்.

இரத்தலின் ஊங்கு இளிவரவு இல்லை (6:9)

இரப்போர்க்கு ஈதலின் எய்துஞ் சிறப்பில்லை (6:10)

என்று தனித்தனியே அமைந்துள்ள செய்யுட்களை

இரத்தலின் ஊங்கு இளிவரவு இல்லை

இரப்போர்க்கு ஈதலின் எய்துஞ் சிறப்பில்லை

என்று ஒரு செய்யுளாக அமைக்க ஏற்ற வகையில் எதுகை, மோனைகள் அமைந்துள்ளன என்பர். இவ்வாறு அமைப்பதால் ஒவ்வொரு பகுதியும் ஐந்து செய்யுள்களை உடையதாகின்றது. இது அறிவுப்பத்து சிறந்தபத்து என்பது போன்று அமைந்துள்ள தலைப்பில் தொகையாக்க முடிவுரைக்கும் முறையுடன் முரண்பட்டுவிடுகின்றது. கூடலூர்க் கிழார் குறள் வெண் செந்துறையில் இயற்றிப் பிற்காலத்தில் செய்யுள்கள் சிதைவுற்றதாகக் கருதவும் வாய்ப்பில்லை. ஒவ்வொரு பத்திலும் சரியாக ஐந்து செய்யுள்கள் சிதைவுறுமா என்ற வினா எழுகின்றது. தற்போதுள்ள இரு செய்யுள்களை ஒரே செய்யுளாக வாசிக்கையில் தலைப்புச்சொல் இரண்டு அடிகளிலும் இடம்பெற்று விடுகின்றது. மேலும் செய்யுளுக்குரிய கருத்து ஒற்றை வரிக்குள்ளேயே முற்றுப் பெறுகின்றதே தவிர 'ஆர்கலி உலகத்து . . . . . . சிறந்தது' என்பது போன்று இருவரிகளில் முடிவுறவில்லை. எனவே தற்போது பதிப்பித்துள்ள முறை கூடலூர்க் கிழாரால் அமைக்கப்பெற்றதாகக் கொள்வதே பொருத்தமாக அமைகின்றது. அதாவது பத்து, பத்துச் செய்யுள்கள் என்ற வரைமுறையை வகுத்துக் கொண்டே அவர் முதுமொழிக் காஞ்சியைப் பாடத்தொடங்கியதாகக் கருத வேண்டி உள்ளது. இந்த வரையறையைக் கட்டி எழுப்ப, நிறைவு செய்ய அவர் திணறுவதையும் தடுமாறுவதையும் முதுமொழிக் காஞ்சிச் செய்யுள்கள் வழி அறியமுடிகின்றது. சான்றாகக் கீழ்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

பெருமை உடையதன் அருமை பழியார்	(3:3)
அருமை உடையதன் பெருமை பழியார்	(3:4)
இன்பம் வேண்டுவோன் துன்பந் தாண்டான்	(10:7)
துன்பம் வேண்டுவோன் இன்பந்தாண்டான்	(10:8)
சிறுமை பொறாதவன் பெருமை வேண்டல் பொய்	(7:7)
பெருமை பொறாதவன் சிறுமை வேண்டல் பொய்	(7:8)
துன்பம் வெய்வோர்க்கு இன்பம் எளிது	(8:5)
இன்பம் வெய்வோர்க்கு துன்பம் எளிது	(8:6)

இவற்றில் முதல் செய்யுளில் சொல்லப்பெற்றுள்ள கருத்தும், பயன்படுத்தப் பெற்றுள்ள சொல்லும் அடுத்த செய்யுளிலும் இடம் பெறுவதைக்

கவனிக்கலாம். இது பொருள் அழுத்தத்திற்காக அமைக்கப்பெற்றது அன்று. திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு முதலான நூல்களில் ஒரு கருத்தே மீண்டும் வலியுறுத்தப்பெறும். எனினும் வலியுறுத்தும் முறைகளால் ஒவ்வொரு செய்யுளும் தனித்துவம் பெற்றுவிடும். அதுபோன்ற நிலைக்குரியதாக முதுமொழிக் காஞ்சியின் மீள்வரும் தன்மை அமையவில்லை. எனவே கூடலூர்க் கிழாரைப் பொறுத்தவரையில், ஐங்குறுநூற்றை மாதிரி வரைபடமாகக் கொண்டு அதை முதுமொழிக் காஞ்சியில் நிறைவு செய்ய, முழுமைப் படுத்த தட்டுத்தடுமாறி நிலைகுலைந்துள்ளார் எனலாம். இதே தடுமாற்றத்தை முதுமொழிக் காஞ்சிக்கான கருத்தியலாக்க நிலையிலும் காணமுடிகின்றது.

முதுமொழிக்காஞ்சியில் உட்தலைப்புகளாக அமையும் சிறந்தது. அறிவு, எளிய என்பவையெல்லாம் நுண்பொருளை உணர்த்தும் கலைச் சொற்கள் ஆகும். இந்த பத்துத் தலைப்புகளைப் பொறுத்தவரையில் மீண்டும் வரும் நிலை காணப்பெறவில்லை. ஆனால் ஒவ்வொரு தலைப்புக்குள்ளும் வெவ்வேறு தலைப்புக்களுக்கு இடையேயும் ஒருவகை கருத்துக்களே ஆங்காங்கு எவ்வித புதுமையும் இன்றிச் செய்யுளாக்கப் பெற்றுள்ளன. சுருங்கச்சொன்னால் கருத்தியல் பஞ்சம் முதுமொழிக் காஞ்சியில் நிலவுவதை அட்டவணை மூன்று வழி அறியலாம். ஒரு கருத்தே வெவ்வேறு அதிகாரங்களில் மீண்டும் மீண்டும் பயின்று வந்துள்ளதற்குச் சான்று சில வருமாறு :

கருத்துக்கள்	பயின்று வந்துள்ள அதிகாரமும் செய்யுளும்
ஈகை	2 : 2, 3 : 9, 4 : 3, 4 : 6, 5 : 4, 5 : 8, 6 : 5, 6 : 9, 6 : 10, 8 : 3, 8 : 9
உயர்வு	7 : 6, 10 : 1, 10 : 2, 10 : 5, 10 : 6
சொல்	1 : 4, 2 : 8, 8 : 4, 9 : 7
அரசு	1 : 9, 3 : 6, 4 : 2, 8 : 2, 10 : 9
நட்பு	2 : 3, 5 : 3, 5 : 5, 9 : 1, 9 : 3, 9 : 5, 9 : 8, 9 : 10
நோய்	1 : 5, 8 : 7, 9 : 4
ஆசை	6 : 7, 7 : 9
சினம்	7 : 2, 9 : 9
ஒழுகுமுறை	1 : 2, 1 : 6, 4 : 1, 4 : 3, 2 : 10, 6 : 2
குலம்	1 : 7, 2 : 1, 2 : 6, 3 : 10, 5 : 9, 3 : 1
தவம்	7 : 10, 10 : 4
மறுமை உலகம்	5 : 10, 8 : 1
மக்கட்பேறு	6 : 1, 6 : 3, 6 : 4
பெண்	5 : 1, 5 : 2, 8 : 8
கல்வி	1 : 1, 1 : 3, 1 : 8, 2 : 4, 5 : 6, 10 : 3

தனிமனித இயல்புகளையும் சமூக இயங்கு நிலையையும் உயர்ந்த இலக்குக்குத்தக பக்குவப்படுத்த விழைவது அற இலக்கியங்களின் நோக்கம். இதனால்தான் கற்பனை சார்ந்த சொல்லாடல்கள், காட்சிப் படிமங்கள் எல்லாம் அறஇலக்கியங்களில் பெரிதும் இடம்பெறுவது இல்லை. இத்தகு சொல்லாடல்களையும் முதுமொழிக் காஞ்சியிலும் காணப்பெறவில்லை. ஆனால் தனிமனித இயல்புகளையும் சமூக இயங்கு நிலையையும் மாற்றத் துடிக்கும் அறிவுசார் சிந்தனை இடம்பெறவில்லை. மாறாக இயல்புநிலையை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வைக்கின்றது. அவ்வகையில் குறிக்கப் பெறும்

"பெருந்தன்மை இல்லார் பெருமிதத்தைப் பழியார் (3 : 2)
சிறுமை பெறாதவன் பெருமை வேண்டல்பொய் (7 : 7)
உணர்வு இலன் ஆதலின் சாக்காடு இல்லை (6 : 6)
வஞ்சனை செய்தலிற் கள்வன் ஆதல் அறிப (2: 7)
முறையில் அரசன் நாட்டில் இருந்து பழியார் (3 : 6)

என்பன எல்லாம் மறு சிந்தனைக்குரியனவாகவே திகழ்கின்றன.

மேலும் கல்வி, வீரம், தவம், வாழ்க்கை முதலானவை தொடர்பான எதிர்நிலைக் கருத்தாக்கங்களும் முன்வைக்கப் பெற்றுள்ளன.

கல்வி தொடர்பாக 6 கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்றுகூடக் கல்வியின் நன்மையை, தேவையைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தும் வகையில் அமையவில்லை. மாறாக ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை (1:1), கற்றலிற் கற்றாரை, வழிபடுதல் சிறந்தன்று (1 : 8) எனும் கருத்துக்கள் வழி வாழ்க்கையில் கல்வி இரண்டாம் நிலைக்குரியதாகத் தள்ளப்பெற்றுள்ளது. இதுபோன்றே வீரத்தின் மிகுதி பேடித்தன்மைக்குரியதாகக் (4 : 2) குறிப்பிடப்பெற்று வீரம் மழுங்கடிக்கப் பெற்றுள்ளது. வலியன் அல்லாதவன் தவம் செய்தல் பொய் (7 : 10) என்று தவத்திற்குரியோர் குறிப்பிடப் பெறுகின்றனர். தவத்தின்வழி துறவு அல்லது மக்கட்கு உதவுதல் என்பது கூடலூர்க்கிழாரின் நோக்கமாக அமைய வில்லை. அவரைப் பொறுத்தவரையில் வாழ்க்கை என்பதே "தாரம் மாணாதது வாழ்க்கை அன்று" (5 : 2) என்பதுதான். அத்தாரம் ஆண் உணர்வுகளை அறிந்து வாழ்பவளாக இருத்தல் வேண்டும். "நீர் அறிந்து ஒழுகாதாள் தாரம் அற்றவள்" (5 : 1) ஆவாள். இந்த ஆண், பெண் வாழ்க்கை மக்கட் பேற்றுக்குரியதாக அமைதல்வேண்டும்" (6 : 1) மேலும் இது தொடர்பாகக் கூடலூர்க்கிழார் முன் வைத்துள்ள அறச்சிந்தனைகள் இரண்டு அவை ;

மக்கட்பேறு வாய்க்கும் கலவியின் நல்ல கலவி வேறில்லை (6 : 3)
மக்கட்பேறு அளிக்காத கலவியை விடத்
தீய்மையான கலவி வேறில்லை. (6 : 4)

இந்த வாழ்நிலைக்குப்பின்னர் மூப்பு வயதில் அவர்கள் மறுபிறப்பை அறிந்திருத்தல் வேண்டும். அவ்வாறு மறுபிறப்பு அறியாதது மூப்பு அன்று (5:10) இந்த வாழ்வில் புகழ் சேர்க்க வேண்டும். அந்தப் புகழை விடப் பெரியதோர் எச்சம் இல்லை. (6:8) புகழ் சேர்வதால் புத்தேள் நாடு எளிதாகும் (8:1) அதாவது மனித வாழ்க்கையில் ஆண், பெண் சேர்ந்து வாழ்தல் வேண்டும். அது குழந்தைப் பேறுக்குரியதாகவே அமைதல் வேண்டும். முதுமை எய்துகையில் மறுமை பற்றி அறிந்திருத்தல் வேண்டும். இதனிடையே புகழ் சேர்க்கும் வாழ்க்கை வாழ்ந்து இறுதியாகப் புத்தேள் நாடு எனும் தேவர் உலகம் - வீடு பேற்றை அடைதல் வேண்டும் என்பதே கூடலூர்க் கிழாரின் நோக்கம். இதனால் தான் கள்உண்ணாமை, புலால் உண்ணாமை, பிறனில் விழையாமை, பரத்தை ஒழுக்கம், சூது, சிற்றின்பம் சேராமை முதலான தம் சமகாலக் கருத்தியல் நிலைகளில் இருந்து வெகுதூரம் விலகி நிற்கின்றார். கல்விக்கும், உழைப்பிற்கும் ஏனையோர் முக்கியத்துவம் அளிக்க இவர் பழியாப்பத்தில் அநீதிகளைக் கண்டு அடங்கிப் போகச் சொல்கின்றார்.

இதுவரை விளக்கப்பெற்ற கருத்துகள் வழி முதுமொழிக்காஞ்சியில் படைப்பாக்க நிலையில் காணலாகும் கூறுகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சொல்லாட்சிப் பயன்பாட்டில் தேக்க நிலை.
2. கருத்தியல் பஞ்சம்.
3. சமகால அநீதிகளை எதிர்க்கா இயல்பு.
4. இல்வாழ்வையும் புத்தேள் நாடு அடைதலையும், மாந்த வாழ்வின் இலக்காக்கல்

கூடலூர்க் கிழாரின் இந்த நிலைப் பாட்டிற்கான காரணங்களாக இரண்டினைக் குறிப்பிடலாம்.

1. படைப்பாக்கத்தில் காணப்பெறும் மாணாக்கத் தன்மை.
2. மதுரைக் காஞ்சியின் வழி நூலாகப் படைத்தல்.

மாணாக்கத் தன்மைசார் படைப்பாக்கம்

முதுமொழிக் காஞ்சியின் அமைப்பு ஒழுங்கைப் பொறுத்த வரையில் எவ்வித குறையும் இல்லை. சொல்லாட்சிகளையும், கருத்துக்களையும், எடுத்தாளும் முறையில் தான் முதிர்ச்சி - இலக்கியப் பக்குவத் தன்மை காணப் பெறவில்லை. அதாவது வடிவ நிலையில் முழுமை பெற்று இலக்கிய ஆக்கநிலையில் முதிர்ச்சி பெறாத ஒரு படைப்பாகத் திகழ்கின்றது. இத்தகு படைப்பாக்கத்தை மாணாக்கத்தன்மை வாய்ந்ததாகக் குறிப்பிடலாம். கற்றல், கற்பித்தல் நிலையில் பயிற்சிக்காக எழுதப் பெறும் படைப்புகள் தான் "முழுமையில் முதிர்ச்சி அற்ற நிலை" எனும் தன்மைக்கு உரியனவாக

அமைந்திருக்கும். இதுபோன்ற பயிற்சி நிலையில் எழுதப் பெற்றதாகவே முதுமொழிக் காஞ்சியைக் கருத வேண்டி உள்ளது. இதே இயல்பை இனிய நாற்பது, இன்னா நாற்பது நூல்களிலும் காணலாம் (விரிவாற்கு: இரா. அறவேந்தன், 2001).

மதுரைக் காஞ்சியின் வழிநூலாக அமைதல்

கூடலூர்க் கிழார் முதுமொழிக் காஞ்சியை எழுதுவதற்கு முன்னர், மூன்று நூல்களில் முதுமொழிக் காஞ்சி தொடர்பான சிந்தனைகள் இடம் பெற்றிருந்தன.

1. தொல்காப்பியம்
2. புறநானூறு
3. மதுரைக்காஞ்சி

இவற்றில் தொல்காப்பியம், புறநானூறு ஆகிய இரு நூல்களிலும் காஞ்சித் திணை தொடர்பான விளக்கத்தில் சமயச் சிந்தனை இடம் பெறவில்லை.

புறநானூற்றில் காஞ்சித்திணைக்குரியனவாகக் குறிப்பிடப் பெற்றுள்ள முப்பது பாடல்களில் வஞ்சினம் மொழிவனவாக மூன்றும் (71, 72, 73) மகட்பாற் காஞ்சிக்குரியனவாகப் பத்தொன்பதும், (336-354) திகழ்கின்றன. ஏனையவற்றில் 6 பாடல்களில் (357, 358, 359, 360, 365, 366) நிலையாமை கூடுதலாகவே வலியுறுத்தப் பெற்று உள்ளது. இவற்றில் வேறு உலகு அடைதல் தொடர்பான சிந்தனை மூன்று பாடல்களில் (357, 358, 359) இடம் பெற்று உள்ளது. இரண்டு பாடல்களில் (360, 366) மரணம் உறுதி எனும் கருத்து முன் வைக்கப் பெற்றுள்ளது.

புறநானூற்றில் பொதுவியல் திணைக்குரியனவாக 73 பாடல்கள் குறிப்பிடப்பெற்று உள்ளன. முதுமொழிக் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி, பெருங்காஞ்சி, ஆனந்த பையுள், தபாத நிலை, முதுபாலை, கையறுநிலை ஆகிய துறைகளுக்கு உரியனவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன (அட்டவணை-4) . இவற்றில் மரணம், நிலையாமை தொடர்பான சிந்தனைகள் எட்டுப் பாடல்களில் (27, 28, 29, 228, 229, 362, 363, 364) இடம் பெற்று உள்ளன. தேவர் உலகம் (228), மேலோர் உலகம் (229), உயர்ந்தோர் நாடு (362) எனும் கருத்தியலும் இடம் பெற்றுள்ளது.

இது போன்று, புறநானூற்றில் காஞ்சித்திணைப் பாடல்களிலும், பொதுவியல் திணைசார் காஞ்சித் துறைப் பாடல்களிலும் மேல் உலகு தொடர்பான கருத்தியல் இடம் பெற்று இருப்பினும், அவ்வுலகோடு குறிப்பிட்ட மக்களை மட்டும் தொடர்பு படுத்தி வரையறுத்துப் பேசும் போக்கு காணப் பெறவில்லை. மாறாக அறவாழ்வுக்குரியோர்-ஈகைப்பண்புக்குரியோர் அவ்வுலகு அடைவர் எனும் கருத்தியலே முன் வைக்கப் பெற்றுள்ளது.

ஆனால், அந்த ஈகைக்குரியோர் அந்தணர் எனக் குறிப்பிட்டு, மனிதனைக் கூறு போடும் இயல்புக்குக் காஞ்சித் திணை ஒரு கருவியாக மதுரைக் காஞ்சியில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

முதுமொழிக் காஞ்சியில் மதுரைக் காஞ்சியில் இடம் பெற்றுள்ளது போன்ற அந்தணர் உயர்கொள்கை இடம் பெறவில்லை: வீடு பேறு தொடர்பான கருத்தியல் வலியுறுத்தப் பெறவில்லை: கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டும் இயல்பு விளக்கப் பெறவில்லை. ஆனால், இவற்றுக்கு ஆதரவான கருத்து உருவாக்கங்கள் தான் முதுமொழிக் காஞ்சியில் இலக்கியமாகக் கட்டமைக்கப் பெற்றுள்ளன. கூடலூர்க் கிழார் மறுமை வாழ்வைச் சுட்டிக்காட்டி மிரட்டி, புத்தேள் நாடு அடையத் தூண்டுவதும் (5:10, 8:1) துறவுக்கு மாறாக இல்வாழ்க்கையே வாழ்க்கை எனக் குறிப்பதும் (5:1, 5:2, 6:1, 6:3, 6:4, 8:8) பிறப்பு அடிப்படையிலான பண்புகளில் அழுத்தமான நம்பிக்கை வைப்பதும் (1:7, 2:1, 2:6, 3:10, 5:9, 3:1) அவர்தம் வைதீக சமயச் சார்பை வெளிப்படுத்துகின்றன. இவற்றுக்கு எதிரானவை சமண, பௌத்த சமயங்கள். அதனால் தான் அச்சமயம் சார் நூல்களில் உணர்வு நிலைகள் எல்லாம் கடும் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப் பெறுகின்றன. அரசன் செயலும் மறு பரிசீலனைக்குட்படுத்தப் பெறுகின்றது. பிறனில் விழைதல், பரத்தை ஒழுக்கம், புலால் உண்ணல், கள் உண்ணல் முதலானவைக் கடுமையாகக் கண்டிக்கப்பெறுகின்றன. இயற்கையான பாலியல் உணர்வையும் தவிர்க்க முடியும் என்ற கருத்தில் துறவு முன் வைக்கப் பெறுகின்றது. கல்வியும், உழைப்பும் உயர்த்தும் என்பதால் அவை வலியுறுத்தப் பெறுகின்றன. இவ் இயல்புகளைத் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு முதலான நூல்களில் காணலாம். ஆனால் இவற்றிலிருந்து மாறுபட்டதாக முதுமொழிக் காஞ்சியின் கருத்தியல் அமைந்துள்ளது. காரணம் அது வைதீகச் சார்புடைய நூல் என்பதால் தான்.

முதுமொழிக் காஞ்சி வைதீகச் சார்புடைய நூலாகத் திகழ்ந்தும் அதில் மதுரைக் காஞ்சியில் இடம் பெற்றது போன்ற காஞ்சிக்கான கருத்தியல் வெளிப்படையாக இடம் பெறாததற்குக் காரணம், களப்பிரர் காலச் சமூகச் சூழலாகவே இருத்தல் வேண்டும். அந்தணர்க்கு எதிரானதாகக் களப்பிரர் அரசர்களின் செயல்பாடு அமைந்து இருந்தது. கொற்கைக் கிழான் நற்கொற்றன் எனும் அந்தணர்க்கு வேள்வி முடிக்க பாண்டியர் கொடையாக அளித்திருந்த வேள்விக்குடி எனும் ஊரைக்களப்பிரர் கைப்பற்றிக் கொண்டனர். வேள்வி மீதுள்ள வெறுப்பே, எதிர்ப்பே களப்பிரர் செயல்பாட்டிற்குக் காரணம். வேள்வி உடன்பாடு என்றால் அவர்கள் அவ்வூரை ஏன் கைப்பற்ற வேண்டுவர் என்பர் (க. ப. அரவாணன், 2002).

மேலும் சங்கம் மருவிய கால நூல்களில் சாதிய உயர்வு தாழ்வுகளையோ, சமய வேறுபாடுகளையோ காண்பது அரிது. மிக அரிது.

இக்கால நூல்களைச் சமய அடிப்படையில் வேலுப்பிள்ளை பகுத்தாலும் (1967) எந்த ஒரு நூலிலும் பிறகாலப் பக்தி இலக்கிய இயல்பு போன்ற இயல்பைக் காண முடியவில்லை. எனவே முதுமொழிக் காஞ்சியில் காஞ்சித்திணை வைதீகச் சார்பினதாகக் கட்டமைக்கப் பெற்றுள்ளது என்றும் அது இலைமறைக் காயாகக் காணப்பெறுவதற்கு அக்காலச் சமூகச் சூழலும் இலக்கியப் படைப்பாக்கப் போக்கும் காரணமாக அமைகின்றன என்றும் குறிப்பிடலாம்.

அட்டவணை : 1

எண்	தொல் துறைகள்	இளம். அளிக்கும் சான்று	நச்சர் அளிக்கும் சான்று	புறம் குறிப்பிட்டுள்ள திணை, துறை
1	பெருங்காஞ்சி	புறம், 363	புறம், 195	பொதுவியல், பெருங்காஞ்சி
2	முதுகாஞ்சி	புறம், 195	புறம், 243	பாடாண், பொருண்மொழிக்காஞ்சி
3	மறக்காஞ்சி	---	---	---
4	பேய்ப்பக்கம்	---	---	---
5	மண்ணைக்காஞ்சி	புறம், 235	புறம் 235, 221	பொதுவியல், கையறுநிலை
6	வஞ்சினக் காஞ்சி	புறம், 72	புறம் 73	காஞ்சி, வஞ்சினக் காஞ்சி
7	தொடாக் காஞ்சி	புறம், 281	புறம், 281	காஞ்சி, தொடாக் காஞ்சி
8	ஆஞ்சி காஞ்சி	---	---	---
9	மகட்பாற் காஞ்சி	புறம், 349	புறம், 349.345	காஞ்சி, மகட்பாற் காஞ்சி
10	முழுந்த நிலை	---	---	---
11	பூசல் மயக்கம்	புறம். 277	---	தும்பைத்திணை, உவகைக்கலுழ்ச்சி
12	ஆனந்தப்பையுள்	புறம். 74	புறம். 74	பொதுவியல், முதுமொழிக் காஞ்சி
13	மூதானந்தம்	---	---	---
14	முதுபாலை	புறம். 255	புறம். 254	பொதுவியல். முதுபாலை
15	கையறு நிலை	புறம். 226	---	பொதுவியல். கையறுநிலை
16	தபுதார நிலை	புறம். 245	புறம். 245	பொதுவியல். கையறுநிலை
17	தாபத நிலை	புறம். 248	புறம். 248	பொதுவியல், தாபத நிலை
18	மாலைச் சொல்நிலை	புறம். 246	புறம். 246	பொதுவியல். ஆனந்தபையுள்
19	தலைப்பெயல் நிலை	---	புறம். 278	---
20	காடு வாழ்த்து	புறம். 356	புறம். 356	காஞ்சி, மகட்பாற் காஞ்சி

அட்டவணை : 2

புறநானூற்றில் காஞ்சித்திணை - துறை

வஞ்சினக் காஞ்சி (71-73), பேய்க்காஞ்சி (281), பூக்கோட்காஞ்சி (293), மகட்பாற்காஞ்சி (336-354), பெருங்காஞ்சி (357, 360, 365, 366), மணயறம் துறவறம் (358)

அட்டவணை : 3

தவம்

வலியன் அல்லாதோன் தவம் செய்தல் பொய் (7:10), நிற்றல் வேண்டுவோன் தவஞ்செயல் தண்டான் (10:4)

மறுமை உலகம்

மறு பிறப்பு அறியாதது மூப்பு அன்று (5:10), புகழ் வெய்யோர்க்குப் புத்தேள் நாடு எளிது அன்று (8:1)

மக்கட்பேறு

மக்கட்பேற்றின் பெறும்பேறு இல்லை (6:1), மக்கட்பேறு வாய்க்கும் கலவியன் நல்ல கலவி வேறில்லை (6:3), மக்கட்பேறு அளிக்காத கலவியைவிடத் தீமையான கலவி வேறில்லை (6:4)

பெண்

நீர் அறிந்து ஒழுகாதான் தாரம் அல்லள் (5:1), தாரம் மாணாதது வாழ்க்கை அன்று (5:2), பெண்டிர் வெய்யோர்க்குப் படுபழி எளிது (8:8)

காமம்

மிக மூத்தோன் காமம் வறுமையுறும் (9:2), காமம் வேண்டுவோன் குறிப்புச் செயல் தண்டான் (10:10)

சினம்

மிக்க செல்வம் உள்ளவன் சினம் இல்லாதிருத்தல் அரிது (7:2), மதிப்பு இல்லாவிடத்து மேற்கொள்ளும் சினம் வறுமையுறும் (9:9).

அரசு தொடர்பானவை

குடிமக்களின் இன்பத்தை விரும்பும் அரசன் முறையோடு ஆட்சி செய்தலைத் தவிரான் (10:9), முறையில் அரசன் நாட்டில் இருந்து பழியார் (3:6), அள்ளின் மிக்க வீரம் பேடித் தன்மையின் நீங்காது (4:2), உறழ் விரும்பியோன் குறு செரு எளிது (8:2) , பகைவரை ஒறுத்தலினும் தன் செய்கை சிறந்தது (1:9)

நட்பு

நெகிழாத நட்பின் இயல்பை உதவியால் அறிக (2:3), நட்பு கொண்டு கண்மாறல் கொடுமையின் வேறாகாது (4:7), அன்பில்லாத கிளை நட்பன்று (5:3) நேரா நெஞ்சத்தோன் நண்பன் அல்லன் (5:5) முறைமை இல்லாத அரசன் நாடு வறுமையுறும் (9:1) உட்பகை கொண்ட நட்பு வறுமையுறும் (9:3), தன்மேல் அன்புடையாரிடத்துப் பிணங்குதல் வறுமையுறும் (9:5), உள்ளத்தில் அன்பிலாதவனைச் சேர்தல் வறுமையுறும் (9:8), நட்பியல்பு இல்லார் இடத்து உதவியை நாடுதல் (9:10)

நோய்

இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை (1:5), உண்டி விரும்புகின்றவர்க்குக் குறுபிணி எளிது (8:7) பிணிகிடந்தோன் பெற்ற இன்பம் வறுமையுறும் (9:4)

ஆசை

அவாவினும் பெரியதோர் வறுமை இல்லை (6:7), பொருள் பற்றுடையவன் அறநெறிப்படி முறை செய்தல் இல்லை (7:9)

முதுமை

இழிவு உடை மூப்பு சினத்தின் வேறாகாது (4:9), முதிர்வு உடையோன் மேனி அணி வறுமையுறும் (9:6)

கொலை

சார்பு இலோர்க்கு உறு கொலை எளிதாகும் (8:10)

கள்

கள் உண்போன் சோர்பு இன்மை பொய் (7:3)

கல்வி

ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை (1:1), மேதையில் சிறந்தது, கற்றது மறவாமை (1:3), கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று (1:8), கற்றது உடைமை காட்சியின் அறிவர்(2:4), நேரா (தேரா) நெஞ்சத்தோன் நண்பன் அல்லான் (5:6), கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான் (10:3).

காலமறிதல்

ஏற்றம் உடைமை எதிர்கோளின் அறிப (2:5), காலம் அறியாதோன் செயல் முடிவதில்லை (7:4), மேல் வரவு அறியாதோன் தற்காத்தல் இல்லை (7:5)

புகழ்

இசையின் பெரியதோர் எச்சமில்லை (6:8)

ஒழுகு முறை

காதலில் சிறந்தன்று கண் அஞ்சப்படுதல் (1:2), நலனுடைமையின் நாணுடைமை சிறந்தது (1:6), பழியோர் செல்வம் வறுமையின்று வேறாகாது (4:1), நாணில் வாழ்க்கை பசித்தலில் வேறு அன்று (4:3), சீர்உடை ஆண்மை செய்கையின் அறிப (2:10), ஒப்புரவு அறிதலிற் தக்க செயல் வேறில்லை (6:2).

குலம்

குலனுடைமையில் கற்புச் சிறந்தன்று (1:7), பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப (2:1) சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப (2:6), சிறியோர் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார் (3:10), திறத்து ஆற்றின் நோலாதது நோன்பு அன்று (5:9), யாப்பில் ஒரை இயல்பு குணம் பழியார் (3:1).

அறிவு

அறிவு சோர்புடைமியிற் பிறிது சோர்வும் அறிப (2:9).

ஈகை

ஈரம் உடைமை ஈகையின் அறியலாம் (2:2), வறியோன் வள்ளியன் அன்மை பழியார் (3:9), பேண் இல் ஈகை மாற்றலின் நீங்காது (4:4), போலியான ஈகை புலைமையின் நீங்காது (4:6), சோராக் கையின் சொன்மலை அல்லன் (5:4) அறத்து ஆற்றின் ஈயாதது ஈகை அன்று (5:8), இயைவது கரத்தலின் கொடுமை இல்லை (6:5), இரத்தலின் ஊங்கு இளிவரவு இல்லை (6:9), இரப்போர்க்கு ஈதலின் எய்துஞ் சிறப்பில்லை (6:10), அன்பை விரும்பினார்க்கு நசை கொடை எளிது (8:3), பாரம் விரும்பினார்க்கு பாத்து ஊன் எளிது (8:9).

உயர்வு

உறுவினை செய்யான் உயர்வு வேண்டல் பொய் (7:6), ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான் (10:1), வீங்கல் வேண்டுவோன் பல்புகழ் தண்டான் (10:2), வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான் (10:5), மிகுதி வேண்டுவோன் வருத்தந்தண்டான் (10:6).

எதிர்மறை

முன் பெருகலிற் பின் சிறுகாமை சிறந்தன்று (1:10)

சொல்

வன்மையின் சிறந்தன்று வாய்மை (1:4), சொல் சோர்வு உடைமையின் எச்சோர்வும் அறிப (2:8), கோட்சொற்களை விரும்புவோர்க்கு மறைவு அரிது (8:4), சொல் செல்லாவழி சொல் வறுமையுறும் (9:7).

தீ / செயல்

வஞ்சனை செய்தலிற் கள்வன் ஆதல் அறிப (2:7)

பொதுநிலை

பெருந்தன்மை இல்லார் பெருமிதத்தைப் பழியார் (3:2), பெருமை உடையதன் அருமை பழியார் (3:3) , அருமை உடையதன் பெருமை பழியார் (3:4), நிறையச் செய்யாக் குறைவினை பழியார் (3:5) அறியா

தேசத்து ஆசாராம் பழியார் (3:8). செய்யாமை மேற்கொள்ளுதல் மூடத்தன்மையின் நீங்காது (4:5). அறிவிலி துணைப்பாடு தனிமையில் வேறாகாது (4:8). தானே இன்புறல் தனிமையில் வேறாகாது (4:10). வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று (5:7). இன்பம் வேண்டுவோன் துன்பந்தாண்டான் (10:7). துன்பம் வேண்டுவோன் இன்பந்தாண்டான் (10:8). சிறுமை பொறாதவன் பெருமை வேண்டல் பொய் (7:7). பெருமை பொறாதவன் சிறுமை வேண்டல் பொய் (7:8). துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது (8:5). இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது (8:6). பேர் அறிவுடையவன் இனிது வாழாமை பொய் (7:1). உணர்வு இலன் ஆதலின் சாக்காடு இல்லை (6:6).

அட்டவணை - 4

புறநானூற்றில் பொதுவியல் திணை - துறை

முதுமொழிக் காஞ்சி (18, 27 - 29, 74). பொருண் மொழிக்காஞ்சி (24, 75, 121 - 193,195, 214). கையறு நிலை (65,112 - 120, 217 - 227, 230 - 245). பெருங்காஞ்சி (194, 362 - 364). ஆனந்தப்பையுள் (228, 229, 246, 247, 280). தாபத நிலை (248,249,250). முதுபாலை (253, 256).

துணை நின்றவை

அறவாணன் க.ப. 2002, 'சங்க மருவிய கால அற இலக்கியங்களும் பெண் வெறுப்புக் கொள்கை உருவாக்கமும், தமிழியியல் ஆய்வுகள் இன்றைய போக்குகள், தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.

அறவேந்தன். இரா. 2001, 'மாணாக்கப் படைப்பாக்க ஆளுமை' தமிழியியல் ஆய்வு, புத்தனாம்பட்டி : கணியன் பூங்குன்றனார் மன்றம்.

ஆதித்தன். ஏ. 1985, ' எவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மொழியியல், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்), 1982, சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

—— (நச்சர்) 1973, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

பட்டினப்பாலை 2001, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

புறநானூறு (உ.வே. சா), 1963, சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

புறப்பொருள் வெண்பாமாலை, 1988,
சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மதுரைக்காஞ்சி, 1977, சென்னை : சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

முதுமொழிக்காஞ்சி, 1963,சென்னை : சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

வேலுப்பிள்ளை ஆ. 1967, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,
சென்னை: பாரி நிலையம்.

* * * * * *

ஐந்திணை ஐம்பதில் குறிப்புப் பொருள்

க. முத்துச்சாமி
தமிழ்த்துறைத்தலைவர் மா.மன்னர்
கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை

மாறன் பொறையனார் இயற்றிய ஐந்திணை ஐம்பது[1] என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூலில் மருதத்திணையில் ஒருபாடலிலும் (24) பாலைத்திணையில் இரு பாடல்களிலும் (32, 38) நெய்தல் திணையில் மூன்று பாடலிகளிலும் (46, 48, 49) குறிப்புப் பொருள் அமைந்துள்ளது. அ. நடராசபிள்ளை இந்நூலுக்கு வரைந்த உரையால் வழி இதனை அறியலாம்.[2] தொல்காப்பியரின் குறிப்புப் பொருட் கோட்பாடுகளின் அடிப்படையில் இப்பாடல்களை வகைப்படுத்தி பதினெண் கீழ்க்கணக்கு காலத்திலும், தொல்காப்பிய இலக்கண மரபுகள் இடையீடின்றித் தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளன என நிலை நாட்டுவதே கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியக் கோட்பாடுகள் :

அ) உள்ளுறை

தொல்காப்பியர் உள்ளுறை, இறைச்சி என இருவகைக் குறிப்புப் பொருள் கோட்பாடுகளைத் தொல்காப்பியத்தில் விளக்கியுள்ளார். உள்ளுறை என்பது உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐவகைப்படும். உடனுறை என்பது விலங்கு பறவை அல்லாத பிற கருப்பொருள்களில் உடனுறைவது ஒன்றைச் சொல்ல, அதனாலே பிறிது ஒரு உட்பொருள் தோன்றுவது. உவமம் என்பது வெளிப்படையாகக் கூறப்பட்ட கருப்பொருள் அடிப்படையில் குறிப்பாய்ப் புலப்படுத்தும் இணையான படிமங்களைக் கொண்டு குறிப்புப் பொருளை உய்த்துணர்ந்து கொள்வது. உள்ளுறை உவமை வினை, பயன், மெய், உரு, பிறப்பு என ஐவகை உவமப் போலிகளாகப் பிரிக்கப்பெறும். சுட்டு என்பது கருப்பொருளைச் சுட்டிக் கூறுவதன் வழிக் குறிப்புப் பொருளை உணர்ந்து கொள்வது. நகைச்சுவை தோன்றக் கூறப்பட்ட கருமப்பொருட் செய்தி, பிறிதொரு குறிப்புப் பொருளைத் தருவது உள்ளுறை நகை. உள்ளுறைச் சிறப்பு என்பது சினம், பேதைமை வெறுப்பு வறுமை ஆகியவற்றைச் சிறப்பிப்பதன் மூலம் வேறு ஒரு குறிப்புப் பொருள் தோன்றுவது.

ஆ) இறைச்சி :

விலங்கு பறவைகளின் காதற் செய்கைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இறைச்சிக் கோட்பாடு என்பது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தங்கள் ஆகிய உரிப்பொருள்களின் புறத்தே நின்று அவ்வுணர்வுகளைச் சிறப்பிக்க வருவது ஒரு வகை. தலைவன் பிரிவின் போது வருந்தும் தலைவியை ஆற்றுவிக்கத்தோழி விலங்கு பறவைகளின் காதற் செய்கைகளைக் கூறி ஆற்றுவிப்பது இரண்டாவது வகை.[3]

பாடல் 24 :

"பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது" என்ற துறையில் இந்த மருதத் திணைப்பாடல் அமைந்துள்ளது. "பாணனே,குளிர்ந்த வாளைமீன் சிறிய நாரையின் குத்துதலுக்கு அஞ்சி நிலமலரில் புகுந்து ஒளிந்து கொள்ளும் இயல்புடைய மருத நிலத் தலைவனுக்கு, முன்பு சந்தனச் சாந்து போல் குளிர்ந்த நான், இப்போது புண்ணுக்கு இடும் காரமருந்து போலக் கொடிய தோள்களை உடையவளாக ஆகி விட்டேன்" எனத் தலைவி பாணனிடம் கூறினாள். இப்பாடலில் "கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி, ஈரவாளை நிலத்துப் புக்கொளிக்கும் ஊரன்" என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

வாளைமீன் நாரையின் குத்துதலுக்கு அஞ்சி நிலமலரில் ஒளிந்து கொள்ளும் என்றது தலைவியை வெறுத்துத் தலைவன் பரத்தையிடம் சேர்ந்தான் என்பதைக் குறிப்பித்தது. தொல்காப்பியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராயும்போது வாளை தலைவனுக்கும், நாரை தலைவிக்கும் நீல மலர் பரத்தைக்கும் இணையான படிமங்களாகிக் குறிப்பிட்டதால், இஃது உள்ளுறை உவமம். தலைவன் பரத்தையிடம் சேர்ந்து கொண்டான் என்ற வினை நிகழ்ச்சி கூறப்பெறுவதால் இது வினையுவமப் போலி.

பாடல் 32 :

"தலைமகனது பிரிவுக் குறிப்பறிந்து ஆற்றாளாய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது" என்ற துறையில் இந்த பாலைத் திணைப்பாடல் அமைந்துள்ளது. "தலைவியே, நம் தலைவர் மலைச்சுனையின் சேற்றோடு சேர்ந்த குறைந்த நீரைத் தன் கையினால் முகந்து எடுத்துக் காட்டுத் தீயில் அகப்பட்டு வருந்திய பெண் யானையின் தலையின் உச்சியில் ஆண்யானை வார்க்கும் பாலை நில வழியில் தலைவர் செல்வரோ? செல்லார். எனவே நீ தடுக்காதே" எனத் தோழி தலைவியிடம் கூறினாள். "அழற்பட்டசைந்த பிடியை எழிற்களிறு, கற்சுனைச் சேற்றிடைச்

சின்னீரைக் கையாற்கொண்டு, உச்சி யொழுக்குஞ் சுரம்" என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

தொல்காப்பியக் கோட்பாட்டு அடிப்படையில் ஆண்யானை பெண் யானையின் துன்பம் போக்க சுனை நீரை வார்த்த அன்புச் செய்கையினை விளக்கி, பிரிதலின் நிமித்தமாகிய உரிப்பொருளின் புறத்தே நின்று அவ்வுணர்வைச் சிறப்பித்திருப்பதால் இஃது இறைச்சி.

பாடல் 38 :

"பிரிவின் கண் ஆற்றாளாயின் தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது" என்ற துறையில் இந்தப் பாலைத் திணைப் பாடல் அமைந்துள்ளது. "தலைவியே, நம் தலைவர் விரும்பிச் சென்ற வழி, சுனையில் உள்ள குறைந்த நீர், பெண் மான் அருந்துவதற்குப் போதாது என எண்ணி அது மட்டும் நன்கு குடிக்கட்டும் என்று விரும்பி ஆண் மான் தானும் சுனை நீரை உறிஞ்சிக் குடிப்பதைப் போலப் பாவனை செய்யும் பாலை வழியாகும் என்பர்". எனத் தோழி தலைவியிடம் கூறினாள். "சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்று எண்ணிப் பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன் கள்ளத்தின் ஊச்சும் சுரம்" என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

தொல்காப்பிக் கோட்பாட்டு அடிப்படையில், தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைத் தோழி அற்றுவிக்கத் தலைவன் சென்ற வழியில் உள்ள ஆண்மான், பெண்மானின் தாகம் தீர்க்கக் குறைந்த தண்ணீரைத் தான் குடிப்பதுபோல் பாவனை செய்யும் எனக் கூறுகிறாள். இத்தகைய நிகழ்ச்சியைக் கண்டு தலைவன் தூண்டுணர்வு பெற்று தலைவியை ஆற்றுவிக்கத் தலைவன் விரைவில் திரும்பி விடுவான் எனத் தோழி குறிப்பிட்டதால் இஃது இறைச்சி.

பாடல் 46 :

"பகற்குறி வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைக் கண்ணுற்று நின்று தோழி வரைவு கடாயது" என்ற துறையில் இந்த நெய்தல் திணைப்பாடல் அமைந்துள்ளது. "அலைகளால் கரையில் சேர்க்கப்பட்ட கடல் முத்துக்களை இளம் சிறுமிகள் தங்கள் வண்டல் வீட்டிற்கு விளக்குகளாகக் கொண்டு விளையாடும் கடற்கரைத் தலைவனே, திருமணம் செய்து கொள்ளாமல் தலைவியின் தோள்களை மெலிய விடலாமா? " எனத் தோழி தலைவனிடம் கேட்கின்றாள். "ஓதந் தொகுத்த ஒலிகடல் தண்முத்தம் பேதை மடவார் தம் வண்டல் விளக்கயரும் கானலஞ் சேப்ப" என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

கடல் முத்துக்கள் சிறுமிகளின் விளையாட்டு வீட்டிற்கு விளக்காகும் என்றது தலைவி தலைவனின் இல்லத்திற்குக் குடும்ப விளக்காக வேண்டும் என்பதைக் குறிப்பித்தது. விலங்கு பறவை நீங்கலான பிறகருப் பொருள்களைச் சொல்ல, உடன் உறையும் வேறு ஒரு தளக் கருத்துப் பெறப்படுவதால் தொல்காப்பியக் கோட்பாட்டின் படி இஃது உள்ளுறை உடனுறை.

பாடல் 48:

“தலைமகனைத் தோழி வரைவு கடாயது” என்ற துறையில் அமைந்த இப்பாடலும் நெய்தல் திணையைச் சேர்ந்தது. “மணல் மேல் கடலலைகள் கொண்டு வந்து சேர்த்த முத்துக்கள், உப்பங்கழியில் ஒளிரும் கடற்கரைத் தலைவனே, தம்மைச் சேர்ந்தவர்களின் துன்பங்களைத் தீர்க்க முயலாதவர் சிறந்த புகழைப் பெறுவார்களோ?” எனத் தோழி தலைவனிடம் கேட்கிறாள். “எக்கர் இடுமணல் மேல் ஓதம் திரவந்த நித்திலம் நின்றிமைக்கு நீள்கழித் தண் சேப்ப” என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

கடலலைகள் கொண்டு வந்து சேர்த்த முத்துக்கள் உப்பங்கழியில் ஒளிவீசும் என்றது ஊழால் தலைவனைச் சேர்ந்த தலைவியை மணந்து தலைவன் இல்லத்தில் ஒளி வீசச் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பித்தது. விலங்கு பறவை நீங்கலான பிறகருப்பொருள்களைச் சொல்ல, உடன் உறையும் வேறு ஒரு தளக் கருத்துப் பெறப்படுவதால், தொல் காப்பியக் கோட்பாட்டின் இஃது உள்ளுறை உடனுறை.

பாடல் 49 :

“அல்ல குறிப்பிட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது” என்ற துறையில் அமைந்த இந்தப் பாடலும் நெய்தல் திணைப் பாடலே “தாழை மரத்தின் கூம்பை நீக்கி மலர்ந்த மலரின் நடுவில் உள்ள சோறு வெண்ணையினைப் போல வெளிப்பட்டுத் தெய்வ மணம் கமழும் கடற்கரைத் தலைவன் நம்மால் அறிந்து கொள்ள முடியாத குறியினைச் செய்து அல்ல குறிப்பிடும்படி விட்டு விட்டான்” எனத் தோழி சிறைப்புறத்தில் உள்ள தலைவன் கேட்பக் கூறுகிறாள். “கொடு முள் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ, இடையுள் இழுதொப்பத் தோன்றிப் புடையெலாம் தெய்வம் கமழும் தெளிகடல் தண் சேர்ப்பான்” என்பது குறிப்புப் பொருள் உடைய தொடர்.

குறிப்பால் பொருள் உணர்த்தும் தாழை மணக்கும் நாடன் தெளிவாய்க் குறியீடு செய்ய மறந்து விட்டதால், அல்ல குறிப்பிட்டோம்

என்பதைச் சிறைப்புறமாக இருக்கும் தலைவனிடம் தோழி சுட்டிக் காட்டிக் கூறுவதால், இது தொல்காப்பியக் குறிப்புப் பொருள் கோட்பாட்டின்படி உள்ளுறைச் சுட்டு.

இது காறும் மேற் கொண்ட ஆய்வின் அடிப்படையில்,

1. தொல்காப்பியக் குறிப்புப் பொருள் கோட்பாட்டு மரபுகள் ஐந்திணை ஐம்பதின் காலத்திலும் பேணப்பட்டு வந்துள்ளன.
2. சங்க இலக்கியக் குறிப்புப் பொருள் மரபுகள் ஐந்திணை ஐம்பதிலும் பேணப்பட்டு வந்துள்ளன.
3. தொல்காப்பியர் காலம் முதல் ஐந்திணை ஐம்பதின் காலம் வரை தொல்காப்பியக் குறிப்புப் பொருட் கோட்பாடுகள் இடையீடின்றிப் பேணப்பட்டு வந்துள்ளன.
4. சங்க காலத்தை அடுத்த இடையீன்றித் தோன்றியனவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

ஆகியவற்றை ஐந்திணை ஐம்பதில் குறிப்புப்பொருள் என்ற இக்கட்டுரை உறுதி செய்கிறது. 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்புப் பொருள்' என மேலாய்வு செய்யவும் இக்கட்டுரை வழி வகுக்கிறது.

அடிக்குறிப்புகள் :

1. புலவர் அ. மாணிக்கனார் உரை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மூன்றாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், 1999, சென்னை.
2. அ. நடராச பிள்ளை விளக்கவுரை, நாலைந்திணை, கழக வெளியீடு, 1969, சென்னை.
3. க. முத்துச்சாமி, தொல்காப்பியத்தில் குறிப்புப் பொருள், அன்னம், 1994, சிவகங்கை.

✲ ✲ ✲ ✲ ✲ ✲

பதினெண் கீழ்க்கணக்கும் பெண் பற்றிய மதிப்பீடுகளும்

முனைவர் **ந. முருகேச பாண்டியன்**
நூலகர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி புதுக்கோட்டை மாவட்டம்

இனக்குழு மக்களின் வாழ்க்கையை முதன்மைப்படுத்தும் சங்க காலத்திற்குப் பின்னர், தமிழகத்தில் அரசியல், பொருளியல் ரீதியில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவை கருத்தியல் வெளிப்பாட்டிலும் பாதிப்பைத் தோற்றுவித்தன. சங்க காலத்திய கொண்டாட்டங்கள் இழிவாகக் கருதி ஒதுக்கப்பட்டன. கள்ளுண்ணல், புலால் உண்ணுதல், பரத்தமை போன்றவை சமூகக் குற்றங்களாகக் கருதப்பட்டன. மனிதர்களை மேல் கீழாகப் பிரித்து உயர்வு, தாழ்வு கற்பிக்கும் நிலையேற்பட்டது. வைதீக இந்து சமய நெறிகள் நாளடைவில் ஆதிக்கம் பெற்றன. பெளத்த, சமணக் கருத்துகளும் மக்களிடைய செல்வாக்குடன் பரவின. சமூக அமைப்பு இறுக்கமடைந்தது. ஆளுவோரின் அதிகாரம் வலுவடைந்தது. அன்றாட வாழ்வில், சராசரி வாழ்க்கை வாழ்ந்திடக் கூட மக்கள் அல்லல்படும் போது, "ஒழுக்க விதிகள்" திணிக்கப்படுவது அரசியலில் தவிர்க்கவியலாத அம்சமாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் மக்களிடையே அறத்தையும், ஒழுக்கத்தையும் போதிப்பதற்காக அறநூல்கள் எழுதப்பட்டன. இத்தகைய நூற்களில் பௌத்த, சமண சமயக் கருத்துகளும் மநு தர்மம், அர்த்த சாஸ்திரம் வெளிப்படுத்தும் வைதீக இந்து சமயக் கருத்துகளும் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறத்தினை எடுத்துரைக்கும் முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, நாலடியார் ஆகிய பத்து நூற்கள் மட்டும் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு தனிமனிதனும், மனித சமுதாயமும் பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க முறைகளைப் பற்றி விளக்குகின்றன.

சொத்துடைமை வளர்ச்சியடைந்த சமுதாயத்தில், ஆளுவோருக்கும் ஆளப்படுகிறவருக்குமிடையில் முரண்பாடு கூர்மையடைந்தபோது, அதிகாரத்தினுக்குச் சார்பாக மக்களிடைய ஒழுக்கத்தைப் போதித்திடுவதற்காக அறநூல்கள் எழுதப்பட்டிருக்க வாய்ப்புண்டு. பொருளியல் ரீதியில் நலிவடைந்தோரையும், சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்டோரையும் எல்லாம் 'ஊழ்வினை' என்று நம்பிடச் செய்ய 'அறநூற்கள்' உதவுகின்றன. பெண்கள் 'பால்' ரீதியில் அடக்கியொடுக்கப் பட்டிருத்தலையும் அறநூல்கள் நியாயப்படுத்துகின்றன.

எனினும் அவை பொதுநிலையில் மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்திசைந்து வாழ்வதற்கான கருத்தியல் பின்புலத்தையும் முன் வைக்கின்றன. சில அறநூல்கள் அன்றாட வாழ்வில் எதைச் செய்ய வேண்டும்; எதைச் செய்யக் கூடாது என்பதையும் போதிக்கின்றன. இத்தகைய போதனைகள் ஒரு வகையில் சமுதாயத்தை நெறிப்படுத்தும் ஒழுங்குவிதிகளாக அமைகின்றன. ஆனால் அவற்றை மக்கள் நடைமுறை வாழ்வில் பின்பற்றுகின்றனரா என்பது ஆய்விற்குரியது.

அறக்கருத்துகள் அதீத சக்தியிடமிருந்தோ, விண்ணிலிருந்தோ, கடவுளிடமிருந்தோ, அதியற்புதத்தின் விளைவாகவோ வந்தவை அல்ல; அதே நேரத்தில் தனிமனித மூளையிலிருந்தும் தோன்றியவை அல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் அல்லது குழுவினர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுக்கின்ற அறநூல் ஆசிரியரின் கருத்து கலவையானது. அதாவது முன்னோர் அனுபவங்கள், மரபு வழிப்பட்ட கருத்துக்கள், பட்டறிவு, பிறர் கூற்றுக்கள், புதிதாகக் கற்றவை, முந்தைய நூற்களின் கருத்துக்கள் போன்றன ஒருங்கிணையும் போது அறநூல் வடிவெடுக்கிறது. அறநூல் போதிக்கும் 'நீதி' காலந்தோறும் மாறக்கூடியது. எனவே அது மாறாத சட்டமல்ல. ஒரு காலத்திற்குப் பொருந்திய ஒழுகலாறுகள், விதிமுறைகள், மாறிவரும் காலகட்டத்தில் பொருத்தமற்றுப் போகும் போது, அவை புறந்தள்ளப்படுகின்றன. இந்நிலையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முன்னிறுத்தும் பெண் பற்றிய கருத்துக்களை மறுவாசிப்பு மூலம் அணுகவேண்டிய தேவையேற்பட்டுள்ளது. அதாவது மரபு வழிப்பட்ட பெண் பற்றிய பிம்பத்தைக் கட்டுடைப்பதன் மூலம் புதிய சொல்லாடலுக்கு (Discourse) வழி தோன்றும். அது அற நூல்கள் முன்னிறுத்தும் பெண் பற்றிய மதிப்பீடுகளைப் புரிந்து கொள்ள உதவும். இதனால் பண்டைத்தமிழரின் பெண் பற்றிய கருத்தியலை மீட்டுருவாக்கம் செய்திடவும், அது குறித்து ஆழமான விமர்சனத்தைப் பெண்ணிய வாசிப்பில் வெளிக்கொணரவும் இயலும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூற்களில் ஆய்விற்குட்பட்ட பத்து அற நூற்களும் சித்திரிக்கும் பெண் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவள்; ஆணைச் சார்ந்து இயங்கும் தன்மையுடையவள்; அவளது சொந்த உடல் மீது எவ்விதமான உரிமையும் அற்றவள் . . . இத்தகைய பெண்ணைக் குடும்பப் பெண், விலை மகளிர் எனப் பிரிக்கும் போக்குப் பொது வழக்காக உள்ளது. எனினும் அறநூல்கள் சித்தரிக்கும் 'பெண்' பிம்பம் முக்கியமானது. சுடுகாட்டில் கிடக்கும் பெண்ணின் பற்கள் முல்லை அரும்புகள்[1], குடல், ரத்தம், தோல், எலும்பு, நரம்பு , தசை, நிணம் இணைந்த கலவை தான் பெண்[2] வேல் போன்று கூர்மையான விழியுடையவள், பல்லாண்டுகள்

கழிந்த பின்னர் கோலைக் கண்ணாகக் கொண்டு நடப்பாள்[3]. பெண்ணை வெறும் உடம்பாகக் கருதி, அவளுடனான உறவைக் கண்டனம் செய்திடும் போக்கு இங்கு வெளிப்படுகிறது. மனுஷியான பெண்ணின் மனம் குறித்து அறநூற்களுக்கு அக்கறை இல்லை. புவியில் சரிபாதியாக வாழும் பெண்ணை உறுப்புகளின் தொகுதியாகக் காணும் பார்வையில், முழுக்க ஆண் மேலாதிக்கச் சிந்தனை உள்ளது. பரத்தமை, பிறன் மனை நயத்தல் என்று வாழ்ந்திட்ட நிலமான்யக் காலத்தில் ஆண்களுக்குப் பெண் புரியாத புதிராக விளங்கியதில் வியப்பில்லை. பெண் மனதின் அருமையையும் நுணுக்கத்தையும் அறியாது, அவளை வெறும் உடம்பாக அணுகுவதின் விளைவுதான் இவை போன்ற போதனைகள்.

பெண்ணின் இலக்கணமாக அறநூல்கள் வலியுறுத்தும் கருத்துகள் ஆழ்ந்த பரிசீலனைக்குரியன. நல்லியல்புடைய பெண் நாணத்தின் எல்லையில் நிற்றல்[4], பெண்ணுக்கு அழகு நாணுடைமை[5] கொண்டான் வழி ஒழுகல் பெண் [6], அடங்காத பெண் நோய [7], இனிய சொல்லையுடைய பெண் காப்பாற்றப்படவேண்டிய பொருள்[8], பெண் சுயமாகச் சிந்திக்கும் திறனுடையவள் என்பதனை மறுக்கும் வகையில், நாணத்தைப் பெண்ணின் இலக்கணமாக அறநூல்கள் வகுத்துள்ளன. மேலும் அவள், கணவனின் வழியைப் பின்பற்றுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. சரியான முறையில் சுயமான கருத்தினை முன்வைக்கும் பெண் அடங்காதவள் என்றும் நோய் என்றும் கூறுவதிலிருந்து, ஆணின் விருப்பத்தைச் சார்ந்து எப்பொழுதும் நாணத்தோடு இருப்பவளே பெண் என்ற அறநூற்களின் கருத்தை அறிய முடிகிறது. இது பெண் என்ற உயிரின் தனித்துவத்தை மறுக்கும் போக்காகும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் இல்லற நெறியில் பெண்ணுக்கு மட்டும் தாரளமாக அறவுரைகளை அறநூற்கள் அள்ளி வழங்குகின்றன. குடும்ப நிறுவனத்தின் மைய அலகாக விளங்கும் பெண், பிற ஆடவனை ஏறிட்டுப் பார்க்காதவளாகவும், கற்புடையவளாகவும் இருக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகின்றது. இவ்வடிப்படையில் தான் பிறரின் மனைவியை விரும்பக்கூடாது என்று ஆண்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இது சங்கம் மருவிய காலகட்டத்தில் குடும்ப அமைப்பு வலுவடைந்ததனைக் காட்டுகிறது.

மாண்புடைய மகளிரால் இல்வாழ்க்கை உயரும்[9]. மனைவிக்குக் கணவன் போல வேறு யாருமில்லை[10]. கணவரோடு ஒன்றுபட்டு வாழ்தல் பெண்களுக்கு நல்ல செயல்[11]. பெண் கணவனைத் தவிர வேறு

தெய்வங்களை வணங்கமாட்டாள்[12]. நல் மனைவி அமையாவிட்டால் இல்லறம் பாழ்[13]. மனைவி இல்லாத வீடு சுடுகாடு[14]. மனைவி மாட்சிமை இல்லாது போனால் இல்வாழ்வு சிறக்காது[15]. கணவன் இயல்பை அறிந்து நடக்காதவள் மனைவி ஆக மாட்டாள்[16]. கணவன் மனைவி கூடிவாழும் இல்லறம் இனிது[17]. கற்புடைய பெண் கணவனுக்கு அமுதம்[18]. கற்புடைய பெண்ணுடன் கலந்து வாழும் வாழ்க்கை நல் வாழ்விற்கான மருந்து[19]...

குடும்பத்தில் மனைவியாக விளங்கும் பெண் எவ்வாறு இருக்க வேண்டும்?. என்ன செய்ய வேண்டும்? என்பன குறித்து அறநூல்கள் பல்வேறு அறிவுரைகள் தருகின்றன. பெண் என்ற தனித்த மனுஷியின் அடையாளத்தை விட மனைவி என்ற பிம்பம் கற்பு நிலையில் வலியுறுத்தப்படுகிறது. மனைவி என்ற நிலையில் கணவனுக்குப் பணிந்து அவனுடன் உறவு கொண்டு குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது இதன் உட்பொருளாகும். குழந்தைகள் நிலமான்யச் சமூக அமைப்பில் உழைத்திடவும், போரிடவும் தேவையான சமூக சொத்துகள். இதனால் தான் கணவன் மனைவிக்கிடையில் அந்தரங்கமான உடலுறவை அவசியம் மேற்கொள்ள வேண்டுமென அறநூல்கள் போதிக்கின்றன. மனைவியின் பூப்பு முடிந்தவுடன் அடுத்துவரும் பன்னிரு நாட்களும் மனைவியை விட்டு விலகாது உறவு கொள்ள வேண்டும்[20]. பூப்படைந்த மனைவியைச் சேராத கணவன் கற்ற கல்வியைக் கைவிட்டவன்[21]. கொழுநன் இல்லாத பெண் அடைகின்ற பூப்பு சிறப்பு இல்லை[22]. இங்கு பெண் உடல் மீது கணவன் மட்டுமல்லாமல் அரசு ஆட்சி செய்வதனை அறிய முடிகிறது. தன் கணவனுடன் உடலுறவு கொள்வதை முடிவு செய்ய வேண்டியவள் பெண் தான். அவளது உடலும் மனமும் சார்ந்த விஷயத்தை முழுக்க உடல் ரீதியானதாகக் குறுக்கிப் பெண்ணின் மனதைப் புறக்கணிக்கும் இத்தகைய பார்வை, பெண்ணின் சுயவளர்ச்சிக்கு எதிரானது. மேலும் குடும்ப உறவுகளில் கற்பு சார்ந்த இறுக்கம் பெண்ணின் மீது மட்டும் சுமத்தப்படுவது சொத்துடமையுடன் தொடர்புடையது. அதே நேரத்தில் குடும்பத்தில் ஆணின் கற்பு வாழ்க்கைக் குறித்து அறநூல்கள் பெரிதும் கருத்தில் கொள்ளவில்லை. பிறர் மனை நயத்தல் கூடாது என்று ஆணைப்பார்த்துக் கூறுவது, குடும்ப நிறுவனத்தை வலிமைப்படுத்திடச் செய்யும் முயற்சியாகும். கற்பு பற்றிய கருத்தியல் புனைவு முழுக்க ஆண் மேலாதிக்கப் பார்வையின் வெளிப்பாடாகும். மனைவி குடும்பத்தில் செய்ய வேண்டிய செயல்களும் விதிக்கப்பட்டுள்ளன. கற்புடை மகளிர் விருந்தோம்ப வேண்டும்[23]. மனைவியிடம் கண்ணோட்டம் பெருகின் சுற்றத்தார் பெருகுவர்[24]. மனைவி தன் மேனி நோக்கார், பிற ஆடவரைப் பாரார், முடி கோதார், கை நொடியார், கணவனை மட்டும் நோக்குவார். மனைவி கணவனுக்கு அடங்கி

நடக்காதிருத்தல் துன்பம் தரும்[25]. விருந்தோம்பல், நன்மக்கள் பெற்று மனையறம் போற்றுதல்[26]. பெண் மனைவி என்ற நிலையில் கணவனுக்குப் பணிந்து வாழ்தலும், நன்மக்களைப் பெறுதலும், விருந்தோம்புதலும் முக்கியமான அறங்களாக வலியுறுத்தப்படுகின்றன. இவை ஆண் மொழியில் அதிகாரத்தின் குரலாகப் பெண்ணை நோக்கி வீசப்பட்டவை ஆகும். மேலும் மனைவி என்ற பிம்ப வடிவமைப்பில், அவளுக்கென்று சுயக் கருத்து இருக்கமுடியாது என்பதும், ஆண் குழந்தைகளின் நலனுக்காகத் தன் சுயத்தை அழித்துக் கொண்டு 'பொருள்' போல வாழ வேண்டும் என்பதும் அறிய முடிகிறது. பெண் என்ற நிலையிலும், மனைவி என்ற நிலையிலும் கல்வியறிவு பெறுதல், சமூக வாழ்க்கையில் ஈடுபடுதல் பற்றிய குறிப்பு அறநூல்களில் இல்லை. எனவே அறநூல்கள் போதிக்கும் பெண்ணுக்குத் தனித்த முகம் இருக்க வாய்ப்பு இல்லை.

பெண் பற்றிய புரிதலில் இன்னொரு அம்சம் 'பிறர் மனை நயத்தல்' குடும்ப நிறுவனத்தைப் போற்றும் வகையில் ஒரு ஆண் பிறரின் மனைவியுடன் உறவு கொள்வதைக் கடுமையான குற்றமென அறநூற்கள் எச்சரிக்கின்றன. பிறர் மனை நயத்தலில் வரும் அச்சம் மிகக் கொடியது[27]. பிறர் மனை நயப்பவன் அடுத்த பிறவியில் அலியாகப் பிறப்பான்[28]. வாழ்க்கையில் முதன்மையானவன் பிறர் மனையை விரும்பான்[29]. பிறர் மனை நோக்காப் பேராண்மை[30]. பிறர் மனை விரும்புதல் துன்பம் தரும்[31]. இரவில் பிறர்மனை சென்று இச்சித்து நிற்கும் காமுகன் அதனால் இறந்து விடுவான்[32]. பிறர் மனைவியுடன் உறவு கொள்வதைக் கண்டிக்கும் அறநூல்களின் போக்கை ஆராய்ந்திடும் போது, அன்றைய சமுதாயத்தில் நிலவிய குடும்ப அமைப்பின் தன்மையையும் கண்டறிய வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பெண் குடும்ப அமைப்பில் கீழான மதிப்பு பெற்றிருந்தாள் என்பதையே இது சுட்டுகிறது.

விலைமகளிருடனான உறவைக் கேவலப்படுத்துவதுடன் விலைமகளிரின் செயல்பாடுகளைக் கண்டிக்கும் அறக்கருத்துக்கள் நிரம்ப போதிக்கப்படுகின்றன. வேசி அல்லது விலைமகளை உருவாக்கிய சமூகம் / அரசு குறித்து எவ்விதமான அக்கறையுமில்லாமல், வேசி இழிவானவள் என்று கண்டிப்பது ஒரு பக்கச் சார்புடையது. ஒரு பெண் விலைமகளாக மாறியமைக்கான காரணங்களைக் கருத்தில் கொள்ளாமல், பெண்ணைப் போகம் அனுபவிப்பதற்கான உடல் என்று கருதும் போக்கு, அறநூல்களின் கருத்துக்களில் வெளிப்படுத்துகின்றது.

பெண்ணை உடல் ரீதியாக அணுகும் பார்வை, சிறந்த பெண்ணின் இலக்கணம், கற்புடைய மகளிர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்,

பிறன்மனை நயக்கும் செயல், விலை மகளிரின் கேவல நிலை போன்றன பற்றி அறநூல்கள் முன் வைக்கும் கருத்துகள், பெண்ணிய நோக்கில் கேள்விக்குள்ளாகின்றன. சங்கம் மருவிய கால கட்டத்தியக் கருத்தியலைப் பின்புலமாகக் கொண்டுள்ள அறநூல்கள் சித்திரிக்கும் பெண் பற்றிய மதிப்பீடுகள் மரபு வழிப்பட்டவையெனினும், இன்றையப் பெண்ணிய வாசிப்பில், அவை மதிப்பீட்டளவில் எதிர்மறையாக மாறுவதுதான் முக்கியமான அம்சம்.

சான்றாதாரம்

1. நாலடியார். 45	17. இனியவை நாற்பது. 2
2. மேலது. 46	18. சிறுபஞ்சமூலம். 2
3. மேலது. 17	19. திரிகடுகம் 1
4. நாண்மணிக்கடிகை. 90	20. ஆசாரக் கோவை. 25
5. மேலது. 11	21. திரிகடுகம். 17
6. சிறுபஞ்சமூலம். 13	22. மேலது. 66
7. மேலது. 59	23. நாலடியார். 381
8. திரிகடுகம். 47	24. நான்மணிக்கடிகை. 93
9. நான்மணிக்கடிகை. 20	25. ஆசாரக் கோவை. 42
10. மேலது. 57	26. திரிகடுகம். 64
11. மேலது. 887	27. நாலடியார். 82
12. மேலது. 91	28. மேலது. 85
13. மேலது. 22	29. ஏலாதி. 74
14. நாலடியார். 361	30. இனியவை நாற்பது. 15
15. முதுமொழிக்காஞ்சி. 26	31. இன்னா நாற்பது. 38
16. மேலது. 25	32. திரிகடுகம். 19

✲ ✲ ✲ ✲ ✲ ✲

இனியவை நாற்பது அமைப்பும் அறிவும்

க. தமிழமல்லன்
க.மு. கல்.இ.
புதுச்சேரி

தமிழில் உள்ள அறனிலக்கியங்கள் அதிகமானவை என்றும் அறத்தடுமாற்றம் நிகழ்ந்த கரணியத்தால்தான் இத்தகு நிலைமை ஏற்பட்டது என்றும் அறிஞர் சிலர் கூறுவதுண்டு. ஆனால் அஃது உண்மையாய் இருக்கவியலாது. தமிழ்க் குமுகாயம் மேலையர் போல் ஒரேயடியாய் நாகரிகம் என்னும் பெயரில் குதித்ததுமில்லை வீழ்ச்சியினால் கொதித்தமில்லை. நீண்ட காலமாகவே ஒரே சீராக இயங்கி வருவதைப் பார்க்க முடிகிறது.

அறம் நிலை குலைந்ததால் அத்தகு இலக்கியங்கள் பெருகின என்றால் முந்திய காலங்களைக் காட்டிலும் இப்போதுதான் அவை மிகுதியாகப் படைக்கப்பெற வேண்டும். இன்றைய பதினெண்கீழ்க்கணக்குகளைப் பார்க்கும் வாய்ப்பில்லையே.

அறனிலக்கியப் பெருக்கம்

தமிழில் அறனிலக்கியப் பெருக்கத்துக்கு,

1. திருக்குறளின் வெற்றி,
2. சமண மத நுழைவு

ஆகியவற்றைக் கரணியங்களாகச் சொல்லலாம்.

திருக்குறளில் சொல்லப்படுவது போல் அழுத்தமாகவும், உணர்ச்சிக் கொதிப்போடும் அடிப்படையை மாற்றும் விழைவோடும் பிற இலக்கியங்கள் கூறவில்லை. அவற்றின் பாடு பொருளைப் பட்டியலிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். திருக்குறளை ஓர் இலக்கியத்தின் வெளிப்பாடாய்த் திருவள்ளுவர் கையாண்டதனால் அதற்கு வலிமை மிகுதியாயிற்று.

இல்லுக்கு இனிது

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் பாடிய "இனியவை நாற்பது" இல்வாழ்க்கையை இனிதே நடத்துவதற்கு உதவியாகத்தான் இனியவற்றை உரைக்கின்றது. இனியவை நாற்பதில் நூற்றுக்கும் மேற்பட்ட இனியவைகள் கூறப்படுகின்றன.

இனியவை எல்லாம் தமிழ்க் குமுகாயத்தை வன்மையாய்ச் சாடியோ, புன்மையாய்த் தட்டியோ கூறப்படவில்லை. இயல்பாகவே பூதஞ்சேந்தனார் கூறிச் செல்கின்றார்.

கல்வி

நாற்பது பாடல்களிலும் மிகுதியாய்ச் சொல்லியுள்ள ஒரு கருத்து எதுவென்றால் - அது கல்வியாகத்தான் இருக்கிறது. கி. பி. 5 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியதாகச் சொல்லப்படும் இந்நூல் அதையும் தனிப்பட்ட முறையில் வலியுறுத்தாமல் பொதுவாகவும், மென்மையாகவுமே கூறிச் செல்கிறது. வடமொழிச் சார்பில் நின்று குலக்கல்வி கூறாமல் கல்வி கற்பதை வலியுறுத்தியது அதன் சிறப்பாய் அமைந்தது.

1. "பிச்சைபுக் காயினும் கற்றல் மிக இனிதே" (1)
2. "கற்றலிற் காழினியது இல்" (40)
3. "புலவர் தம் வாய்மொழி போற்றல் இனிதே" (20)
4. "கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே" (12)
5. "நாளும் நவைபோகான் கற்றல் மிக இனிதே" (3)
6. "கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே" (16)

என்னும் வகையிலே இனியவை நாற்பது கல்வி எண்ணங்களை வெளிப்படுத்தி உள்ளது.

அனைவருக்கும் கல்வி என்பதில் பூதஞ்சேந்தனார் சிறிது மாறுபட்டவர் போல் தெரிகிறார். பொதுவாகச் சில கருத்துக்களைக் கூறியவர் ஏழாவது பாட்டில் சிறப்பாகச் சொல்லியிருப்பதில் அக்குறிப்பை உய்த்துணர முடிகிறது.

" அந்தண ரோத்துடைமை ஆற்ற மிக இனிதே!"

"ஓத்து" என்பது வேதம். அதைப் பார்ப்பனர்கள் உடையவர்களாயிருக்க வேண்டும் என்று கூறுவதற்குத் தனிக்கரணியம் இருக்கலாம். " அது அவர்களுக்கு மட்டுமே உரியது" எனும் பழமைக் கருத்தை வலியுறுத்துவதாகவுங் கொள்ளலாம். ஆசிரியருக்கு அவர்களின் மேல் தனி மதிப்பும், அக்கறையும் இருந்திருக்க வேண்டும். அதை இருபத்தி மூன்றாவது பாட்டாலும் அறிய முடிகிறது.

ஈதல்

ஆவோடு பொன்னீதல் அந்தணர்க்கு முன். இனிதே (23) என்னும் கருத்து, புதுமையை நாடாமல் இடைக்கால ஏமாற்றை வழிமொழிவதாகவே அமைந்துள்ளது. இதில் ஒரு முரண்பாட்டையும் காணலாம்.

" எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது " (16)

என்று இரந்து வாழ்வதைத் தள்ளிய ஆசிரியர் இதை வாழ்க்கையாகக் கொண்ட பார்ப்பனர்க்கு ஆவையும், பொன்னையும் அளிக்க வேண்டும் என்று இனிமையாகக் கூறுதல் இன்னாதது அன்றோ?

தமிழ்நாட்டில் எந்த நன்மையைத் தொடங்குவதாயினும் தமிழ் மக்கள் பார்ப்பனர்களுக்குத் தானம் வழங்கித் தொடங்கவும், எந்தத் தீமைக்குக் கழுவாய் தேடுவதாய் இருந்தாலும் அவர்களுக்கு நெறிப்படித் தானம் வழங்கலும் வழக்கமாய்க் கொண்டுவிட்டார். அதனால் அரசர்களிடம் அளவில்லாப் பொன்னையும், பொருளையும் அவர்கள் கொள்ளைடித்து விட்டனர். அதை முதலில் மறித்தவன் மனுநீதிச் சோழன், தேர்க்காலில் பட்டுக் கன்று இறந்ததற்குக் கழுவாய் கூறப்பட்டது. " பொன்னால் ஆவொன்றைச் செய்து அதன்பின் பக்கமாய் நுழைந்து வாய் வழியாய் மனுநீதிச் சோழன் வெளிவர வேண்டும்" என்பதே அக்கழுவாய். அதனை மறுத்துத்தான் அச்சோழன் தன் மகனைத் தானே கொன்று கழுவாய் தேடினான். அவனும் துணிவாகப் பார்ப்பனர்களை ஒறுக்க முன் வரவில்லை. தனக்குத்தானே ஒறுப்பைக் கொடுத்துக் கொண்டான்.

அச்சூழலில் பூதஞ்சேந்தனன் கருத்து மதிப்புக் குறைவானதாக உள்ளது. இனியவை நாற்பது புலால் மறுத்தல், கடன் மறுத்தல், மானம் போற்றுதல் போன்ற பொதுவான கருத்துக்களையே பாடிச் செல்கிறது.

புதுமை

சில புதுமைக் கருத்துகள் இந்நூலில் கூறப்படுகின்றன.

1. " எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படும்
கற்றா உடையான் விருந்து" (38)

" பாலை மிகுதியாகக் கறக்கும் கன்றையுடைய ஆவுடையான் அளிக்கும் விருந்து மிகவும் இனிதாம்" என்று கூறுவது பிற தமிழ் இலக்கியம் எதிலும் கூறப்படாத கருத்தாகவே தோன்றுகிறது. பெரும்பான்மையான நூல்கள் விருந்தினரைப் பேணுவது பற்றித்தான் கூறுகின்றன. " யார் இல்லத்து விருந்து சிறந்தது?" என்பதை இனியவை நாற்பதில்தான் பார்க்கிறோம்.

2. " பிச்சைபுக் குண்டான் பிளிறாமை முன் இனிதே" (39)

பிறரிடம் இரந்துண்டு வாழ்பவன் சினங்கொள்ளக்கூடாது என்னும் அறிவுரை குமுகாயத் தாழ்ச்சியைத்தான் காட்டுகிறது.

" ஈயென இரத்தல் இழிந்தது "
" ஈயமாட்டேன் என்பது அதனினும் இழிந்தது "

என்னும் நிலையின் இறக்கத்தை " இரவு" , " இரவச்சம்" என்னும் அதிகாரங்கள் எதிரொலிக்கின்றன. திருவள்ளுவர் மிகவும் நாகரிகமாக அக்கருத்துக்களை அணுகினார். இரப்பவர் பற்றி அதிகம் பேசாமல் கரப்பவர் பற்றியே அவ்வாறு பேசினார். இருப்பவர் ஒளித்துக் கொள்ளாமல் தாமே கொடுக்குஞ் சூழலைக் குறளால் ஏற்படுத்தினார். ஒரு கருத்தாகத்தான் "இரப்பான் வெகுளாமை வேண்டும்" என்பதைச் சொன்னார். இந்நூல் ஆசிரியர் பூதஞ்சேந்தனார் அக்கருத்துக்களையே எதிரொலிக்கிறார் (26).

தனித்தமிழ்

ஏலாதி வடமொழிப்பெயர்கள் பலவற்றைப் புகுத்துகின்ற நூலாகும். ஆசாரக்கோவை வடநூலார் கருத்துக்களைக் கொண்ட நூலாகும். அந்நூல்களைப்போல் இல்லாமல் இனியவை நாற்பது பெரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களால் அமைந்த நூலாக விளங்குகிறது.

இதில் பிச்சை (1,39), பந்தம் (7), பங்கம் (9), மானிடவர் (13), தானியம் (17), மனிதர் (25), பாவம் (23) முதலிய சில வட சொற்களே காணப்படுகின்றன. தமிழாசிரியர் மகனாயிருந்ததால் பூதஞ்சேந்தனார் அவ்வாறு தனித்தமிழைப் பயன்படுத்தி இருக்கலாம்.

துணிவு

இந்நூல் துணிவான இரு கருத்துக்களைக் கூறியுள்ளது.

1. "தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகுமேல்
கொண்டடையா னாகல் இனிது" (7) என்பது எண்ணத்தக்கது.

"தந்தையாக இருந்தாலும் அடக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும். அவன் மனம் மொழிமெய்களை அடக்காமல் தீய வழிகளில் செலுத்துபவனாயிருத்தல் வேண்டும். அப்படி இல்லையென்றால் மகன் அவனுக்குக் கட்டுப்படத் தேவையில்லை." என்பது துணிவான கருத்தன்றோ?

"தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என்னும் பிடிப்புள்ள மண்ணில் பூதஞ்சேந்தனார் துணிவாய்க்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

2. இனியவை பட்டியலில் இருக்கும் இன்னொரு துணிவான கருத்து: "நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே" (10) என்பதாகும். மணவிலக்கு வழக்காறு இல்லாத அக்காலத்தில் கற்புச் சிறப்பில்லாப் பெண்களை விலக்கிவிடுதல் இனிது என்று கூறியுள்ளார். ஆண்களைப் பெண்களும் நீக்குதல் பற்றி ஒன்றுங் கூறவில்லையே எனச் சிலர் கேட்கக் கூடும். அதற்கு விடை கூறும் முறையிலே அடுத்த அடி அமைந்துள்ளது.

"மனமாண்பி லாதவரை யஞ்சி யகறல்
எனைமாண்புத் தான்இனிது நன்கு" (10) என்பது அவ்வடி.

பயன்பாடு

இன்றைய நிலையில் பெற்றோரைக் கைவிடும் போக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. பெற்றோரை வணங்கம் பண்பும் இல்லை. முதியோர் இல்லங்களில் மனம் முறிந்து கிடக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது.

"தாய் தந்தையரை ஒவ்வொரு நாளும் காலையில் கண்டு வணங்க வேண்டும். அவ்வாறு செய்தல் நல்லது" என்று இனியவை நாற்பது (18)

கூறும் கருத்து இன்றைக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதாகும்.

"ஆட்கொல்லி" நோய்பரவிவரும் காலம் இது. விலைமகளிரின் சேர்க்கையால் அந்நோய் பரவுகிறது. "அத்தகைய பெண்களை நஞ்சென்று உணர்தல் இனிது" என்கிறது இந்நூல். அதைப் பார்த்தால் எதிரான கருத்து வெற்றிபெறும் வகையில் அமைந்துள்ளது புலனாகும்.

"தடமென் பணைத்தோள் தளிரிய லாரை
விடமென்று உணர்தல் இனிது" (37) என்று அழகாகச் சொல்கிறார். அவருடைய அழகுணர்ச்சியில் உட்பொருள் இருக்கும் போலும்.

இனியவை நாற்பது கூறும் இனியவை பல இன்றைய வாழ்க்கைக்கும் தேவையானவையாக உள்ளன. அறநெறி அவல நிலையில் போகும் போதெல்லாம் இத்தகைய நாற்பதுகள் போல் நானூறுகள் தோன்றுதல் வேண்டும்.

* * * * * *

நாலடியாரில் விலங்குகள்

பேரா. சி. சேதுராமன்
எம்.ஏ., எம்.பில். பி.எட்., டி.பிடி.
தமிழ் விரிவுரையாளர்
மாமன்னர் கல்லூரி (தன்னாட்சி)
புதுக்கோட்டை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு அடுத்து அனைவராலும் போற்றப்படும் நூல் நாலடியாராகும். பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில், நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி என்று பாராட்டப்பெறும் சிறப்புக்குரியன நாலடியாரும் திருக்குறளுமாகும். நாலடியார் சொற்பொழிவும், கருத்துச்செறிவும் கொண்ட அறப் பெட்டகமாகத் திகழ்கிறது. நாலடியாரை இயற்றிய சமண முனிவர்கள் உயிரினங்களின் இயல்புகள், அவற்றின் செயல்பாடுகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு வாழ்வியற் கருத்துகளை விளக்கியுள்ளனர். நாலடியாரில் விலங்கின் இயல்புகளை வைத்து எங்ஙனம் அறக்கருத்துக்கள் விளக்கப் பெற்றுள்ளன என்பது குறித்து இக்கட்டுரை விரித்துரைக்கிறது.

பசு, கன்று

நாலடியாரில் பசுவின் கன்று, உயிரினப் பசுவின் கன்று, இளம் காளைக் கன்றுகள் (எருதுகள்) போன்றவற்றின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. பசுக்களில் இருந்து கிடைக்கப்பெறும் பால், நெய் போன்ற உணவுப் பொருட்களின் தன்மையும் மனிதரின் இயல்பை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பல பசுக்களுக்கு இடையே கொண்டு போய் இளம் கன்றை விட்டாலும் அவ்விளம் கன்றானது தன் தாய்ப் பசுவைத் தேடிச் சென்றடையும் என இளம்கன்றின் இயல்பினைக் கூறி பழவினை (முன்செய்தவினை) யும் கன்றைப்போல் தன்னைச் செய்தவனைத் தேடிச் சென்றடையும் என்று பழவினையின் தன்மையினை அழகுற நாலடியார் எடுத்தியம்புகிறது (பா.101). பழவினையின் வலிமைக்கும், தன்மைக்கும், இளம் கன்றின் இயல்பினை உவமை கூறி விளக்கி இருப்பது சிறப்பிற்குரியது. கல்லாதவராக இருந்தாலும் அவரிடம் செல்வம் இருப்பதனால் அவர் கூறுவனவற்றிற்குப் பிறர் மதிப்பளிப்பர். இது உலக இயல்பு. இந்த மெய்ம்மையை, இளம் கன்றாக இருந்தாலும் உயிரினப் பசுவின் கன்று அதிக விலைபெறும் என்று உலக நடைமுறையை வைத்து நாலடியார்

விளக்குகிறது. செல்வம் உடையவரையே இவ்வுலகம் பாராட்டும் என்ற உலக உண்மையை உலக வழக்கைக் கொண்டே ஈண்டு விளங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது (115)

அறத்தைச் செய்யும் முறைகள் வெவ்வேறாக இருப்பினும் அவை ஒன்று தான். அது போன்றே பசுக்கள் பல்வேறு நிறங்கள் கொண்டவையாக இருப்பினும் அவை தரும் பாலின் நிறம் வெண்மை தான் என்று பாலை வைத்து அறத்தினியல்பையும், செய்யும் முறைகளையும் விளக்கி இருப்பது (118) "பல மதங்களிருப்பினும் அவை வலியுறுத்தும் அறச்செயல் ஒன்றே" எனும் இராம கிருஷ்ண பரமஹம்சரின் கருத்தை ஒத்திருக்கிறது.

காட்டுப்பசு

காட்டுப்பசுவானது தன்னைத் தாக்க வரும் விலங்கையோ மனிதரையோ நாவால் நக்கி அவற்றை உயிரிழக்கச் செய்யும். இக்காட்டுப் பசுவைப் போன்றவர்கள் பொதுமகளிர் (377). காட்டுப் பசுவின் செயல் பொதுமகளிரின் செயலுக்கு உவமை கூறப்பட்டுள்ளமை சிந்தனைக்குரிய தொன்றாகும்.

பசுவின் நெய், சிற்றெருதுகளின் இயல்பு போன்றவற்றைக் கூறி, கூடா நட்பு, கீழ்மையின் தன்மைகள் (239, 350) நாலடியாரில் விளக்கப் பெற்றுள்ளன.

யானை, நாய்

யானை நினைவாற்றல் உள்ள விலங்காகும். கூர்மையான பார்வையை உடையது. தனக்குச் சிறு துன்பம் விளைவித்தாலும் அதை நினைவில் வைத்துக் கொண்டு தனது பாகனையே அழித்துவிடும் இயல்புடையது. நாய் நன்றியுடைய விலங்காகும். நாயை, அதனை வளர்ப்பவர் அடித்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு தன் நன்றியைக் காட்டும் இயல்புடையது. நட்புச் செய்வதற்குரியவரை ஆராய்தல் பற்றிக் கூறப் போந்த நாலடியார் யானை போன்றவரின் நட்பை விட நாய் போன்றவரின் நட்பைக் கொள்ள வேண்டும் என இயம்புகிறது (213).

நாயை வளர்ப்பவன் நாய்க்குப் பொன் பாத்திரத்தில் நல்ல உணவை வைத்துக் கொடுத்து வளர்த்தாலும், நாயானது பிறருடைய எச்சில் உணவைப் பெறுவதற்கு அவர் முகத்தையே எதிர்பார்த்திருக்கும். இவ்வுவமை, கீழ்மக்களால் செய்யப்படும் செயல்கள் பிறரால் மதித்துப் போற்றப்பட்டாலும் அவ்வாறு மதித்துப் போற்றப்பட்டதற்கு மாறானவையாக இருக்கும் என்ற கருத்தை விளக்குவதற்காகக் கையாளப்பட்டுள்ளது. (345)

பாம்பு

பாம்பு என்றால் படையும் நடுங்கும். நாகம் படமெடுத்தாடும் இயல்பினை உடையது. இடியைக்கண்டு அஞ்சும் தன்மை கொண்டதாகும் என நாகப்பாம்பின் இயல்புகளைக் கூறி (66, 87, 164, 240) மனிதருடைய செயல்பாடுகள் நாலடியாரில் விளக்கப்பட்டுள்ளன. பிறன் மனைவியைக் கூடி இன்பம் துய்ப்பவனின் இன்பத்தை

"பாம்பின் தலை நக்கியன்ன துடைத்து" (87)

என்கிறது நாலடியார்.

பாம்பின் தலை வழுவழுப்பானது. அருவருப்பானது. பிறன்மனை நயந்து இன்புறுவாரின் செயலும் இதற்கு ஒப்பானதே. இதனை

"ஏதில் பிணம் தழீஇயற்று" என்பார் வள்ளுவர்.

சிங்கம், புலி

சிங்கம் மிகுந்த பசியுடனிருந்தாலும் புல்லைத் தின்னாது. சிங்கத்தைப் போன்று, வறுமையுற்றிருந்தாலும் உயர்குடியில் பிறந்தோர் ஒழுக்கத்தினின்று தவறி நடக்க மாட்டார்கள். இதனை

"அரிமா கொழிப்புல் கறிக்குமோ மற்று" (பா. 141)

என விளக்குகிறது நாலடியார். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என இவ்வுவமை இன்று வழக்கில் வழங்கப்படுகிறது.

புலி தான் வீழ்த்திய களிறு தனக்கு இடப்புறம் வீழ்ந்தால் உண்ணாது உயிர்விடும் இயல்புடையது. அதுபோன்று

"வானகம் கையுறினும் வேண்டார் - விழுமியோர்
மானம் மழுங்கவரின்" (பா. 300)

எனச் சான்றோரின் இயல்பு நாலடியாரில் விளக்கமுறுகிறது.

மான் X குதிரை, பன்றி X யானை

குதிரையும், யானையும் போர்க்களத்தில் போர் செய்வதில் வல்லவை. மானும், பன்றியும் போர்க்களத்துடன் தொடர்புடையன அல்ல. அதுபோல் செல்வாக்குடைய நிலையிலிருந்தாலும், கீழ்க்குடியில் பிறந்தார் பிறருக்கு எதுவும் உதவிகள் செய்யமாட்டார் என்ற அவரது இயல்பினை,

"புல்வாய் பருமம் பொறுப்பினும் பாய்பரிமாபோல்
பொருமுரண் ஆற்றுதலன்று" (149)

என்றும், கீழானவரின் கயமைத் தன்மையினைக் கூறும்போது,

"பன்றி செயிர் வேழமாகுதலின்று" (358) என்றும் பன்றியின் இயல்பினைக் கூறி விளக்குகிறார். ஈண்டு உயர்ந்தோருக்குக் குதிரையும், யானையும் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளன.

ஆமை

"ஆசையே துன்பத்திற்குக் காரணம்" என்பார் புத்தர். "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்பார் திருமூலர். இவ்வுலக உயிர்களும் பேதைமையால் ஆசை வயப்பட்டு அல்லலுறுகின்றன.

இதனை

"கொலைஞர் உலையேற்றுத் தீமடுப்ப ஆமை
நிலையறியா தந்நீர் படிந்தாயிற்றே" (பா. 331)

என்ற ஆமையின் செயலைக் கூறி நாலடியார் விளக்குகின்றது. இதில் ஆமையின் செயல் பேதையாரின் செயலுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

முடிவுகள்

நாலடியாரில் விலங்குகளின் தன்மை கொண்டு மனிதர்களின் குணம் விளக்கப்பட்டுள்ளது.

வாழ்வில் விலங்குகள் பயன்படுகின்ற நிலை கூறி மனிதர்கள் சமூகத்திற்குப் பயன்படும் நிலை விளக்கப்பட்டுள்ளது (குதிரை, யானை செயல்).

விலங்குகள் நடந்து கொள்ளும் இயல்பு, மனிதன் பிறரிடம் நடந்து கொள்ளும் நடத்தைக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

நாலடியாரில் பசு, கன்று போன்றவை பற்றி ஐந்து இடங்களிலும், பாம்பினியல்புகள் நான்கு இடங்களிலும், நாயினியல்புகள் ஐந்து இடங்களிலும், சிங்கம், புலி, மான், குதிரை, யானை, பன்றி, காட்டுப்பசு, ஆமை போன்றவற்றின் இயல்புகள் ஒவ்வோரிடத்திலும் கூறப்பட்டு மனிதர் இயல்புகளும் அறக் கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன.

✡ ✡ ✡ ✡ ✡ ✡

பொய்கையாரின் வெற்றி

முனைவர் **ஜே. ரோசுலெட்**

க. செ. கல்லூரி,
மேலைச்சிவபுரி.

உலகவாழ்க்கையில் பெற வேண்டிய அறம், பொருள், இன்பம் பொதிந்து பாடப்பட்டன கீழ்க்கணக்கு நூல்கள். இவற்றுள் போரொன்றை நிகழ்வாகக் கொண்டு பாடப்பட்ட நூல் களவழி நாற்பதாகும். பொதுவாக ஏர்க்களம் போர்க்களம் பற்றிய இருவழிகளிலும் களவழிப்பாடல்கள் உண்டு. இதனை,

"ஏரோர் களவழி அன்றியும் களவழி
தேரோர் தோற்றிய வென்றியும்" - தொல் - 1022

எனத் தொல்காப்பியம் பேசும். தொல்காப்பிய உரைகாரர் இளம்பூரணர் களம்பாடியதற்குக் களவழிச் செய்யுளையே உவமையாகக் காட்டியுள்ளார்.

பெயர்க்காரணம்

களவழி நாற்பது போர்க்களம் பற்றிய பாடல்களின் தொகுதி. இத்தொகுதிப் பாடல்கள் அட்டகளத்து, பொருதகளத்து, பெய்தகளத்து, வீழ்ந்த களத்து என முடிவடைகின்றன. போர்க்கள நிகழ்ச்சி மட்டுமே நூலினுள் இடம் பெறுவதால் களவழி என்றும் பாடல்களின் தொகை நாற்பது என்பதால் களவழி நாற்பது என்றும் நிகழ்வாலும் எண்ணாலும் இந்நூல் பெயர் பெற்றது.

போர்க்காரணம்

ஏட்டுச்சுவடியில் களவழி நாற்பது பாடப்பெற்றதன் காரணம் தெளிவுற காணப்படுகிறது. இதனை நூலின் இறுதியில் பழைய உரைகாரர்கள் பதிவு செய்துள்ளனர்.

"சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிக் கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடு கொண்ட களவழி நாற்பது முற்றிற்று" என எழுதப்பெற்றுள்ளது. இக்குறிப்புரையாலேயே சோழன் செங்கணானுக்கும் சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் போர்நேர்ந்தமை தெளிவு. பொய்கையார் களவழிப்பாடிச் சேரனை விடுவிக்கச் செய்த ஏட்டுச்சுவடிச் செய்தியைக்,

"களவழி கவிதை பொய்யுரை செய்ய வுதியன்
கால்வழித் தளையை வெட்டியர சிட்ட வவனும்" - கலிங் - 195

எனக் கலிங்கத்துப் பரணியும்,

"மேதக்க பொய்கை கவி கொண்டு வில்லவனைப்
பாதத் தளை விட்ட பார்த்திபனும்"

விக்கிரம- 14

என விக்கிரமச் சோழனுலாவும் விளக்குகின்றன. இத் தொடர்கள் தரும் சொற்களாம் உதியன், வில்லவன் என்போர் சேர அரசர்களாம்.

சேர, சோழர்களின் போர்நிகழ்ச்சியை உரைக்கும் பொய்கையார் சேரரின் பெயரையோ சோழரின் பெயரையோ யாண்டும் சுட்டவில்லை. நூலினுள் செய்யுள் தோறும் செங்கண்மால், செங்கட்சினமால், புனல்நாடன், காவிரிநாடன் எனச் சோழ அரசன் வருவான். நாற்பது பாடல்களுள்ளும் ஓரிடத்து மட்டுமே வஞ்சிக்கோ எனச் சேர அரசனைக் காணலாம்.

"..................... புனல் நாடன்
வஞ்சிக்கோ அட்ட களத்து"
"..................... புனல் நாடன்
கொங்கரை அட்ட களத்து"

எனும் அடிகள் சேர அரசனையும் சேரனுக்குத் துணையாக வந்த கொங்கரையும் குறித்து நிற்பன. 'புனல் நாடன்' என்பதால் சோழன் வெற்றிகண்டான் என்பது தெரிகிறது. மேலும் காவிரி நாடன் கழுமலம் கொண்ட நாள் என்ற தொடர் கழுமலம் என்னும் இடத்தில் சேர, சோழரின் போர் நிகழ்வை வெளிப்படுத்தும்.

கழுமலம் என்னும் ஊர் கணையன் ஆட்சியில் இருந்தது (அகம்.44) என்றும் இவ்வூர் சேரர்க்குரியது (அகம்.270) என்றும் குடவாயில் கீரத்தனார் அறைவர். கழுமலம் என்ற இடத்தில் போரிட்டவர்களுடைய ஊர் குட்ட நாட்டில் உள்ளது எனத் திருவிதாங்கூர் கல்வெட்டுப் பேசும் (T.A.S. Vol III பக் 10,20). குட்ட நாட்டிலுள்ள கழுமலம் என்னும் ஊர் கணையனுக்குப் பின்னர்க் கணையனூரானதைப் பேரா. ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுவர். இவையெல்லாம் காவிரி நாடன் சேரருக்குரிய கழுமலம் என்னும் ஊரைக் கைப்பற்றியமையை அரண்படுத்துகின்றன.

"நற்றேர்க் குட்டுவன் கழுமலத்தன்ன",

என்ற அகநானூற்றடி கழுமலம் சேரநாட்டின் ஊராகவே பாடுகிறது. கழுமலத்தினைச் சோழன் கைப்பற்றினான் என்பதனைக்,

"காவிரி நாடன் கழுமலம் கொண்ட நாள்" (36)

என்ற வரி விளக்கும். சங்ககாலந் தொட்டே சோழனுக்குச் செம்பியன் என்ற பெயர் வழக்கிலிருந்தது. சிபியின் வழியினர் வடமொழியினரால் சைப்பியன்

ஆக்கப்பட்டனர். சைப்பியன் பேச்சு மொழியில் நாளடைவில் திரிந்து செம்பியனானது.

களநிகழ்ச்சி

பொய்கையார் போர்க்களத்தின் கொடுமையை மிகச்சிறப்பாகக் காட்டியுள்ளார். களவழி நாற்பதில் யானைப்படைச் செய்திகள் 25 பாடல்களிலும் காலாள் படை குறிப்புகள் 9 பாடல்களிலும் குதிரைப்படை பற்றியன இரண்டு பாடல்களிலும் தேர்ப்படை அமைப்பு ஒரு பாடலிலும் வருகின்றன.

சேரனின் படையுள் தலைமையும் அளவை மிகுதியும் யானைப் படைக்கே உண்டு. இதனால் யானைகளின் அழிவுச் செய்திகள் மிக்கப் பாடல்களில் வர நேர்ந்தது. போர்க்களத்தில் யானையோடு யானை மோத பிணக்குவியல் எண் திசையும் மலையென நின்றன. யானைகள் மீது அம்புகள் தோயத்தோய அவை செம்மலையாயின. மற்றோரிடத்து ஆசிரியர்

"அஞ்சனக் குன்றேய்க்கும் யானை அமருழக்கி
இங்குலிகக் குன்றேபோல் தோன்றும்." (7)

என மருட்கை எழுப்புவர். போரில் துணியுண்ட உடற்குறைகளை வாயில் கவ்விக் கொண்டு வானிடைப் பறந்தன பருந்துகள். செங்குருதி வெள்ளத்திடை பிணங்கள் மிதவையாயின எனப் போர்க்கள வருணனை அடுக்குகள் மிகுதியுண்டு.

பொய்கையாரின் வெற்றி

வீரத்தமிழனின் நெஞ்சில் உறைந்த மந்திரம் போர் இதனை,

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத்தியற்கை". - புறம் - 76

எனப் புறநானூற்றுப் புலவன் பொதுமைப்படுத்துவான். இயற்கையஞ்சும் மனிதனின் இப்போர் வெறியின் கருவிகள் ஆளுக்கு ஆள் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன. புத்தர், இயேசு போன்றோர் அன்பென்னும் ஆயுதம்ஏந்தி வென்று நின்றனர். அறநெறிப்போரின் ஆயுதமாக அகிம்சையை ஏந்தினார் மகாத்மா காந்தியடிகள். அரசர்களின் போர் முயற்சியைச் சந்தென்னும் சதுரையால் வாகையாக்கிய சங்கப்புலவர்கள் பல்லோர் உண்டு. அவர்கள் கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார், புல்லாற்றூர் எயிற்றியனார், கபிலர், ஔவையார், அரிசில்கிழார் எனப்பட்டியலிடப்படுவர். பொய்கையார் தமிழ்ப்பாக்களால் சோழனின் வன்னெஞ்சை ஈரமாக்கி வெற்றி மேவுகின்றார்.

கழுமலப் போரின் வன்மையினையும் அழிவினையும் பாடும் பொய்கையார் பாவிடை நூல்போலக் கல்லுக்குள் ஈரம்பாயும் சொற்களை இடையிடையே மிடைந்து செல்லுகின்றார்.

பொய்கையார் சேரனின் கெழுதகை நண்பர். சேர அரசர்களைப் பற்றிய பொய்கையாரின் புறநானூற்றுப் பாடல்கள் அவர் தம் பெயர்களைச் சுட்டவில்லை. ஆனால் சேரனுக்கும் பொய்கைப் புலவருக்குமுரிய நட்பின் ஆழத்தினை,

"கானலந் தொண்டி அஃதெம்மூரே" - புறம் 48

எனவும்,

"அவனெம் இறைவன்" - புறம் 48

எனவும் அழகாகப் பதித்துள்ளமை கற்காலம். சேரனின் உரே தம்மூரெனவும் அவனே தம்மிறை எனவும் கூறும் பொய்கையாரின் உரிமை வேட்கைப் புலப்படும்.

போர்க்கள அழிவைப் பொய்கையார் பாடுகையில் சோழர்களின் அழிவை மிகுத்துச் சுட்டாமல் மென்மையாகச் சொல்லியும் சேரர்தம் அழிவுகளையே அடுக்கியும் மிகுத்தும் பாடுவர். இதனை ஓர் மனமாற்ற உத்தியாகவே பொய்கையார் ஆளுமையோடு கையாளுகிறார் எனலாம். கலிங்கத்துப் போரின் கோரக்காட்சியே அசோகனின் வன்மன மாற்றத்திற்கும் ஈரநெஞ்சிற்கும் வழிகோலியது. அங்ஙன் சோழனும் இப்பாடல்களைக் கேட்டு மனம் மாறுதல் வேண்டும் என்பதே பொய்கையாரின் உள்ளக்கிடை என்பது வெள்ளிடை மலையாகும். இதோ

"கடிகாவில் கால்துற் றெறிய வெடிபட்டு
வீற்றுவீற் றோடும் மயிலினம்போல் - நாற்றிசையும்
கேளிர் இழந்தார் அலறுபவே செங்கண்
சினமால் பொருத களத்து". (29)

எனப்பாடுவார். காற்றால் அலைப்புண்ட மயில்களைப்போலப் போரில் கணவனை இழந்த மகளிர் அழுதுமாளும் காட்சியைப் பொய்கையாரின் மொழிநடை கொடுமனத்தினரையும் இரக்கங் கொள்ளச் செய்யும்.

என் தோள் வலியாலும் வாள் வலியாலும் நான் பெற்ற பேரரசு நொடிப்பொழுதில் மறைந்து விட்டது என்று ஹெலினாத் தீவில் சிறைப்பட்டிருந்த நெப்போலியன் புலம்பலில் காணலாம். தன் பேரரசு மறைந்து விட்டதற்காக வருந்தும் நெப்போலியன் வாளில்லாமல் படையின்றிக் கிறித்து பெருமான் அமைத்தத் தனிப்பேரரசு நிலைபெற்றிருக்கிறதே என்று வியக்கின்றான். இங்கு வன்முறையால் ஈட்டிய வெற்றி நிலைகெட்டதையும் அருண்முறையால் பெற்ற வெற்றி நிலைபேறுற்றதையும் அறியலாம். இத்தகைய ஒரு அறிவைச் சோழனுக்குப் புகட்டவே பொய்கையார் முனைப்போடு பாடுபட்டுள்ளார்.

பகைவனைக் கொடுஞ்சொல்லால் சாடும்போது அவன் மாட்டு கழிவிரக்கம் ஏற்படும் எனக்கருதிய பொய்கையார் சேரனைச் சுட்டும் போதெல்லாம் நண்பன் என்ற கெழுமையைக் கரந்த நெஞ்சோடும் வெளிப்படையாகப் பகைவர், அடங்கார், உடற்றியார், ஒன்னார், காய்ந்தார், கூடார், செற்றார், தப்பியார், துன்னார், தெவ்வர், நண்ணார், நேரார், பொருந்தார், புல்லார், மாற்றார், மைந்திகந்தார், மேவார் எனவும் பல்வகைச் சொற்களால் சோழன் மகிழப் பாடியுள்ளார். இது பொய்கையார் போன்ற தமிழ்ச் சான்றோருக்கு ஏற்புடைய நெறியா? பொய்யுரை புலவரும் உள்ளொன்று கொண்டு பேசிய புறம் பேச்சாகாதா அன்று. மயக்கமில்லா வாய்மையிடத்துப் புகழ் மாசு அல்லாத புரைதீர்ந்த கிளவியாகக் கொள்க. இங்குச் செங்கண்சினமால் மன்னனைப் பக்குவப்படுத்தும் நோக்குடன் சொற்களைப் பெய்துள்ளார் பொய்கையார்.

முரசு உமிழும் குருதிக்குச் செங்குளத்து நீர்த்தூம்பு உமிழும் செந்நீர் உவமிக்கப்படுவது புனல்நாடன் சமாதானத்துறையில் தன் எண்ணத்தைச் செலுத்த இடமிருக்கிறது என்பதனைக் காட்டும் நுட்பமேயாகும். போர்க்களத்தில் முழங்கும் போர் முரசுகளுடன் மழைக்குரல் முரசும் பூந்தார் முரசுமாகிய சமாதான முரசுகளையும் அடுக்கிப் பேசுகிறார் பொய்கையார். சோழனின் போர் நிகழ்வால் நாற்றிசையும் பிணம் பிறங்குவது போரின் கொடுமைகளைக் காட்டினும் 'அருமணிப்பூண் ஏந்து எழில் மார்பு' என்ற கவிஞரின் கூற்றே சோழன் ஆழ்மனதில் புதையுண்டு கிடக்கும் அருளைத் தட்டி எழுப்பி வெளிக்கொணர்ந்தது என்ற எண்ணத்தை நமக்குத் தருகிறது.

கழுமலம் என்னும் போர்க்களத்தில் குதிரைகள் உதைத்தலால் பகையரசர்களின் குடைகள் கீழ்மேலாகவும் மேல் கீழாகவும் சிதறி, சிதைந்து கிடப்பதைக் கண்டார் புலவர் அக்காட்சியை அரசனுக்குக் காட்ட விழைந்தவர்

> "மாஉதைப்ப மாற்றார் குடையெலாம் கீழ்மேலாய்
> ஆஉதை காளாம்பி போன்ற" (36)

என்ற உவமை மூலம் விளக்குகின்றார். குதிரைகள் உதைத்த பகைவர்களின் குடைகளின் சிதைவினை "ஆ" உதைத்தக் காளானைக் கூறி மன்னனின் சிந்தனையில் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டார். காளான் உயிர்ச்சிதைவு பசு அறியாதது போலப் போரில் மாற்றானின் அழிவையும் பெருமையையும் உன் குதிரைகள் அறியாது எனக் குதிரைமேல் ஏற்றிச் சோழனின் எண்ணப் பொறியை இயக்கி விட்டுள்ளார் புலவர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப் படுபவர்கள் மிதக்கும் சிறுதுரும்பைக்கூடப் பற்றுக்கோடாகக் கொண்டு கரையேறத் துடிப்பதுபோல

இரத்த வெள்ளம் இழுத்துச் செல்லும் களிற்றுக் கோடுகளை ஊன்றுகோலாகப் பற்றி எழும் தளர்ந்தோர் காட்சி வேந்தனைக் கழிவிரக்கம் கொள்ளச் செய்யும் காட்சியாகும்.

"ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக் கோடுன்றி யெழுவர்
மழைக்குரல் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை அட்ட களத்து." - (3)

இங்கு 'மழைக்குரல் மாமுரசு' என்ற சொல்லோட்டம் அரசனின் கொடைமையையும் தியாக உணர்வையும் நீதிநெறியையும் நினைவூட்டுகின்றன. இறுதிச் செய்யுளில் பொய்கையார் பெய்து வைத்துள்ள "மாநிலம் கூறும்மறை " என்னும் சொற்களே சோழனைத் தன்வயப்படுத்தும் மந்திரச் சொற்களாகும். பொதுவாகக் குருக்களிடம் சீடர்கள் உபதேசம் பெறுவது உலக நெறி. ஆனால் உன்நாட்டில் விலங்கினங்களான யானைகளும் குதிரைகளும் கூட நிலமகளிடம் அறிவுரைகேளும் செவியின ஆயின. அப்படியிருக்க இவற்றையெல்லாம் தன் வெண் கொற்றக் குடையில் நிழல் தந்து காக்கும் சோழ நின் செவிகள் சான்றோருரைக்கு நன் செவிகளாகும். அறிவுரையேலா வன் செவிகளா அன்றன்று என அழகுற பொய்கையார் சோழனை ஒரு மூளை சலவைப்படுத்தி விடுகிறார்.

செம்பியனின் செங்கண் சிவத்தலால் களத்தில் நிகழ்ந்த கொடுமைகளை அடுக்கி அக்கண்கள் அன்பாலும் அருளாலும் கசிந்து சிவக்க வேண்டுமென நெகிழ்வை ஊற்றெடுக்கச் செய்கிறார் புலவர். சோழமன்னன் ஈடிணையில்லா மாவீரன்; அவன் அசோகனாக மாறவில்லையாயினும் பொய்கையாரின் சமாதான முயற்சியும் செய்திகளை எடுத்துரைக்கும் உத்தியும் அவன் நெஞ்சில் கனிவைத்தந்து பகைவனுக்கும் அருளும் பண்பாளனாக்கின. அதன் வெளிப்பாடு புலவர் நண்பர் சேரனின் விடுதலை. இது புலவர் வெற்றியன்றி வேறென்ன?. இங்குக் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று புலவரின் அறிவாண்மையால் எளிதில் முடிந்தது. இங்கு உயிர்கொலை இல்லை; உறுப்பு துணிப்பு இல்லை; கோர நிகழ்வில்லை. அன்பே ஓங்கி அருளாட்சி செய்தது. இந்நெறியில் முன்னோடியாகப் பொய்கையாரைக் கொள்வதில் இடரொன்றுமில்லை.

* * * * * *

பழமொழியில் விலங்கினங்கள்

முனைவர் **பழ. சிதம்பரம்**
தேர்வுநிலை விரிவுரையாளர்
கணேசர் செந்தமிழ்க்கல்லூரி, மேலைச்சிவபுரி
புதுக்கோட்டை மாவட்டம்

முன்னோரின் வாழ்க்கை அனுபவங்களில் தோன்றித் தொடர்ந்து வழங்கும் " பழைய வாக்குகள் " பழமொழிகள் . அவை, மக்களின் நல்வாழ்விற்குதவும் அறிவொளி விளக்கங்கள். பழமொழிக்கு "முதுமொழி" என்னும் பெயரும் உண்டு.

முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

" நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப "
(பொருள். 489)

என வரையறுத்துள்ளார். இவ்வகையில் அமைந்த பழமொழிகளை நிலைப்படுத்தவும் அவற்றினடிப்படையில் ஒழுக்கங்களை நிலைப்படுத்தவும் முயன்ற முன்றுறை அரையனார், " பழமொழி நானூறு " என்ற நூலை உருவாக்கினார். முதலிரண்டு அடிகளில் அறக்கருத்தையும், இறுதியில் அக்கருத்தை வலியுறுத்தும் பழமொழியையும் அமைத்துள்ளார்.

விலங்குகளின் வாழ்விலிருந்து வழிகள் பல காட்டி மனித வாழ்வைச் சிறப்புறச் செய்யும் முறை முற்காலத்திலிருந்தே இருந்துள்ளது. சங்க இலக்கியங்கள் உள்ளுறையாக - இறைச்சியாக அகப் பொருட்கூறுகளை விலங்குகள் வழி உணர்த்துகின்றன. நீதி இலக்கியங்களும் அவ்வாறே அறக்கருத்துக்களைக் கூறுகின்றன.

முன்றுறை அறையனார் " பழமொழி நானூறின் " ஐம்பத்து மூன்று பாடல்களில் விலங்குகளின் வழியாக அறக்கருத்துக்களைக் கூறியுள்ளார். அவற்றுள் வீட்டு விலங்குகளும் வளர்ப்பு விலங்குகளும் காட்டு விலங்குகளும் இடம் பெற்றுள்ளன. வீட்டு விலங்கு வளர்ப்பு விலங்குகளின் வழியே மிகுதியாகவும், காட்டு விலங்குகளின் வழி சிறிதளவாகவும் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. வீட்டு விலங்குகளுள் மக்களுக்கு மிக உதவியாக உள்ளவை ஆனிரைகள். இவை அக்கால மக்களால் செல்வமாக மதிக்கப்பெற்றவை. எனவே இவை குறித்த பழமொழிகள் மிகுதியாக இடம்பெறல் இயல்பே.

எருது

ஆனிரைகளுள் ஆணினம் எருது, ஏறு, மூரி, புல்லம் என்ற பெயர்களால் சுட்டப்பெற்றுள்ளது. மூரி என்பது பொலிகாளையையும், கிழட்டெருதையும் குறிக்கின்றது. "ஊரறியா மூரியோ இல்" (91) என்ற பழமொழி பொலிகாளையின் தன்மையைக்காட்டி அதுபோலச் செருக்கித் திரியும் புல்லறிவாளரைச் சுட்டி அவர் தொடர்பைக் கைவிட அறிவுறுத்துகிறது. "மூரி உழுதுவிடல்" (368), "மூரியைத் தீற்றிய புல்" (369) ஆகிய பழமொழிகள் கிழட்டெருதின் செயலைக்காட்டி, முறையே சோம்பல் உடையானிடம் வேலை வாங்க இயலாது என்பதையும், குடிச்சிறப்பு இல்லாதவனிடம் பொருள் சிறக்காது என்பதையும் உணர்த்துகின்றன.

"வாங்கும் எருதாங்கு எழாஅமைச் சாக்காடு எழல்" (383), "எருத்திலிட வைக்கோல் தினல்" (97), "உண்ணா இரண்டேறு ஒரு துறையுள் நீர்" (73), "புல்லத்தைப் புல்லம் புறம் புல்லுமாறு" (315), "இழவன்று எருதுண்ட உப்பு" (56) ஆகிய இப்பழமொழிகள் காளையின் இயல்பைச் சுட்டுவதோடு, முறையே வீரச்செயல் எதுவும் செய்யாதவன், தனக்குப் பரிசில் தரவில்லை என வேந்தனை நோவதால் பயனில்லை போர்ச் செருக்குடைய இருபெருவேந்தர்க்கிடையே ஒருவன் பயன்கொள்ள இயலாது, அரசனிடம் பற்றுடையவன் அவ்வரசனுக்குப் பகையானவரிடம் சேர மாட்டான், அறிவுடைய ஒருவன் சிறந்த அறிவுடைய பிறரையும் தன் பக்கமாகச் சேர்த்துக் கொள்வது சிறந்தது, ஒரு செயலைச் செய்வதற்கு உரியவராகக் கற்றவரைத் தேர்ந்து கொண்டால் அவர் உடைமையாளரைக் கலவாது காரியம் செய்தாலும் உடைமைக்காரருக்கு நட்டமாகாது என்னும் கருத்துக்களையும் தருகின்றன.

பசுவும், கன்றும்

"கன்று விட்டு ஆக்கறக்கம் போழ்தில் கறவானாய் அம்புவிட்டு ஆக்கறக்குமாறு" (13), "பசுக்குத்தின் குத்துவாறில்" (285), "யாருளரோ தங்கன்று சாக்கறப்பார்" (376), "அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு" (4), "ஆற்றவும் போற்றப்படாதாகிப் புல்லின்றி மேயினும் ஏற்றக்கன்று ஏறாய் விடும்" (106) என்பன பசுவும், கன்றும் இடம்பெற்ற பழமொழிகள். இவைமுறையே, பிறர் மனம் நோகக்காரியம் செய்யக்கூடாது. கீழோர் பேச்சுக்கு எதிர் பேசார் சான்றோர். தன்னால் உயர்வடைந்த நண்பனிடத்துக் குற்றம் காணினும் அவனை விட்டு நீங்கக்கூடாது. உள்ளூரார் அறிந்த சிறு முதலாயினும் முயற்சி செய்து வாழ்ந்தால் சிறப்புப் பெறலாம். நல்லகுடியில் பிறந்தவர் என்றும் தம் குடிச்சிறப்பிலிருந்து மாறார் என்னும் அறக்கருத்துக்களை உணர்த்துகின்றன.

எருமை

"எருமை எறிந்தொருவர் காய்க்கு லோபிக்குமாறு" (98) என்னும் பழமொழி இன்சொல் இல்லாத கொடை மதிப்புப் பெறாது என்பதை உணர்த்துகிறது. எருமையைக் கொன்று சமைத்து விருந்து வைத்தல் உண்டு என்பது இப்பழமொழியால் பெறப்படுகிறது.

ஆடு

வெள்ளாடு தன் வாதநோயைத்தீர்க்க இயலாது. ஆனால் பிறருக்கு வந்த வாதநோயைத் தீர்க்கும் என்பர் (397). அதுபோன்றே ஒருவர் தன் குறையை நீக்காது பிறர் குறையை நீக்கச் செல்வதும் அமையும். "இறக்கும் ஆட்டைச் சம்மதம் கேட்டு உண்பவர் இல்லை" (62). அதுபோலக்காரியம் முடிக்கத் தகுதியற்றவரை, அவரின் தகுதியின்மையைச் சுட்டிக்காட்டி, விளக்க வேண்டியதில்லை. "வாய்முன்னதாக வலிப்பினும் போகாதே நாய்ப்பின்ன தாகத்தகற்" (334) தனக்குப் பின்னே வரும் நாய்க்கு அஞ்சி, முன்னே ஒருவன் ஆட்டைக்கட்டி இழுத்தாலும் அது அவன் பின்னே போகாது. அதுபோல் தக்க துணை இருக்குமானால் வலிமையுள்ள பகைவரினும் துன்பமில்லை.

நாய்

வளர்ப்புப் பிராணிகளுள் நன்றியுடையது நாய். காவலையும் செய்யக் கூடியது. எனினும் இழிந்த செயல்களால் இழிந்த விலங்காகக் கருதப்படுகிறது.

நாயின் நன்றியுடைமையையும், காக்குந்திறனையும் உணர்த்தும் வகையில் பின்வரும் பழமொழிகள் உள்ளன. "தீற்றாதோ நாய் நட்டால் நல்ல முயல் ?" (239), "கிடைநாயிற் கென்பிடுமாறு ?" (43), "சிறிதேனும் இன்னாது இருவர் உடனாடல் நாய்" (67) வேட்டை நாயிடம் அன்பு காட்டினால் அது நல்ல முயலையும் கொண்டு வந்து தரும். எனவே யாரோடு நட்பு கொள்ளலாம். கிடைக்கக் காவலாக இருக்கும் நாய்க்கு எலும்பு இட்டால் அது காவலைச் செய்யாது. அதுபோலப் பகைவரின் துணைவரை நட்பாக்கிக் கொண்டால் பகையை எளிதில் வெல்லலாம். ஒரு வேட்டை நாயைக் கொண்டு இருவர் வேட்டையாடல் துன்பத்தைத் தரும். அதுபோல ஒருவர் கூறிய கருத்தை ஒரே சமயத்தில் ஒருவர் தான் மறுக்கவேண்டுமேயன்றிப் பலர் மறுத்துப் பேசுதல் பண்பாகாது.

நாயின் இழிவு நிலையைச் சுட்டும் வகையில் "நாய் மேல் தவிசிடுமாறு" (261), "நாய்கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு" (258), "போற்றான் கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும் உடையானைக் கவ்விவிடும்" (129), "நாய் பெற்ற தெங்கம் பழம்" (260), "புலம்புகின் தீ நாய் எழுப்புமாம் எண்கு" (232), "திங்களை நாய் குரைத்தற்று" (228)

ஆகிய பழமொழிகள் உள்ளன. இவை முறையே, சிறுமதியாளரைச் சிறப்பித்தாலும் அவர் அதற்குத் தகுதி உடையவராக மாட்டார்; நல்லுரையை யார் கூறினும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஒருவரைப் பலரறிய இகழ்ந்தால் அவர் எதிர்ப்பார்; கருமியின் செல்வம் அவனுக்கும் பிறர்க்கும் பயன்படாது; பெரியோரைச் சார்ந்தவரைப் பகைத்தல் தீதாகும்; பெரியோரைச் சிறியோர் இகழ்வதால் பெரியோரின் பெருமை குன்றாது; சிறியோர் தான் அவமானம் அடைவர்; என்னும் அறக் கருத்துக்களைத் தருகின்றன.

மேலும், "நாய்வால் திருந்துதல் என்றுமோ இல்" (262), "நாய் காணின் கற்காணவாறு" (257), "நாய் கவ்வின் போர்த்து நாய் கவ்வினார் இல்" (259), "புலித்தலையை நாய் மோத்தல் இல்" (311), "அடுப்பின் கலிடமுடங்கும் நாயைப் புலியாம் எனல்" (8) என்னும் பழமொழிகளும் நாய் பற்றியனவாக உள்ளன. இவை, நிறையில்லாத பெண்ணைக்காக்க இயலாது; நல்ல செயல்களைக் காலம் கருதாது உடன் செய்தல் வேண்டும்; இல்லையெனில் செய்ய இயலாது; தீமை செய்த அறிவிலிக்கு மீண்டும் தீமை செய்யார் சான்றோர்; பெரியோர் வாடி வறுமையுற்றாலும் சிறியோர் அவரை அணுகும் தகுதி பெறார்; குடிப்பெருமை இல்லாரின் தோற்றங்கண்டு அவரைப் புகழ்வது பொய்யான புகழ்ச்சியாகும் என்னும் செய்திகளைத் தருகின்றன.

பூனை

வீட்டில் எலித்தொல்லை நீங்க உதவுவது பூனை. வீட்டில் எலி இல்லையாயின் பூனையும் பால் பெறாது (318). அதுபோல வலிய பகை இல்லை எனில் அரசனிடம் படையாளர்க்கு வேலை இல்லை. ஒருவரின் பணி தேவையானபோது தான் அவரைக் கவனிப்பர் என்ற கருத்தையும் இப்பழமொழி உணர்த்துகிறது. மீனைக் காயப் போட்ட இடத்தில் பூனையைக் காவல் வைத்தால் அது மீனைத் தின்றுவிடும் (319). அதுபோலக் கயவர்களிடத்துச் செயலை ஒப்படைத்தால் அவர் அனைத்தையும் அழித்துவிடுவர்.

குதிரை

போர்க்களத்தில் சிறப்பிடம் பெறும் விலங்கு குதிரை. அதன் இயல்பை "வாடியக்கண்ணும் பெருங்குதிரை யாப்புள் வேறாகி விடும்" (384) என்ற பழமொழி காட்டுகிறது. இதன்மூலம் குடிப்பிறப்பு எக்காலத்தும் சிறப்புறும் என்பது சுட்டப் பெறுகிறது.

காட்டு விலங்குகள்

யானை, குரங்கு, நரி, புலி ஆகிய காட்டு விலங்குகள் பழமொழியுள் கூறப்பெற்றுள்ளன.

யானை

யானை மிகப்பெரிய உடல் கொண்டது. அவ்வுடல் வாயினுள் நுழைந்த பின் அதன் சிறிய வால் போகாமல் இருக்காது. ஆயினும் "யானை போய் வால் போகாவாறு" (377) என்னும் பழமொழி கூறப்பெறுகிறது. அதன்மூலம், பொருள் சுற்றம் முதலியவற்றை விட்டவர்கள் உடலிச்சையான சில பற்றுக்களைக் கொண்டிருக்கும் நிலை சுட்டப்பெற்றுள்ளது. "யானைப்பல் காண்பான் பகல் நகையாகும்" (248) என்னும் பழமொழி மானம் நாணமறியாதவர் ஞானமுடையோரிடத்தில் சென்று ஞானம் பேசுவது நகைப்பிற்குரியதாகும் என்பதை உணர்த்துகிறது. அறிவால் அறிவாளரை வசப்படுத்த முடியும்; அறிவற்றோரால் அவரைச் சேர இயலாது என்ற கருத்தை "யானையால் யானை யாத்தற்று" (378) என்னும் பழமொழி உணர்த்துகிறது. "எருக்கு மறைந்து யானையை மதம் ஏற்றுதல்" (96), "பிடிப்பூன்றி முடவன் யானையோடு உறவாடுதல்" (354) ஆகிய பழமொழிகள் பெரியோரை இகழ்பவரின் செயலைக் காட்டுகின்றன. "யானை தொடு உண்ணின் மூடுங்கலம் இல்லை" (55) என்னும் பழமொழி அரசன் கொடுங்கோலன் ஆயின் தடுக்க வழியில்லை என்பதை உணர்த்துகிறது.

குரங்கு

குரங்குச் சேட்டை என்பது அனைவரும் அறிந்தது. ஆயினும் பெரிய குரங்கு முதலில் சிறிய குரங்கின் கையை விட்டுத்துழாவிச் சூடறிந்து கொள்ளும் செயல் (190) புதுமையாக உள்ளது. பகைவரை முதலில் தான் வெல்லக்கருதாது, பிற பகைகளைத் தூண்டி விட்டுப் பின் வெல்வது எளிது என்பதைக் காட்ட அப்பழமொழி கூறப்பெற்றுள்ளது.

தூயன அல்லாதவனிடத்துள்ள செல்வம் சிறப்புறாது என்பதையும், கீழ்த்தரமான குடிகளுள் பண்புடையாரைக் காண இயலாது என்பதையும் பின்வரும் பழமொழிகள் முறையே உணர்த்துகின்றன. "குரங்கின் கைக் கொள்ளி கொடுத்து விடல்" (154), "குரங்கினுள் நல்முகத்ததில்" (155).

நரி

நாயைப்போன்றே நரியும் கீழான விலங்காகக் கருதப்பெறுகிறது. அது ஊளையிடல் பயனற்றது (251) என்றும் அதனைக் கொல்ல பெருமுயற்சி தேவையில்லை (163) என்றும் நரிக்கு உணவு கிடைக்க நல்லகாலம் கெட்டகாலம் என்பது கிடையாது (252) என்றும் கூறப்பெறுகிறது. இவற்றின் மூலம் முறையே அவமதிப்போரைச் செயலாலேயே அடக்க வேண்டுமே யன்றிச் சொல்லால் எதிர்ப்பதில் பயனில்லை என்பதும், சிறியோர் பிழையைப் பெரியோர் கருதுதல் கூடாது என்பதும், கல்வியறிவு இல்லாத கயமைக்குணம் கொண்டோர் எக்காலத்தும் தீயனவே செய்வர் என்பதும் பெறப்படுகின்றன.

மேலும், " நரி நக்கிற்றென்று கடல் அறுமோ " (30), " பயனுள்ள நெல்லரிவார்க்குக் காட்டார் நரி " (19) என்ற பழமொழிகளின் மூலம் மிகுதியான செல்வம் உடையோர் ஏவலர்களின் சிறு களவைப் பொருட் படுத்தக்கூடாது என்பதும், அறிவுடையோர் பயனற்ற அறிவற்றோர் கூட்டத்தில் சேரக்கூடாது என்பதும் உணர்த்தப்பெறுகின்றன.

புலி

" பசி பெரிதாயினும் புன் மேயாதாகும் புலி " (284), " புதர்க்குப் புலியும் வலியே புலிக்குப் புதரும் வலியாய் விடும் " (308), " புலிமுகத்து உண்ணி பறித்துவிடல் " (312), " பாயும் புலி முன்னர் புல்வாய்க்குப் போக்கு இல் " (313), " எழுப்புபவோ துஞ்சு புலியைத் துயில் " (100) என்பன புலியைக் குறித்த பழமொழிகள். இவை முறையே பின்வரும் கருத்துக்களைத் தருகின்றன. உயர்பண்பினர் தன் நிலையிலிருந்து தளர்ச்சி அடையார். பொருளைப் பேணுபவனுக்குப் பொருளால் சிறப்பும், பொருளுக்குப் பேணுபவனால் காப்பும் கிடைக்கிறது. யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சிறப்பே. கயவர்க்கு இரக்கப்படுதல் தீமை பயக்கும். தீய அரசனின் முன்சினம் கொள்ளுதல் இயலாது. அவன் கோபத்தைக் கிளறியவர் அழிவர்.

முடிவுரை

இவ்வாறு வீட்டு விலங்குகளாகிய எருது (8), பசு, கன்று (5), ஆடு (3), எருமை (1) ஆகியவை குறித்துப் பதினேழு இடங்களிலும், வளர்ப்பு விலங்குகளாகிய நாய் (14), பூனை (2), குதிரை (1) ஆகியன பற்றிப் பதினேழு இடங்களிலும், காட்டு விலங்குகளாகிய யானை (6), குரங்கு (3), நரி (5), புலி (5) ஆகியன பற்றிப் பத்தொன்பது இடங்களிலும் ஆக ஐம்பத்து மூன்று இடங்களில் பழமொழிகளும் அவற்றின் வழி அறக்கருத்துக்களும் கூறப்பெற்றுள்ளன.

* * * * * *

ஏலாதி கூறும் அறம்

ம. செல்வராசு
விரிவுரையாளர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.
புதுக்கோட்டை மாவட்டம்

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் பல்வேறு ஆய்வுகள் தோன்றியிருக்கின்றன. ஆனால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒரு சில ஆய்வுகளே வெளிவந்துள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதியில் கூறப்பட்டுள்ள அறங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறத்தைப் பற்றிக் கூறுவது 12 நூல்கள். அகத்தைப் பற்றிக் கூறுவது 6 நூல்கள். சங்க இலக்கியம் அகம், புறம் பற்றிய செய்திகளைக் கொண்டிருக்க, கீழ்க்கணக்கு நூல்களில் பல அறங்களை மட்டுமே வலியுறுத்தக் காரணம் என்ன என்று தெரியவில்லை. கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலம் களப்பிரர் காலம் எனத் தமிழ் இலக்கிய வரலாறு கூறுகிறது. இந்தக் களப்பிரர்கள் யார்? இவர்களது ஆட்சி காலத்தில் மனித அறங்கள் அழிந்தனவா? அல்லது ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட போது மனித வாழ்க்கை ஒழுங்கற்று இருந்தனவா! என்பதற்கு விடை இல்லை.

கீழ்க்கணக்கு நூல்களில் மருந்து பெயர்களில் உள்ளவை மூன்று. அவை, ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் என்பன. இவற்றுள் ஏலாதி என்பது ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறு பொருள்கள் ஒரு குறிப்பிட்ட அளவோடு சேர்க்கப்பட்ட ஒரு வகைச் சூரணம். இம்மருந்து உடலுக்கு வலிமையையும், புத்துணர்ச்சியையும் தருவது போல ஏலாதியில் கூறப்பட்ட ஆறு கருத்துக்களும் வாழ்க்கைக்கு இன்பம் தருவன. இந்நூலை இயற்றியவர் கணிதமேதவியார்.

மனித வாழ்க்கையின் பகுதிகளான இல்லறம், துறவறம், வீடுபேறு ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கத் தேவையான கருத்துக்களை இந்நூல் எடுத்துக்கூறுகிறது.

1:1 அரசர்களைப் பற்றியது

ஒருவன் அரசனாவதற்குச் செய்ய வேண்டிய அறங்கள் என்னென்ன என்பவை 42, 44, 45, 46, 47,48, 56 - 59, 70, 80 ஆகிய பாடல்களில் கூறப்பட்டுள்ளன. பிற உயிர்களைக் கொல்லாமை, கொல்வாரோடு சேராமை, கள் உண்ணாமை, செருக்குக் கொள்ளாதவன்,

தன் குடும்பத்தை நல்ல நிலையில் வைத்துப் பிறர்க்கு உதவுபவன், சான்றோரின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பவன். பணிவினை உடையவன், அனைவருக்கும் உணவு கொடுப்பவன், அரசனாக வீற்றிருந்து நாட்டை ஆள்வான்.

"பொய்யான் பொய் மேவான் புலால் உண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்து வாலடிசில் - நையாதே
ஈத்துண்பான் ஆகும் இருங்கடல்சூழ் மன்னரசாய்ப்
பாத்துண்பான் ஏத்துண்பான் பாடு.

(ஏலாதி - 44)

சங்க நூல்களில் அரசர்களைப் பற்றியும், அவர்களின் குடும்பம், கொடை, வீரம் முதலியவற்றைப்பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளனர். பின்தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களில் அரசர்களைப் பற்றியும், அரசுகளைப் பற்றியும் தெளிவாகக் கூறப்பெறவில்லை. அரச பதவி என்பது வாரிசுமுறைப்படி இருந்ததாகச் சங்க இலக்கியம் கூறுகிறது. ஆனால் கீழ்க்கணக்கு நூல்களில் இது பற்றிய செய்தியில்லை. யார் ஒருவர் மேற்கண்ட அறங்களைக் செய்கிறார்களோ அவர்களே அரசராவார்கள் என ஏலாதி கூறுகிறது.

1:2. தனிமனித அறம்

ஒவ்வொரு மனிதனும் அறம் செய்து வாழ வேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய அறங்கள் 2,4,5,6,7,8,71 ஆகிய பாடல்களில் கூறப்பட்டுள்ளன. கொலை செய்யாமை, புலால் உண்ணாமை, பிறர்க்குத் துன்பம் செய்யாமை, பிறர் துன்பத்தை நீக்குதல், பழித்தற்குரிய ஒழுக்கத்தினின்று நீங்குதல், பல பெண்களின் வழிச் செல்லாமை, பணிவுடன் இருத்தல், நல்ல நண்பரைப்பெறுதல் ஆகியன.

"இன்சொல் அளாவல்இடம் இனிதூண் யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்தேய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து"

(ஏலாதி - 7)

தனிமனிதன் என்று சொன்னால் பெண்ணைக் குறிக்காமல் ஆணைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. பெண்ணை முன்னிலைப் படுத்தி ஆணுக்குச் சொல்லப்பட்டது. பெண்ணிற்குத் தனியே ஏன் சொல்லப்படவில்லை என்று சிந்தித்துப் பார்ப்போமானால் ஒரு குடும்பத்தில் ஆண் செய்கின்ற கடமைகளில் பெண்ணிற்குச் சமபங்குண்டு. மற்றொன்று ஆண்கள் தங்கள் கடமைகளிலும், ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கினால் அந்நாடு எல்லா வகையிலும் சிறந்து விளங்கும். அதனால் பெண்கள் எதுவும் தனித்து

செய்ய வேண்டுவதில்லை. எனவே ஆண்கள் தான் அறத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருக்க வேண்டும் எனக் கீழ்க்கணக்கு நூல்கள் கூறுகின்றன.

தனிமனிதன் சரியாக இருந்தால் குடும்பமும் சரியாக இருக்கும். குடும்பம் சிறப்பாக விளங்க; செய்ய வேண்டிய அறங்கள் 50, 51, 52, 53, 54, 55 ஆகிய பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

"எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்தாடை
வள்ளே துணியே இவற்றோடு - கொள்ளென
அன்புற்(று) அசனம் கொடுத்தான் துணையினோ(டு)
இன்புற்று வாழ்வான் இயைந்து".

(ஏலாதி - 50)

வீட்டை இழந்தவர்கள், கண்ணை இழந்தவர்கள், அனாதைகள், கை, கால் இழந்தவர்கள், நோயால் துன்புற்றவர்கள் ஆகியோருக்கு உதவி செய்தால் அவர்களுடைய குடும்பம் சிறந்து விளங்கும்.

வீடுபேறு

ஒரு மனிதனுக்கு இறந்த பின்னும் பிறப்பு உண்டு. அப்பிறப்பு ஏதேனும் ஓர் உயிராக இருக்கலாம். அவ்வாறு பிறப்பு ஏற்படுமானால் மீண்டும் துன்பத்தை அனுபவிக்க நேரிடும். ஆதலால் பிறப்பைத் தவிர்த்து இறைவன் திருவடியை அடைவதே வீடுபேறாகும். வீடுபேறு அடைவதற்கு தான தருமங்களைச் செய்ய வேண்டும் என ஏலாதி கூறுகிறது.

"உயர்ந்தான் தலைவனென்(று) ஒப்படைத்தான் நோக்கி
உயர்ந்தான் நூல் ஓதி ஒடுங்கி - உயர்ந்தான்
அருந்தவம் ஆற்றச் செயின் வீடாம் என்றார்
பெருந்தவம் செய்தார் பெரிது" - (ஏலாதி - 64)

வாழ்க்கையை வீணேகழிக்காமல் நற்செயல்களைச் செய்தல், சான்றோர் கூறிய முறைப்படி நடத்தல் ஆகியன வீடுபேறு அடைவதற்கு உரிய வழிகளாகும். அறியாமையால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்கள் உண்டாகும். அறிவு நூல்களை உணராதவன் செயல்கள் பிறப்பினை உண்டாக்கும். பிறப்பால் உணரப்படாத ஒன்பது பெரிய துன்பங்கள் தொடர்ந்து வரும்.

அவை. 1. உயிரும், 2. உயிரில்லாதனவும், 3.புண்ணியமும், 4. பாவமும், 5. முற்றும், 6. செறிப்பும், 7. கட்டும், 8. முதிர்ப்பும், 9. வீடும் பிறவித்துன்பத்தை நீக்க வீடு பேறு அடைய வேண்டும் என ஏலாதி கூறிய கருத்தே பிற்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் அதிகம் பேசப்பட்டன.

பிறசெய்திகள்

வீடு பேற்றையும், துறவறத்தையும் பற்றிக் கூறினாலும் இல்லறமே சிறந்தது என ஏலாதியில் - கூறப்பட்டுள்ளது. நல்லறங்களைச் செய்யக் கூடியவர்கள் இல் வாழ்க்கையில் உள்ளவர்களே. எனவே அறத்தில் தலையாயது இல்லறமே.

"துறந்தார்கண் துன்னித் துறவார்க்(கு) இடுதல்
இறந்தார்க்(கு) இனிய இசைத்தல் - இறந்தார்
மறுதலை சுற்றம் மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே இனிது". (ஏனாதி - 16)

பொது மகளிரை விரும்பாமை, கள் உண்ணாமை என்பன ஒரு மனிதனுக்கு தலையாய கடமையாகும். பரத்தையர் ஒழுக்கம், என்பதும் கள் உண்ணுதல் என்பதும் சங்க கால சமுதாயத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அதற்குப் பின்னர்த் தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் உள்ளிட்ட அனைத்திலும் மேற்கண்ட · இரு ஒழுக்கமும் செய்யக்கூடாதவை என்று பேசப்படுகின்றன. சங்ககாலத்திற்குப் பின்திய சமுதாயத்தில் ஒழுக்கக்கேடுகள் அதிகமாக இருந்திருக்கும். இந்நிலையைச் சீர் செய்யவே அற இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றியுள்ளன.

"மின்னேர் இடையார்சொல் தேறான் விழைவோரான்
கொன்னே வெகுளான் . . . . . ." (ஏனாதி - 20)

பெண்களுக்குக் கொடுத்த அடைமொழிகள்

பூங்கோதாய், மதுமலிபூங்கோதாய், வேயன்ன தோளாய், முருந்தேய்க்கும் முட்போல் - எயிற்றினாய், நூற்பட்பார் பூங்கோதாய், கயலியலுண் கண்ணாய், பால்போலும் சொல்லினாய், மையேர் தடங்கண் மயிலன்னாய் சாயலே, அலையறை மையென நீள் கண்ணாய், மத்தமயிலன்ன சாயலாய், பூவாதி வண்டு தேர்ந்து துண்குழலாய், கூந்தல் மயிலன்னாய், கொவ்வைபோல் செவ்வாயாய், பண்ணாளும் சொல்லாய், காதுதாழ் வன்மகர வார்குழையாய், மாவலந்த நோக்கினாய், ஒல்லுவ நல்ல உருவவேல் கண்ணினாய் எனப் பல அடைமொழிகள் பெண்ணிற்குக் கொடுத்து அவர்களை வர்ணித்துக் கூறுவது போலப் பதினேழு பாடல்கள் உள்ளன.

பெண்கள் மகா மீன்வடிவ ஆபரணங்களைத் தம் காதில் சூடுவர் என்பதும் பழங்காலத்தில் சுறாமீன் வடிவ தோரண வாயிலையுடைய மாளிகை இருந்தது என்பதும், இந்தியாவின் பழங்காலப் பெயர் நாவலந்தீவு என்பதும் ஏலாதியில் காணக் கிடக்கின்றன.

மனிதனுக்குத் தேவையான ஆறு அறக்கருத்துக்களைக் கூறும் நூல் ஏலாதி. ஏலாதியில் மொத்தம் என்பது (80) பாடல்கள் உள்ளன. இதில் இரண்டு பாடல்கள் 18, 19 மட்டும் ஏழு கருத்துக்களைக் கூறுகின்றன.

முடிவு

ஏலாதி 80 பாடல்களைக் கொண்ட சிறிய நூலாக இருந்தாலும் இதில் கூறப்பட்ட கருத்துக்கள் மனி த வாழ்க்கையை வளம் பெறச் செய்வன. கீழ்க்கணக்கு நூல்கள் பெண்களைப்பற்றி அதிகம் பேசவில்லை. அதற்கான காரணம் நமக்குச் சரியாகத் தெரியவில்லை என்றாலும் சங்க கால மகளிரைப்போலச் சிறப்புற்று விளங்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏலாதி அறங்களைப் பற்றி மட்டும் கூறும் நூலாக இருந்தாலும் சில அறிய செய்திகளும் அதிலிருந்து கிடைக்கின்றன.

* * * * * *

முதுமொழிக்காஞ்சி உணர்த்தும் வாழ்வியற்சிந்தனைகள்

சேதுபதி
முதுகலை – தமிழ்விரிவுரையாளர்
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி – 1

மனம்மொழி மெய்களால் இயங்கும் மனிதவாழ்வுக்கு வேண்டிய செம்மை நெறிகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன நீதிநூல்கள். அவற்றுள் தலைநிற்பது திருக்குறள். அதனைவிடவும் அளவிற்குறைந்து, ஓரடியில் வாழ்வியல் நெறி உணர்த்தும் அறநூல் முதுமொழிக்காஞ்சி.

முதுமொழி என்பது பழமொழி என்னும் பொருள் தருவது. மூதுரை என்பதும் இதுவே. காஞ்சி என்பது பலவகை நிலையாமையைக் குறிப்பது என்று தொல்காப்பியம் கூறும். முதுமொழிக் காஞ்சி நூல், தொல்காப்பியரின் காஞ்சித் திணைக்குப் பொருந்துவதாய் இல்லை. புறப்பொருள் வெண்பா மாலை 'முதுமொழிக் காஞ்சி ' என்று ஒரு துறை கூறுகிறது.

> "பலர் புகழ் புலவர் பன்னினர் தெரியும்
> உலகியல் பொருள் முடிவு உணரக்கூறின்று"

என்பது துறை விளக்கம். முதுமொழிக்காஞ்சி நூற்பொருள் இத்துறைக்குப் பொருந்துகிறது[1] என்கிறார் டாக்டர் பூவண்ணன்.

கி.பி. 5ம் நூற்றாண்டைச் சார்ந்த மதுரைக் கூடலூர்க்கிழார் இயற்றிய இந்நூல், தற்கால வாழ்வியலுக்கும் வழிகாட்டத்தக்க சிந்தனைகள் கொண்டிருப்பது குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதுமொழிக்காஞ்சி உணர்த்தும் வாழ்வியற்சிந்தனைகள்

பிறப்பில் தொடங்கி இறப்பில் முடியும் மனிதர்களின் வாழ்க்கைக்காலம் இவ்வுலகு. 'இன்னாதம்ம இவ்வுலகம்' என்கிறது புறநானூறு. இதனிடை இனிமை கண்டு வாழப்பழகுவது மனித அறிவு. அன்றாட வாழ்வில் உழன்று அலுத்தும் சலித்தும் பலர் புலம்புவது போல, வாழ்க்கை ஒன்றும் துன்பமயமானது இல்லை; அவ்வாறு தோன்றுவது பொய்; அதனை மெய் என்று நம்புவது சிற்றறிவு என்று பொருள்பட,

> "பேரறிவினான் இனிது வாழாமை பொய்" (71)

என்கிறது முதுமொழிக்காஞ்சி.

'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்கிறது திருக்குறள். உணர்ச்சி மயமான வாழ்வில் ஆழ்ந்துவிடாது எப்போதும் விழிப்புடன் இருக்க

மெய்ப்பொருள் காணும் அறிவு - மனிதர்க்குத் தேவை. இத்தகு அறிவில்லாதவன் பிணத்துக்கு ஒப்பாவான் என்பதை,

"உணர்வினான் ஆதலிற் சாக்காடு இல்லை" (மு. மொ. கா. 66)

என்னும் பாடலடி உணர்த்துகிறது.

காண்டல், கேட்டல், கருதுதல் முதலான பல நிலைகளிலும் இத்தகு அறிவு தேவை. இந்த அறிவு ஆராய்ச்சியின் பாற்பட்டது. எதனையும் ஆய்ந்தாய்ந்து கொள்ளும் அறிவு தேவை. அதுவே வாழ்வின் அடித்தளம். இனிய வாழ்வினை விரும்பும் எவனும் இத்தகு அறிவு ஆராய்ச்சியினை நீக்க மாட்டான் என்கிறது முதுமொழிக்காஞ்சி. இதனை

"வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்" (95)

என்னும் பாடல் அடியால் உணரலாம்.

எனவே வாழ்வாங்கு வாழ ஆராய்ச்சியாகிய சூழ்ச்சி தேவை. சூழ்ச்சி வழி பெருகும் பேரறிவு, வாழ்வை இனிமையுடைதாக்கும் என்பது தெளிவு.

இத்தகு பேரறிவு, நூலறிவு, உலகறிவு, உயத்துணரும் அறிவு எனப்பலவகைப்படும். அறிவின் தொகுப்பாக அமைவது கல்வி. கற்றல் மனிதகுலத்தேவை. அதுவே ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதகுலத்தைத் தனித்து உயர்த்தி நிற்கிறது.

வாழ்வியல் கல்வி

"கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று. . . . மாறாக, ஒழுக்கம் அளிப்பது, மன வலிமையைத் தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன்வலிமை கொண்டு தன்னம்பிக்கையுடன் இருக்கச் செய்வது ஆகிய இவற்றை அளிக்கும் கல்வியே நமக்கு வேண்டும்[2] என்கிறார் சுவாமி விவேகாநந்தர். முதுமொழிக்காஞ்சியும்,

"ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை" (1)

என்று பேசுகிறது.

"அகலக்கற்பதை விட ஆழக்கற்றல் சிறந்தது" என்பார் டாக்டர் மு.வ. இற்றைப்போக்கில் நுனிப்பில் மேய்வது போல, பலபடவிரியும் செய்திகளை - பாடங்களை உள்வாங்கலே கல்வி என்னும் நிலைக்கு மாற்றுத்தேடும்போக்கு விரிகிறது. ஒன்று பற்றி ஆழக்கற்கும் நெறி மிகுகிறது. அத்தகையோர் கல்வியில் மேம்பாடு உடையவர் எனக்கருதும் சூழல் அமைகிறது. அவர்கள் மேதையர் ஆவர். அவர்க்கு உரிய பண்பாக,

"மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை" (3)

என்று விளக்குகிறது முதுமொழிக்காஞ்சி.

இவ்வாறு கற்பதை விடவும் கற்றாரை வழிபடுதல் அதனினும் சிறந்தன்று என்கிறது. இங்கு வழிபடுதல் என்பது வணங்குதல் என்று ஒற்றைப்பொருள் தருவதன்று; அவ்வழி நிற்றல் என்பதாம்; வழிபடுதல் - வழியில் நிற்றல். 'கசடறக் கற்றுக் கற்றவழி நிற்றல்' என்னும் குறள் வழி விரித்து, கற்றார் வழி நிற்றல் என்று பொருள் கொள்ளலாம்.

கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான் என்கிறது முதுமொழிக்காஞ்சி (93)

இவ்வாறு கற்ற கல்வி, கற்றோனின் தோற்றத்தில் வெளிப்படும்; அவனது வாழ்வில் தோன்றும் இடையூறுகளைக் களைய மேற்கொள்ளும் முயற்சிகளும் வெளிப்படும் என்கிறது இந்நூல் (24). இத்தகு பயன்முறைக் கல்வியே (Applied Education) இன்றைக்குப் பெரிதும் தேவை எனப் பேசுகிறது கல்வியுகம். பிறப்பால் தோன்றிய உயர்வு தாழ்வுகளை மெல்லக்களைந்து, பொதுவாயும், சிறப்பாயும், கல்வி உயர்த்திவிடும் என்பதை, குலனுடைமையின் கற்புச்சிறந்தன்று (மு.மொ.கா. 7) என்ற அடி விளக்குகிறது. ஈங்கு கற்புஎனும் சொல் கல்வியைக் குறித்து நிற்கிறது.

இன்னும் கற்றலுக்கு நுட்பப்பொருள் தருவதாக அமையும் தொடர் "நேராது கற்றது கல்வி யன்று (மு.மொ.கா.56) என்பது நேராமல் - என்ற சொல்லுக்கு 'ஆசிரியனுக்குப் பொருள் ஒன்றும் தராமல்' என்று பொருள்படுத்துவதை விடவும் தெளிவு தரும்படி அனுபவித்துக்கல்லாமல் பெற்ற கல்வி எனப் பொருள் கொள்வது பொருத்தப்பாடுடையது. பரிசோதனையாக (Experimental) அனுபவப்பூர்வமாக (Practical) கற்கும் இன்றைய கல்வி உலகப்போக்கிற்கு வழிகோலுவதாக அமைகிறது முதுமொழிக்காஞ்சியின் கல்வி குறித்த சிந்தனை.

இத்தகு கல்வி வாழ்வியல் நிலையில், தனிமனித, சமுதாய ஒழுகலாறுகளை வளப்படுத்துமாறு அமைவதைப் பின்வரக்காணலாம்.

தனிமனித வாழ்வியல்

தனிமரம் தோப்பாகாது எனினும் தனிமரம் இன்றேல் தோப்பும் இல்லை. அது போல ஒட்டுமொத்த சமுதாய அமைப்பும், ஒழுக்கத்தைப் பின்பற்றவேண்டுமானால் தனி மனித வாழ்விலும் ஒழுக்கத்தைப் பின்பற்றியாதல் வேண்டும். அவ்வழி ஒழுக்கத்திற்கேற்ற கல்வி முறையினை வலியுறுத்தும் முதுமொழிக்காஞ்சி, தனிமனித, சமுதாய ஒழுக்கங்கட்கான அறநெறிகளையும் வகுத்தளிக்கின்றது.

மனம், மொழி, செயல், ஆகிய நிலைகளில் இயங்கும் தனிமனிதன் பேண வேண்டிய ஒழுக்கங்களுள் தலையாயது தூய்மை. மனத்தூய்மை,

மொழித்தூய்மை, வினைத்தூய்மை ஆகியன இன்பந்தரு வாழ்வின் அடிப்பொருள்கள். மனத்தூய்மை, உடல் தூய்மை வழிப்படுவது; மொழித்தூய்மை மனத்தூய்மை வழிப்படுவது; வினைத்தூய்மை, மனம் மற்றும் உடல், மொழி ஆகியவற்றின் வழி அமைவது. இவற்றுக்கான ஒழுகலாறுகளாகப் பின்வரு நெறிகளை வகுத்தளிக்கிறது இந்நூல். அவையாவன

உடல் நலம் பேணல், மனத்தூய்மை கொள்ளல், கள்ளுண்ணாமை, ஆசை விலக்கல், சிறுமை தவிர்த்தல், சினப்படாது ஒழிதல், கோள் கூறாமை, பழி தூற்றாமை, காமவெறி நீத்தல், காலம் பேணல், தற்காத்தல், சொற்காத்தல் முதலியனவாம்.

சமுதாய வாழ்வியல்

மேற்சுட்டிய பண்புகள் பெற்ற மனிதர்களின் கூட்டமைப்புச் சமுதாயம். இஃது குடும்ப, சமுதாய, அரசியல் அமைப்புகளாக விரிவாக்கம் பெறுகின்றது. தனிப்பட்ட பண்புகள் பெற்றிருப்பினும் மனிதன் கூட்டமாக வாழும் இயல்பினன். தனிமை - வறுமை என்கிறது முதுமொழிக்காஞ்சி. தனியாய்ப் பெறுவது இன்பமே எனினும் அது துன்பமே என்பது அதன் முடிவு.

"தான் ஓர் இன்புறல் தனிமையின் துவ்வாது" (மு.மொ.கா.40) என்பது பாடல். அவ்வழி தனியாய்ப் பெறும் இன்பம் துன்பம் எனில், பொதுவாய்ப்பெறும் துன்பும், இன்பம் என உணரலாம். எனவே தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் வாழ்க்கையில் பெருந்துன்பம் துன்பமானது அல்ல என்பது விளக்கம். இதற்கு அணி சேர்ப்பதாக,

"வாழாமல் வருந்தியது வருத்தமன்று" (மு.மொ.கா.57) என்ற பாடலடி அமைகிறது. இதன் வழி இன்பம் விரும்பியோர்க்குத் துன்பம் வருதலும், (மு.மொ.கா.86) துன்பம் விரும்பியோர்க்கு இன்பம் வருதலும், (மு.மொ.கா.85) எளிதென்கிறது இந்நூல். அவை தவிர்க்கமுடியாதவை என்றும் உறுதிபட மொழிகின்றது (மு.மொ.கா.97,98).

இதன்படி இன்பத்தை விரும்பும் தனி மனித வாழ்க்கை, சமுதாய வாழ்வின் துன்பங்களைத் தனதாக்கிக் கொள்ளும் போது, அதனைப் பெற்று விடுகிறது எனலாம். ஈங்கு கூடி வாழ்தல் மனித அறமாகிறது. இதன் முதனிலை இல்லற வாழ்வு. ஆணும் பெண்ணும் கூடிக் காமம் நுகர்தலோடு நின்று விடாது. மேன்மைமிக்க சந்ததிகளைப் பெற்றுத் தருதலே இவ்வறத்தின் நோக்கம் என்பதனை அறநூல்கள் மிகுதியும் வலியுறுத்துகின்றன.

பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற என்கிறது திருக்குறள்.

முதுமொழிக்காஞ்சியும்,

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
மக்கள் பேற்றின் பெரும்பேறு இல்லை (61) என்கிறது.

அதற்காகக் கூடும் ஆண் பெண் விழைச்சே நல் விழைச்சு, அல்லாதது தீ விழைச்சு என்பதனை,

வாய்ப்புடை விழைச்சின் நல்விழைச்சு இல்லை (மு.மொ.கா. 63)
வாயாவிழைச்சின் தீ விழைச்சு இல்லை (மு. மொ. கா. 64)

என்னும் அடிகள் விளக்கி நிற்கின்றன.

இல்லறம் மாண்புடன் அமைய தாரம் மாண்புடையதாக இருத்தல் வேண்டும். "தாரம் மாணாதது வாழ்க்கை அன்று" (மு.மொ.கா.52) என்பது பாடம். மனைவி, வாழ்க்கைத் துணை என்பதை விடவும், வாழ்வைத் தீர்மானிக்கும் வாழ்வே எனும் பொருள் உணர்த்துவது இத்தொடர். இத்தகு மாண்புடைத்தாரம், கணவனின் இயல்பறிந்து ஒழுகுபவள்; குடும்ப இயல்பறிந்து ஒழுகுபவள்; உலக இயல்புணர்ந்து, அறநெறி ஒழுகுபவள் என்று விரித்துப் பொருள் கொள்ளும்படி,

நீரறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள் (51) என்று எதிர்மறையாக விளக்குகிறது முதுமொழிக்காஞ்சி.

இவ்வழி விரியும் குடும்ப உறவுகளின் கிளைகளைப் பேணுதலும் நட்பினைக்காத்தலும் சிறந்த வாழ்வின் அறக்கூறுகளாக உணர்த்தப் பெறுகின்றன.

முதுமொழிக்காஞ்சி நூலுள் நட்புறவு இரு நிலைகளாகப் பேசப்பெறுகிறது. ஒன்று நல் நட்பு; மற்றொன்று நட்பில்லாதது. நல்ல நட்பு சோராதது: அதனைப் பெறும் உதவியின் வழி அறியமுடியும் என்கிறது இந்நூல். (23).

நட்பில்லாதாரிடை உதவி நாடிப்போதல் வறுமை என்கிறது மற்றொரு பாடல் (90)

அதற்காகப் பழகிய நட்பில், உதவ முடியாத நிலை தோன்றும் போது, அதனைப் பழி கூறுதல் சான்றாண்மைக்கு அழகன்று, என்றும் உணர்த்துகின்றது (37).

உட்பகை கொண்டோனிடத்தும், ஒத்த மனம் இல்லானிடத்தும் கொள்ளும் நட்பு, நட்பல்ல; மாறாய் வறுமையும் துன்பமும் விளைக்கற்பாலது என்றும் விளக்குகிறது (88, 45). சுற்றத்திற்கும் இவ்வரையறை பொருந்தும்.

நிறைவாக ...

எப்படி நோக்கினும், இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாதது பொருள். அறவழி பொருள் ஈட்டி, ஈத்துவக்கும் இன்பம் எய்தி, வீடு பேறடைதலே வாழ்வியல் என்பது, இந்நூல் உணர்த்தும வாழ்வியற் சிந்தனை.

உயர்வும், தாழ்வும், உறவும், முரணும் நிரம்பிய மனித வாழ்வு, பொருளாதார நிலையிலேயே சமத்தன்மையற்று நீள்கிறது. இதற்கான மாற்றாகப் பெரிதும் நீது இலக்கியங்கள் வலியுறுத்துவது ஈதலறம்.

எல்லா நூல்களையும் போலவே, ஈதற்சிறப்பையும் இரத்தலின் இழிவையும் குறிப்பிடும் இந்நூல், இையவது கரத்தலைக் கொடிது என்றும், (65) பொய்த்தன்மை மிக்க கொடை இழிவு என்றும் (4) பேசுகிறது. விருப்பமின்றிக் கொடுத்தலும், கொடைமையின் பாற்பட்டதே என்றும் பேசுகிறது. எத்துணை உயர்வான கொடை எனினும்,

அறத்தாற்றின் ஈயாதது ஈகையன்று (57) என்று உரத்துப்பேசும் இந்நூல், கொடுக்கவியலா அளவியலாள் குறித்து,

'வறியோன் வள்ளியன் அன்மை பழியா' (மு.மொ.கா.39)

என்று, சமாதானமும் பேசுகிறது. வண்மை இயலா நிலையில் வாய்மை உயர்ந்தது. (4) என்றும் பேசுகிறது.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் என்னும் திருக்குறளை ஈங்குப் பொருத்திப்பார்க்கலாம்.

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தாண்டான்" (91)

என்ற முதுமொழிக்காஞ்சியின் படி, இத்தகு உயர்வான மொழிகளைத் தட்டாது ஏற்றுக்கொள்ளும் மனிதனின் செயற்பாடு உயர்ந்ததும், இனிமை நிறைந்ததுமாகிய வாழ்வை அமைத்துக்கொள்ள உதவும் என்பது துணிபு. உயர் மொழி, கால, தேச, வர்த்தமானங்கள் கடந்தது என்பதும் கவனத்திற்குரியது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உயிரினங்களும் தாவரங்களும்

இரா. மோறிஸ்ஜாய்
விரிவுரையாளர்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள அகநூல்கள் ஆறும் ஐவகை நிலங்கள், அந்நிலங்களுக்குரிய காலநிலை, அக்கால நிலைக்குரிய தாவர உயிரினங்கள் போன்றவற்றை நுட்பமாக உணர்த்துகின்றன. பிற நூற்கள் தாவர, உயிரினங்களை அவற்றின் தோற்றம், தன்மைகட்கேற்ப உவமைகளாகவும் எடுத்துக்காட்டுக்களாகவும் குறிப்பிடுகின்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைக் காலவரிசைப்படுத்துவதில் பல்வேறு ஆய்வாளர்க்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆயின், வையாபுரிப்பிள்ளை அவர்களின் காலப்பகுப்பு, அந்நூல்களில் இடம்பெறும் தாவர, உயிரினங்களின் விழுக்காட்டளவோடு ஒப்பிடத்தக்கதாகவே அமைகின்றது. இதனை இக்கட்டுரை ஆராய்கின்றது.

திருக்குறள் தவிர்த்த கீழ்க்கணக்கு நூற்களில் காணப்படும் தாவரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிட லாம். இவ்வாய்வுக்கு 'இன்னிலை' உட்படுத்தப்படவில்லை. இப்பட்டிய லிலுள்ள எண்கள் பாடல்களின் எண்களைக் குறிக்கும். நாலடியாரின் முதல், இரண்டாம் எண்கள் முறையே அதிகாரத்தையும் பாடல் எண்களையும் குறிக்கின்றன.

விலங்குகள்

அரிமா (கள.35; ஆசா.84; நாலடி,15:1, 16:2, 20:8), ஆ (கார்.10; இன்.4; இனி.23; சிறு.22; நான்.52; திரி.69, 79; திஐம்.30; ஐஎழு.22; ஆசா.5, 15, 21, 32, 46, 64; நாலடி.1:2, 12:5, 12:8, 24:9, 28:9, பழ.20, 38, 48, 76, 77, 108, 152, 155, 187, 217, 239, 268, 341, 345, 389, கைந்.36), ஆடு (திநூற்.12; நாலடி.2:6, 20:2, 38:6, 38:8, பழ.39, 124, 156), ஆமா (ஐஎழு.4, 32; நாலடி.32:9; 38:7; கைந்.18) ஆளி (திநூற்.42), இரலை (கைந்.29; நாலடி.15:9; பழ.257), உழுவை (நான்.65), எண்கு

(பழ.139; திஐம்.30), எருமை (கார்.31; திநூற்.137, 147, 148; பழ.23; ஐஎழு.46; திஐம்.31), ஓநாய் (பழ.139).

கடமா (திநூற்.86; நாலடி.30:10), கவரிமா (சிறு.9; ஐஎழு.1; கைந்.16), குதிரை (கார்.10,22; கள.36; இன்.9, 38; இனி.8; ஐஐம்.50; திநூற்.53; 113; நான்.70; திரி.46; ஐஎழு.59; கைந்.28,33), குரங்கு (திநூற்.10; நாலடி.24:7; பழ.51, 58, 140, 200, 268; ஐஎழு.4, 9, 11; திஐம்.2, 10; கைந்.3, 5, 7, 36), குறுநரி (கள.34; பழ.80), கேழல் (ஐஎழு.11; கைந்.11), தீநாய் (பழ.139), நரி (திநூற்.113; நாலடி.16:2; பழ.22, 177, 244, 290), நாய் (இன்.2; சிறு.15, 93; ஆசா.6; நாலடி.7:10, 22:3, 22:8, 26:4, 33:2, 35:5; பழ.14, 30, 73, 75, 87, 117, 156, 252, 261, 278, 352, 375; கைந்.14), பன்றி (நாலடி.26:7, 36:8), புலி (இன்.30; திநூற்.7, 22, 25; சிறு.78; நாலடி.20:3, 21:6; பழ.33, 74, 117, 119, 157, 234, 278, 282, 330), பூசை (பழ.128, 330), மரையா (பழ.48, 228; ஐஎழு.10; கைந்.6), மான் (ஐஐம்.13, 38; திநூற்.70, 95, 102; நான்.4; பழ.8, 57, 210, 223; ஐஎழு.20; திஐம்.7, 19, 25; கைந்.59), முயல் (பழ.14, 141), யானை (கார்.12, 13, 24, 38; கள.1-4, 6-8, 9-16, 19, 21, 22, 25, 27, 30, 31, 37, 38, 40; இன்.13, 21, 30; இனி.4, 8, 15; ஐஐம்.16, 31, 36; திநூற்.2, 7, 11, 13, 14, 22, 23, 25, 42, 53, 78; நான்.10, 12, 23, 87; திரி.19, 46; சிறு.5, 78; ஏலா.12, 42, 49, 52; நாலடி.1:3, 3:1, 20:2, 20:8, 22:3, 36:8; பழ.62, 157, 192, 223, 265, 298, 342, 376, 391; ஐஎழு.12, 31, 37, 42; திஐம்.1, 6, 8; கைந்.5, 8, 9, 16, 19), வெருகு (திநூற்.86, 97, 117; நாலடி.21:10; ஐஎழு.36), வேங்கை (கள.16; ஐஐம்.16, 31; திநூற்.20, 26, 31; நாலடி.30:10; கைந்.16)

பறவைகள்

அசுணம் (நான்.2), அன்றில் (ஐஐம்.41; திநூற்.56, 121; நாலடி.38:6; ஐஎழு.64; கைந்.50, 57), அன்னம் (திநூற்.138; நாலடி.11:7, 14:5), ஆந்தை (ஐஎழு.40; கைந்.21), இதல் (ஐஎழு.35), உள்ளான் (திரி.7), எருவை (கள.20; நாலடி.36:1), எழால் (திஐம்.15), கழுகு (கள.26; திநூற்.91; நாலடி.5:8), காக்கை (கள.5; சிறு.38; ஆசா.96; நாலடி.29:4, 40:10; பழ.87, 141, 165, 193, 315, 328), காட்டுக்கோழி (ஐஎழு.33, 35; கைந்.26), கிளி (ஐஐம்.18, 33; திநூற்.3; நாலடி.29:3; ஐஎழு.13; கைந்.1), குடிஞை (பழ.246), குயில் (கார்.16; இன்.20; திஐம்.13, 14, 49), குறும்பூழ் (நாலடி.13:2; பழ.121), கொக்கு (பழ.18; கைந்.48, 55), கோழி (இன்.2; திநூற்.143; நாலடி.35:1), சிரல் (கார்.36; கள.5; திநூற்.141; நாலடி.40:5), சிவல் (நாலடி.13:2), செம்போத்து (கள.5), தாரா (கைந்.40), தூக்கணாம்புள் (ஆசா.96), நாரை (ஐஐம்.24; திநூற்.36; பழ.23;

ஐஎழு.68; கைந்.50), பருந்து (திநூற்.91; பழ.176), புறா (திநூற்.74; திஐம்.15), மயில் (கார்.4, 12, 16; கள.29; ஐஐம்.2; திநூற்.3, 5, 107, 111; ஏலா.28, 33; பழ.57, 116, 325, 337, 353, 361; ஐஎழு.16, 19; திஐம்.49; கைந்.11, 36), வானம்பாடி (பழ.287), வெளவால் (நாலடி.27:1)

ஊர்வன

அணில் (ஐஎழு.35), உடும்பு (பழ.87), எலி (பழ.189, 330), பல்லி (ஐஐம்.43; பழ.22; ஐஎழு.41; கைந்.18), மாசுணம் (திநூற்.75), நந்து (ஆசா.96; பழ.69, 245), நாகம் (கார்.11, 20; இன்.29; திநூற்.13, 107, 117; நான்.10; நாலடி.7:6, 17:4, 24:10; பழ.364; திஐம்.28), விரியன் (நாலடி.24:10)

நீர்வாழ்வன, இருவாழ்விகள்

அயிரை (பழ.302), ஆமை (நாலடி.34:1; பழ.263), இப்பி (திநூற்.48), இறா (திநூற்.131; திஐம்.43; கைந்.49, 54, 58), கயல் (திநூற்.147, 149; ஏலா.14; நாலடி.5:4, 10:7, 40:5; பழ.163, 237, 338; கைந்.55), கொழுமீன் (ஐஐம்.47), சங்கு (திநூற்.33, 49), சுறா (திநூற்.46; ஐஎழு.65; திஐம்.43; கைந்.58), தேரை (நாலடி.20:3, 36:2; பழ.23, 61; ஐஎழு.23), தவளை (திநூற்.147), நண்டு (கார்.39; ஐஐம்.42; சிறு.9; நாலடி.13:3; பழ.111; ஐஎழு.62, 67; திஐம்.48; கைந்.53), நீர்நாய் (கைந்.46), நுணல் (பழ.184), மலங்கு (நாலடி.38:5), வரால் (கள.7; பழ.302; ஐஎழு.54; கைந்.39), வாளை (கள.33; ஐஐம்.24; திரி.7), ஈ (நாலடி.5:1, 7:1, 22:8, 26:9, 39:9), உண்ணி (பழ.74), உலண்டு (சிறு.25), எறும்பு (ஆசா.96; நாலடி.34:7), கறையான் (நாலடி.15:7), கோபம் (கார்.5), சிலம்பி (சிறு.9), சுரும்பு (நான்.47; நாலடி.13:2; ஐஎழு.12, 28), தும்பி (ஐஐம்.6), தேனீ (நாலடி.1:10), வண்டு (கார்.4, 15, 29, 32; ஐஐம்.22; திநூற்.95, 101, 102, 111, 120; சிறு.52; ஏலா.32; நாலடி.8:3, 23:3, 29:3, 29:4, 29:10; பழ.4, 63, 75, 242, 354; ஐஎழு.3, 15, 27; திஐம்.9, 16, 35; கைந்.44)

தாவரங்கள்

அகில் (ஐஎழு.2), அடும்பு (திநூற்.51; நாலடி.11:7; பழ.194, 202; ஐஎழு.62; கைந்.53), அல்லி (நாலடி.24:6), அவரை (ஐஎழு.1), ஆல் (திரி.33; நாலடி.4:8, 20:7; பழ.31), ஆம்பல் (திநூற்.101, 137; நாலடி.24:6; பழ.174; திஐம்.27,40), ஈந்து (கார்.40), உழலை (ஐஎழு.40), எட்டி (நாலடி.22:7, 25:3), எருக்கு (பழ.376), எள் (இனி.16; ஏலா.50; நாலடி.11:9), ஐவளம் (திநூற்.8, 19; ஐஎழு.12), ஓமை (கைந்.19), கடம்பு (ஐஐம்.1), கடு (ஐஎழு.39), கடுக்கை (கார்.4; திநூற்.98, 120), கண்டல் (திநூற்.61; சிறு.12), கமுகு (நாலடி.22:6), கரும்பு (இன்.5; திநூற்.137; நான்.9;

நாலடி.4:4, 4:5, 13:2, 14:8, 16:6, 20:9, 22:1, 39:10; பழ.289), கருவிளம் (கார்.9), கழுநீர் (திஐம்.11; திநூற்.144), கள்ளி (திநூற்.86; நான்.4; நாலடி.27:2; பழ.87), களா (நாலடி.11:3), கறி (திநூற்.7; ஐஎழு.8), காஞ்சி (திநூற்.139; திஐம்.33), காஞ்சிரை (நாலடி.22:7, 25:3; பழ.371), காந்தள் (திநூற்.29, 72; நாலடி.29:3; ஐஎழு.3; திஐம்.2, 3; கைந்.9, 26), காயா (கார்.8; திநூற்.107; திஐம்.21), காவி (பழ.71), காளாம்பி (கள.36), கிடை (நாலடி.36:10), கீரை (நாலடி.21:7, 22:7), குமிழ் (கார்.28), குரவு (திநூற்.65, 70), குருகு (கார்.27; நான்.35, திஐம்.21, 30), குருந்து (கார்.15; திநூற்.81, 93, 105, 112, 114, 116; ஐஎழு.28; திஐம்.13; கைந்.25, 29), குவளை (நாலடி.5:4, 24:6; பழ.365), குளவி (ஐஎழு.3), கைதை (திஐம்.41), கொடிப்புல் (நாலடி.15:1), கொவ்வை (ஏலா.34), கொள் (நாலடி.39:7), கொன்றை (திநூற்.81, 104, 116; ஐஎழு.18; கைந்.30), கோடல் (கார்.11; திநூற்.111, 119; ஐஎழு.17; திஐம்.21, 29), கோங்கு (திநூற்.63, 65, 70; சிறு.43), சந்தனம் (ஐஐம்.24; திநூற்.1, 3, 28; நாலடி.24:4; திஐம்.1; கைந்.2), சாய் (நாலடி.39:9), சுரை (நாலடி.32:5; பழ.125), சுள்ளி (திநூற்.2), செந்நெல் (திநூற்.128, 129; நாலடி.27:9, 37:7; திஐம்.34), செயலை (திநூற்.2), செருந்தி (பழ.170), செவ்வாம்பல் (திநூற்.72; நாலடி.40:6; கைந்.47), ஞாழல் (திநூற்.40, 58; திஐம்.49), தகரம் (திநூற்.24), தளவம் (கார்.36; திநூற்.93, 105, 110, 116; ஐஎழு.24), தாமரை (ஐஐம்.15, திநூற்.1, 34, 72, 129, 138, 140, 142; நான்.9; பழ.123; ஐஎழு.50, 51; திஐம்.40; கைந்.43), தாழை (ஐஐம்.49; திநூற்.36, 44, 45, 58, 59, 61; பழ.361; கைந்.59), திமிசு (திநூற்.28), தில்லை (திநூற்.61), தினை (ஐஐம்.14; திநூற்.1, 3, 5, 8, 24; நாலடி.11:5, 33:3, 35:4; பழ.68; ஐஎழு.1; திஐம்.4; கைந்.1) தெறுழ் (கார்.25), தென்னை (நாலடி.22:6, 25:3), நாகம் (திநூற்.28; கைந்.12), நாவல் (பழ.138), நீலம் (ஐஐம்.24; திநூற்.2, 6, 34, 72, 73; திஐம்.32, 39, 40), நுணா (ஐஎழு.16), நெய்தல் (கள.33; திநூற்.60; நான்.41; நாலடி.11:8, 35:9, 40:2; பழ.84, 396; ஐஎழு.60, 63; திஐம்.41; கைந்.51), நெருஞ்சி (பழ.170), நெல் (திநூற்.76, 148; நான்.4, 9, 80; திரி.79; சிறு.44; நாலடி.14:3, 18:9, 23:1; பழ.83, 177; திஐம்.37), நொச்சி (கார்.39), பருத்தி (ஏலா.50), பலா (திநூற்.29; பழ.371; ஐஎழு.4; திஐம்.10; கைந்.4), பனை (கள.24; இன்.1, 15; திநூற்.5, 56, 121; நாலடி.5:4, 10:6, 11:5, 26:6, 35:4; பழ.91, 201, 205, 286, 327; ஐஎழு.64; கைந்.50, 57), பாசி (கைந்.3), பாண்டில் (ஐஎழு.27), பாதிரி (கார்.3; நாலடி.14:9), பானல் (திநூற்.31), பிடவம் (கார்.32; கைந்.36), பிண்டி (திநூற்.63; கைந்.36), பீர் (திநூற்.100, 118; ஐஎழு.34), புன்கு (திநூற்.64; திஐம்.14), புன்னை (ஐஐம்.43; திநூற்.35,

56; நாலடி.12:7, 25:6, 34:6; பழ.22, 262, 311; ஐஎழு.58; திஐம்.42; கைந்.52, 54), கேய்ச்சுரை (நாலடி.12:6), பூல் (பழ.31), மஞ்சள் (நாலடி.14:1), மரல் (ஐஐம்.27; ஐஎழு.33), மரா (கார்.16; ஐஎழு.12; திஐம்.13, 16), மருது (திநூற்.139; திஐம்.32), மா (இன்.14; ஐஐம்.15, 45; பழ.72; ஐஎழு.8; கைந்.4), மிளகு (பழ.326), முண்டகம் (ஐஎழு.61), முருக்கு (ஐஐம்.31; திநூற்.64, 66, 67), முல்லை (கார்.14, 21; ஐஐம்.3, 6, 9; திநூற்.81, 105, 108, 112, 116; நாலடி.5:5, 29:7; பழ.110, 361; ஐஎழு.15, 20, 21, 24; திஐம்.22, 26, 29, 38; கைந்.25, 34), முள்ளி (பழ.274), மூங்கில் (கார்.4; இனி.37; திநூற்.94, 103, 115, 116; சிறு.53; ஏலா.6; பழ.16, 34, 151, 215, 265, 286, 364; ஐஎழு.16, 36; திஐம்.9, 18, 32, 34), வகுளம் (திநூற்.24), வட்டு (நாலடி.27:4), வரகு (கார்.25), வழுதுணை (பழ.274), வாழை (திநூற்.140; நான்.82; நாலடி.25:4), விசை (திநூற்.28), விளா (நாலடி.11:3, 27:1, 33:8), வேங்கை (ஐஐம்.11, 15; திநூற்.18, 20, 26, 27, 31; பழ.120; ஐஎழு.6, திஐம்.8, 9; கைந்.10, 12), வேம்பு (நாலடி.12:2, 21:7, 21:10, 24:9, 25:4; பழ.114)

மேற்காணும் பட்டியலில் காணப்படும் தாவர, உயிரினங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு:

1. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள எருமையைக் குறிக்கும் 'காரான்' என்ற சொல் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படவில்லை; எருமை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.
2. சங்க இலக்கியத்தில் காணப்படாத பூனை, 'பூசை' என்ற பெயரில் கீழ்க்கணக்கில் கையாளப்பட்டுள்ளது.
3. சங்க இலக்கியத்தில் மூதா/மூதாய் எனக் குறிப்பிடப்படும் பூச்சி 'கோபம்' என்ற பெயரில் கீழ்க்கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.
4. பெருமையும் வலிமையும் கருதி, 'கோநாய்' எனச் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்ட நாயினம், கீழ்க்கணக்கில் ஓநாய் எனச் சுட்டப்பட்டுள்ளது (NCBH பதிப்பில்). 'வெறியொலிக்கோநாயினம்' என்ற தொடர், வெறியொலி + கோநாயினம் எனப் பகுக்கப்படாமல் வெறியொலிக்கு + ஓநாயினம் எனப் பகுக்கப்பட்டதே இதற்குக் காரணம்.
5. கீழ்க்கணக்கில் இரு இடங்களில் 'கோநாய்' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது (பழ.139; கள.34) என உரைக்கும் பி.எல்.சாமி, களவழி குறிப்பிடும் 'கோணாய்' என்பதைக் கோநாயாகவே கொள்கின்றார். இறந்த வீரனின் குடலைக் கவ்வியிழுக்கும் நரியின் தோற்றம், சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ள 'கோணாயின்' தோற்றத்தைப்போல் உள்ளது என இக்களவழிப் பாடல் உரைக்

கின்றது. கோநாயை யாரும் சங்கிலியால் பிணையார் என்பதால் இச்சொல் வேட்டை நாயையே குறிப்பிடுகின்றது எனவே கொள்ளமுடியும்.

6. 'பையரவு' என நாகமும் 'பாலுண்குருகு' என அன்னமும் 'துளியுண் பறவை' என வானம்பாடியும் 'தெங்கு' எனத் தென்னையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

7. வௌவால் 'வாவல்' எனவும் காந்தள் 'குருதி மலர்' எனவும் சுட்டப்பட்டுள்ளன.

8. கீழ்க்கணக்கு நூல்களில் அதிகளவில் குறிப்பிடப்பட்டுள்ள தாவர, உயிரினங்கள் பற்றிய விவரம் வருமாறு:

விலங்கு : யானை (87), ஆ (36), நாய் (23), குரங்கு (16), புலி (16), குதிரை (14)

பறவை : மயில் (22), காக்கை (11), அன்றில் (7), கிளி (6),

ஊர்வன : நாகம் (12), பல்லி (4)

நீருயிரி : கயல் (10), நண்டு (9), இறா (5), தேரை (5)

பூச்சி : வண்டு (29), ஈ (5), சுரும்பு (4)

தாவரம் : முல்லை (24), மூங்கில் (21), பனை (19)

இத்தரவுகளின் வழி,

1. அழகும் பெருமையுமுடையவை - மயில், முல்லை, யானை
2. மக்களோடு நெருங்கிய தொடர்புடையவை - ஆ, நாய், காக்கை, கயல், மூங்கில், பனை
3. அச்சமூட்டக்கூடியவை - புலி, நாகம்
4. வியப்பூட்டக்கூடியவை - குரங்கு, நண்டு
5. எங்கும் காணக்கூடியவை - வண்டு

என்ற அடிப்படைகளில் தாவரங்களும், உயிரினங்களும் எடுத்தாளப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

கீழ்க்கணக்கு நூல்கள் குறிப்பிடும் தாவர, உயிரினங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அமைகின்றது; பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு நூலும் எத்தனை விழுக்காட்டளவில் தாவர, உயிரினங்கள் குறித்த செய்திகளைக் கூறியுள்ளன என்பதைக் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

நூல்கள்	பாடல் எண்ணிக்கை	தாவர உயிரினங்கள்	
		எண்ணிக்கை	விழுக்காடு
அகநூல்			
ஐஐம்.	50	26	52
ஐஎழு.	70	58	83
திஐம்.	50	41	82
கார்.	40	28	70
திநூற்..	150	79	53
கைந்.	60	51	85
புறநூல்			
கள.	40	16	40
அறநூல்			
நாலடி.	400	75	19
நான்.	100	15	15
திரி.	100	07	07
பழ.	400	72	18
இன்.	40	11	28
சிறு.	100	14	14
ஏலா.	80	08	10
இனி.	40	05	13
மு.மொ.காஞ்சி	100	00	00
ஆசா.	100	07	07

இச்சிறுபட்டியலின்வழி, கீழ்க்கணக்கு நூல்கள் இயற்கை நிலையைச் சுட்டுவதில் காணப்படும் வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. அகம், புறம், அறம் எனும் நூற்பொருள் வேறுபாடு: இயற்கை நிலையைச் சுட்டுவதில் அகநூற்கள் முதல் நிலையிலும் (52% - 85%), புறநூல் இரண்டாம் நிலையிலும் (40%), அறநூல்கள் மூன்றாம் நிலையிலும் (0 - 28%) காணப்படுகின்றன. அக, புற நூல்கள் சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியாக அமைவதால் அவற்றில் இயற்கை குறித்த சிந்தனைகள் அதிகமாகக் காணப்படுகின்றன எனக் கருதமுடிகின்றது.

2. பாடல்களின் கட்டமைப்பு, கருத்தமைப்பு முறை: அறநூல்களைப் பொறுத்தவரை பல நூல்கள் நேரடியாகக் கருத்துக்களைக் கூறவே விழைகின்றன (முதுமொழிக்காஞ்சி, இன்னாநாற்பது, இனியவை நாற்பது). மேலும் குறைந்த வரிகளையுடைய பாடல்களைக் கொண்டிருப்பதும் (முதுமொழிக்காஞ்சி) ஒரே பாடலுக்குள் மூன்று, நான்கு எனக் கருத்துக்களைக் கூறவேண்டியிருப்பதும் (திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம்) இவ்வியற்கை நிலையைச் சுட்டுவதில் ஏற்படும் வேறுபாட்டிற்குக் காரணங்களாகின்றன.

சங்க இலக்கியத்தைப் போலன்றி பாடல் வரிகள் குறைந்தளவே (4 வரிகள்) காணப்படுவதும் தாவரங்கள், விலங்குகள் மட்டுமின்றி மழை, மலை, ஆறு, பெரும்பொழுது, சிறுபொழுது ஆகியவற்றையும் சுட்டுவதால், கீழ்க்கணக்கிலுள்ள அகப்பாடல்கள் இயற்கை நிலையைச் சுட்டுவதில் தமக்குள் வேறுபடுகின்றன.

3. இயற்கையோடு இயைந்த வாழ்வினின்று மனிதன் பிரிந்து செல்லல்: கால அடிப்படையில் மனிதன், இயற்கையிலிருந்து படிப்படியாக விலகி வந்தமையை அறநூல்கள் வெளிப்படுத்துகின்றன.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, கீழ்க்கணக்கு நூல்களைக் கால அடிப்படையில் நான்காகப் பகுக்கின்றார். அப்பகுப்பு முறை வருமாறு:

திருக்குறள்	-	முதல் காலகட்டம்
பழமொழி நானூறு நான்மணிக்கடிகை திரிகடுகம்	-	இரண்டாம் காலகட்டம்
இன்னா நாற்பது	-	மூன்றாம் காலகட்டம்
சிறுபஞ்சமூலம் ஏலாதி இனியவை நாற்பது முதுமொழிக்காஞ்சி ஆசாரக்கோவை	-	நான்காம் காலக்கட்டம்

இக்காலகட்டப் பகுப்பு முறையில்தான் மேல் இடம் பெற்றுள்ள அட்டவணை அமைக்கப் பெற்றுள்ளது. அவ்வட்டவணை இலக்கியங்களில் காலப்போக்கில் இயற்கை நிலையைச் சுட்டும் தன்மை குறைந்துகொண்டே செல்வதைக் காட்டுகின்றது. இவ்வகையில்

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் காலப்பகுப்பு, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் இயற்கை நிலையைச் சுட்டும் தன்மை குறைந்து செல்வதோடு ஒத்தமைகின்றது.

துணைநின்றவை :

ஐந்திணையைம்பது, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1982.

திணைமாலை நூற்றைம்பது, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1970.

நானாற்பது, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1963.

பதினெண்கீழ்க்கணக்கு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1981.

சாமி பி.எல்., சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1970.

மோறிஸ் ஜாய் இரா., தமிழ் இலக்கியங்களில் சுற்றுச் சூழலியல், முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் இயம யோகமும்

முனைவர் நா. விஜயரெகுநாதன்
எம்.ஏ., எம்பி.எட்., எம்பில்., சி.சி.ஓய்., பிஎச்டி.,
தேர்வுநிலை உடற்கல்வி இயக்குநர்,
க.செ.கல்லூரி, மேலைச்சிவபுரி.

இந்தியா பல இனங்களையும் சாதிகளையும் மதங்களையும் மொழிக்குடும்பங்களையும் கொண்ட நாடு. இந்தியா பல மொழிகளைக் கொண்டதாகும். இந்த மொழிகளில் மிகவும் முக்கியமானவை இந்திய ஆரிய மொழி, திராவிட மொழி என்பனவாகும். இவை தவிர இன்னும் இருபது மொழிகளுக்கு மேல் பயன்படுத்தி வருகிறார்கள். இந்திய மக்கள் மொழியில் வேறுபட்டாலும் பண்பாட்டிலும் பழக்க வழக்கங்களிலும் ஒன்றாகவே ஒற்றுமையாக்குவது யோகமாகும். யோகம் இந்தியாவில் தான் தோன்றியது. இது மற்ற நாடுகளுக்கும் பரவிக்கொண்டு வருகிறது. யோக நிலையில் அட்டாங்க யோகம் சிறப்பு வாய்ந்தது. இதனைத் திருமூலர் எட்டுப்படி நிலைகளாக விளக்கியுள்ளார். அவைகளில் முதல்படியான இயமம் பற்றி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பழமொழி நானூறிலும், நாலடியாரிலும் கூறிய கருத்துக்களை மட்டும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

அட்டாங்க யோகப் படிநிலைகள் :

(1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) பிராணாயாமம் (5) பிரத்தியாகாரம் (6) தாரணை (7) தியானம் (8) சமாதி.

இயமம் விளக்கம் :

இயமம் என்பது தீயனவற்றுள் மனம் போகாமல் கட்டுப்படுத்துதல் திருமூலர் கொல்லாமை, பொய்யாமை, களவாமை, எண்குணம், அடக்கமுடைமை, நடுவுநிலைமை, பகுத்துண்ணல், மாசிலாமை, கள்குடியாமை, காமமின்மை என்பன இயமம் என்பர். இவைகளைப் பின்பற்றி வாழ்வோன் இயம வழியில் நின்றோனாகின்றான். அவனை இயமத்தன் எனத் திருமூலர் குறிப்பிடுவர் இதனை திருமூலர்:

"கொல்லான் பொய்கூறான் களவிலான் எண் குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுசெய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடையன் நின்றானே".

திருமந்திரம் - 554.

என்று விளக்குகிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இயம யோகக் கருத்துக்கள் :

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கூறியுள்ள மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளைத் திருமூலர் அட்டாங்க யோகத்தில் இயமம் என்ற முதல் படிநிலையில் நன்கு விளக்கியுள்ளார். இயமம் பற்றித் தனியே கோட்பாடாக வரையறுத்தவர் திருமூலராவார். எனினும் அவர் வாழ்ந்த காலத்தை விட முந்திய நூற்றாண்டுகளுக்குரிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இயமம் பற்றியக் கருத்துக்கள் பரவலாகக் காணப்பெறுகின்றன. அறக்கருத்தின் அடிப்படையிலான இயமம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்பெறுவது ஏற்புடையதே ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சுட்டும் இயமக் கருத்தினைத் தொகுத்துக் காண்பதன் மூலம் அறம் பற்றிய புதிய போக்கினை அறிந்துக் கொள்ளலாம்.

கொல்லாமை :

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான் பழமொழி நானூறில் அட்டாங்க யோகத்திலுள்ள இயம யோகக் கருத்தான கொல்லாமையைப் பற்றி பல பாடல்களில் விரிவாகப் பாடப்பட்டுள்ளன.

இதனை வெளிப்படுத்த

வேள்வியிலும் கொலை தீது

"செறலிற் கொலை புரிந்து சேணுவப்பாராகி
அறிவின் அருள்புரிந்து செல்லார் - பிறிதின்
உயிர் செகுந்தூன்றுய்த் தொழுகுதல் ஓம்பார்
தயிர் சிதைந்து மற்றொண்டல்" - பழமொழி நானூறு 343

என்னும் பழமொழி நானூறு பாடல் கொல்லாமையைப் பற்றி மற்ற உயிர்களுக்கு அறிவோடு அருள்செய்து மறுமை இன்பத்தை அடையாதவராய், அறிவு மயக்கத்தில் உயிர்களைக் கொன்று, மறுமை இன்பத்தை அடையப் போவதாய் நினைத்து, மனம் மகிழ்பவராய் ஊன் கொண்டு வேள்வி செய்தால் மறுமை அடைதல் என எண்ணிப் பிறவுயிரைக் கொன்று புலாலை உள்ளம் பொருந்தி உண்டு ஒழுகுதல் உடலைப் பாதுகாவாதவர் சுவையை விரும்பித் தயிரை அழித்து வேறு ஓர் உணவாய் ஆக்கிச் சமைப்பதுடன் ஒக்கும் என கொல்லாமையைப் பற்றி விளக்கப்படுகிறது.

பொய்யாமை:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூறில் இயம யோகத்திலுள்ள பொய்யாமையைப் பற்றி மூன்றுறையரையனார் பாடியுள்ளார்.

இதனை,

“மொய் கொண்டெழுந்த அமரகத்து மாற்றார்வாய்ப்
பொய் கொண்டறை போய்த்திரிபவர்க்குக்
கையுண்டமர்ந்த கண் மாணிழாய் சான்றவர்
கையுண்டும் கூறுவர் மெய்” (பழமொழி நானூறு 83)

என்ற பாடல் விளக்கும்.

மைப்பூசப்பெற்று விளங்கும் கண்ணை உடைய சிறந்த அணிகளை அணிந்த அரிவையே போர் செய்வதன் பொருட்டாய் ஒன்று திரண்டு வீரத்துடன் நின்ற போர்க்களத்தில் பகைவர் கூறும் பொய்யான உரைகளைக் கேட்டு மாறுபட்டு நடப்பவர்களுக்கு மெய் உரையால் என்னப்பயன்? ஏதும் இல்லை. எனவே அறிவு நிறைந்தவர் மற்றவர் பொருளை உண்டாயினும் உண்மையையே கூறுவர் எனப் பொய்யாமையைப் பற்றி விளக்கியுள்ளார்.

களவாமை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூறில் இயம யோகத்திலுள்ள களவாமையைப் பற்றி ஆசிரியர் விளக்குகிறார். இதனை அவர்,

“துயிலும் பொழுதத் துடை வூண் மேற்கொண்டு
வெயில்விரி போழ்தின் வெளிப்பட டாராகி
அயில் போலும் கண்ணாய் அடைந்தார் போல் காட்டி
மயில் போலும் கள்வருடைத்து” (பழமொழி நானூறு 194)

எனப்பாடுகிறார்.

வேல் போன்ற கண்ணை உடையவளே மித்தரும் உறங்கும் நள்ளிரவில் கதவு முதலியவற்றைத் தகர்த்து களவு செய்து அதனால் வரும் உணவைக் கொண்டு உண்ணும் தொழில் உடையவராய், வெயில் விரிந்த பகற்காலத்தில் உறக்கம் நீங்கி எழுந்து வந்தவராகி எல்லோர்க்கும் தாம் நண்பர் போல் காட்டிப் பாம்பை விழுங்கிக் கண்டவர் அடக்கமுடையதாய் நிற்கும் மயில் போன்றவர்களை இவ்வுலகம் உடையது என மயில் போலக் காளை என்னும் பழமொழி களவாமையைப் பற்றி விளக்கிறது.

எண் குணம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரில் இயம யோகத்திலுள்ள எண் குணத்தைப் பற்றி ஆசிரியர் விளக்குகிறார். இதனை அவர்,

"இறப்ப நினையுங்கால் இன்னாது எனினும்
பிறப்பினை யாரும் முனியார் பிறப்பினுள்
பண்பாற்றும் நெஞ்சத்தவர்களோடு எஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்" (நாலடியார் 174)

என விளக்கியுள்ளார்.

மிகவும் ஆராய்ந்து பார்த்தால் பிறப்புத் துன்பம் தருவது எனினும் நற்குணங்கள் நிறைந்த நல்லோருடன் சேர்ந்து அவர் தம் நற்குணங்களைப் பெற்று எல்லா நாளும் அவர்களுடன் நட்பு கொள்வாராயின் அப்போது யாரும் இந்த பிரச்சனையை வெறுக்க மாட்டார்கள். இதில் ஆசிரியர் எண் குணத்தையும் நன்கு விளக்கியுள்ளார்.

அடக்கமுடைமை

நாலடியாரில் இயம யோகத்திலுள்ள அடக்கமுடைமை பற்றி ஆசிரியர் விளக்குகிறார். இதனை அவர்,

"நளிகடல் தன்சேர்ப்ப / நல் கூர்ந்த மக்கட்கு
அணிகலம் ஆவது அடக்கம் - பனைவில்சீர்
மாத்திரையின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரம் கூறப் படும்" (நாலடியார்-242)

என விளக்குகிறார்.

பெரிய குளிர்ந்த கடற்கரையை உடைய நாட்டுக்கு அரசனே வறுமையுற்ற மக்களுக்கு அணிகலமாவது அடக்கமுடைமையாகும். அடக்கமின்றி அளவு கடந்து நடப்பாராயின் ஊரில் வாழ்பவரால் அவர்களது குலமும் இழித்துரைக்கப்படும் என அடக்க முடைமையை நன்கு விளக்குகிறார் நாலடியார் ஆசிரியர். மேலும் அடக்குமுடைமையை இப்பாடலில் விளக்குகிறார். இதன்னை அவர்

"அறிவது அறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுவப்பச் செய்து பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது" நாலடியார் - 74

எனப் பாடியுள்ளார்.

அறிய வேண்டிய நன்மை தீமைகளை அறிந்து அடக்குமுடையவராகி, அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சி, செய்வதை உலகம் மகிழுமாறு செய்து அறநெறியால் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்புடையவர் எக்காலத்திலும் துன்புற்று வாழ்தல் இல்லை என அடக்கமுடைமையைப் பற்றி ஆசிரியர் விளக்குகிறார்.

நடுவு நிலைமை

மூன்றுரையனார் தனது பழமொழி நானூறில் நடுவு நிலைமை பற்றி நன்கு விளக்கியுள்ளார். இதனை

மன்னன் நடுவு நிலையில் நிற்றல் வேண்டும்.

"எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமால்
தங்கண்ண ரானும் தகவில கண்டக்கால்
வ்னகண்ணனாகி ஒறுக்க ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு"

(பழமொழி நானூறு- 24)

மன்னன் அறம் கூறுமிடத்து இவர் எமக்கு நண்பர் பகைவர் என்ற இத்தன்மை உடையவர் எனக்கருதுவனாயின் அஃது அவனது செங்கோன்மைக்குக் குற்றமாகும். தம் கண் போன்ற இன்றியமையாமை உடையவராயினும் தகுதியற்ற செயல் அவரிடத்துக் கண்டால் வன்கருமை உடையவனாகி அவர்களைத் தண்டிக்காத தாட்சாணியம் உடையவனாயின் அவன் அரசினை ஆளும் தகுதி அற்றவன் ஆவான் என மன்னன் நடுவுநிலைமையாக இருந்து வாழ வேண்டும் என ஆசிரியர் விளக்குகிறார்.

பகுத்துண்ணல்

மூன்றுரையண்ணார் பகுத்துண்ணப் பற்றி விளக்கியுள்ளார். இதனை அவர்

சிறந்தது உணவிடுதலை

"சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்
தீர்ந்தாராக் கொண்டு தெளியினும் தேர்ந்தவருக்குச்
செல்லாமை காணாக்கால் செல்லும் வாய் என்னுண்டாம்
எல்லாம் பொய் அட்டுணேவாய்"

(பழமொழி நானூறு - 349)

தம்மை அடைந்தவரை ஏற்றுக்கொண்ட ஒருவர் தம்முடன் அவர் தொடர்பு இல்லாதவராய்க் கொண்டு தெளிவாய் அறிந்தாலும் அவருக்குள்ள வறுமையைப் போக்க அறியார் ஆயினும் அவருக்குப் போகும் நெறி வேறு யாதிருக்கிறது? சமைக்கப்பட்ட உணவை அளிப்பதே உண்மையான அறம் எனப் பகுத்துண்ணலை ஆசிரியர் விளக்குகிறார்.

மாசிலாமை

மூன்றுறையரையனார் மாசிலாமையை உள்ளம் தூய்மை என விளக்குகிறார். இதனை அவர். உள்ளத்தூய்மை இல்லாதாரைத் தொலைத்தூரம் சென்று செயலை முடிக்க அனுப்பக்கூடாது.

"அகம்தூய் மையில்லாதவரை ஆற்றப் பெருக்கி
இகந்துழி விட்டிருப்பின் அஃதால் - இகந்து
நினைத்து தெரியானாய் நீள் கயத்துள் யாமை
நனைந்துவா என்று விடல்"

(பழமொழி நானூறு 175)

எனப்பாடுகிறார்.

உள்ளத்தில் தூய்மை இல்லாதவரை மிகவும் பெருக்கிக் கொண்டு தொலைவான இடத்தில் தம் செயலை முடிக்கும் பொருட்டு அவரைச் செல்ல விட்டு இருந்தால் அச்செயல் உள்ளத்தில் ஆராய்ந்து அறியாதவனாய் யாமையைப் பிடித்த ஒருவன் அந்த யாமையை நீண்ட நிலையுள் கொண்டு போய் நீரால் நனைந்து திரும்பி வா எனக் கூறிச் சொல்லி விடுவதைப் போன்றதாகும் என மாசிலாமையை ஆசிரியர் உள்ளம் தூய்மை என விளக்குகிறார்.

கள் குடியாமை

மூன்றுரையரையனார் கள் குடியாமைப் பற்றி விளக்கியுள்ளார். இதனை அவர்,

கீழானவன் கள்ளைக் கண்டு மகிழ்வான்

"மாணாப் பகைவரை மாறொறுக் கல்லாதார்
பேனா துரைக்கும் உரை கேட்டு வந்தது போல்
ஊணாந்து தவுவது ஒன்றில்லெனினும் கள்ளினைக்
காணா களிக்கும் களி" (பழமொழி நானூறு 99)

எனப்பாடுகிறார்.

பெருமை இல்லாத பகைவரைச் சினந்து தண்டிக்க முடியாதவர் தம் பகைவரைப் பொருட்படுத்தாது மற்றவர் உரைக்கும் உரைகளைக் கேட்டு மகிழ்வீர் அவரைப் போன்று உணவாய் உண்டு அதனால் அடைகின்ற பயன் ஏதும் இல்லையாயினும் கீழ்மகன் கள்ளைக் கண்ட அளவில் மகிழ்வான், எனக் கள் குடியாமையைப் பற்றி விளக்குகிறார்.

காமமின்மை

நாலடியாரில் காமத்தினால் ஏற்படும் தீமையை விளக்கப்பட்டுள்ளது. இத்தனைச் சமண முனிவர்

"அச்சம் பெரிதால் அதன் கின்பம் சிற்றளவால்
நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால் நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன் தாரம்
நம்பற்க நாணுடையார்" - நாலடியார் - 81

எனப் பாடுகிறார்.

காமத்தால் வரும் அச்சம் பெரிது அந்த அச்சத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது பெறும் இன்பம் சிறிதே. யோசித்துப் பார்த்தால் அரசனால் கொலைத் தண்டனையும் உண்டு. எந்நாளும் நரக வேதனையை அடைவதற்குரிய மிக்க பாவச் செயலாகும் அது ஆதலால் நாணம் உடையவர்கள் பிறன் மனைவியை விரும்ப மாட்டார்கள் எனக் காமத்தின் தீமையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பழமொழி நானூறிலும், நாலடியாரிலும் ஒழுக்க நெறிமுறைகளாக விளக்கப்பட்டுள்ளது. அவை திருமூலரின் அட்டாங்க யோக முதல் படிநிலையான இயமத்தில் விளக்கப்பட்டுள்ளன.

* * * * * *

ஆசாரம் - வாழ்வியல் நெறி

முனைவர் **தி. பூங்குன்றன்**
தேர்வுநிலை விரிவுரையாளர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி

மனிதன் மனிதனாக வாழும் வகையைத் தெரிந்து சொல்லும் நூல் ஆசாரக்கோவை. இப்படித்தான் வாழவேண்டுமென்ற ஆணையோ எப்படியும் வாழலாம் என்ற மேம்போக்கோ இன்றி இப்படி வாழ்ந்தால் தான் இயல்பு வாழ்க்கை சுவைக்கும் என்ற இயற்கையோட்டத்தை ஆசாரக்கோவை அழுத்தமாகப் பதிக்கிறது. சமுதாய அங்கமான மனிதன் ஒழுக்கமோம்பிப் பண்பாட்டுச் சிதைவின்றி வாழும் கடப்பாடுடையவன் ஆவான். அவன் வாழ்க்கைச் செம்மைக்குப் பொறிவாயின் முள்ளியார் ஒரு வாழ்வியல் கைகாட்டியாக விளங்குகிறார். துன்பமும் பிணியும் ஒரு மனிதனை அண்டாது புகழ் வழுவாது வாழ்வதற்கான நெறிமுறைகள் என்னென்ன என்பனவெல்லாம் ஆசாரக்கோவை நமக்களிக்கும் கைவிளக்காகும்.

காலத்தோடு பொருந்தி வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை ஓதினால் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற சூத்திரத்தின் உரை நமக்கு எளிதுபடும். ஆசாரம் - ஒழுக்கம். ஒழுக்கத்தின் வகைதொகைகளின் உள்ளிருப்பு ஆசாரக்கோவை. வள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தரும்", "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றெல்லாம் ஒழுக்கம் பற்றிப் பலபட விளக்குவார். தமிழ்கூறும் நல்லுலகிடை இலக்கியப் படைப்பின் மையமே ஒழுக்கமாகக் காணக்கிடக்கின்றது. உலகின் அமைப்புக்கள் ஒவ்வொன்றும் அடிப்படையில் ஓர் ஒழுக்கத்தின் மேலே தான் கட்டப்பட்டுள்ளன. ஒழுக்கமிலா எவ்வாழ்க்கையும் மேன்மையுறா. மனித வாழ்க்கை சால்பு நெறி எவை எவற்றைப் பின்பற்றி ஒழுகல் வேண்டும் என்ற விதிமுறைகளைக் கற்றுத்தருவதே பெருவாயின் முள்ளியின் ஆசாரக்கோவையாகும்.

ஆசாரக்கோவை காட்டும் அனைத்துக் கருத்துக்களும் வாழ்வியல் சிந்தனைகளை உள்ளடக்கிய நன்முத்துக்கள். மனிதன் நசிந்து போகாது நலமுடன் வாழ சொல்லப்பட்ட சொல்லோவியங்கள். அவ்வோவியங்கள் மனிதன் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய உண்ணல், உடுத்தல், உறங்கல், பணிதல், உடல்பேணல் போன்றவற்றோடு செய்யத் தக்கனவற்றையும் செய்யத்தகாதனவற்றையும் வண்ணம் தீட்டிக் காட்டும்.

நூலினுள் யாவரும் கண்டநெறி, முந்தையோர் கண்ட முறை, பேரறிவாளர் துணிவு, நல்லறிவாளர் துணிவு, நூல்முறையார் துணிவு, மிக்கவர் கண்ட நெறி, திறம் கண்டார் நெறி போன்ற தொடர்களைப் பெருவாயின் முள்ளியார் ஆசாரக் கோவையுள் அதிகம் ஆண்டுள்ளார். இவை முன்னோர் மொழியைப் போற்றுந் திறத்ததாயினும் அனுபவத்தின் ஒளிப்பிரவாகம் வாழ்க்கைத் தடத்தில் முட்டின்றிக் கால்தடம் பதித்து வெல்லும் பெருநெறியாய் நின்றன.

ஆசாரக்கோவையின் மூலநூல் ஆரிடம். அதுவொரு வடநூல். அந்நூலினுள் இடம்பெறும் ஆசாரங்கள் பெரும்பகுதியும் சுக்ரஸ்மிருதியில் உள்ளன. இது குறள், சிந்தியல், இன்னிசை, நேரிசை, பஃறொடை வெண்பா நடையது. பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை இந்நூலின் அடிப்படையாய் ஆபஸ்தம்ப கிருஹ்ய சூத்திரம், ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம், போதாயன தர்ம சூத்திரம், கௌதம சூத்திரம், விஷ்ணு தர்ம சூத்திரம், வசிஷ்ட தர்ம சூத்திரம், மனுஸ்மிருதி, உசனஸ ஸம்ஹிதா, ஸங்க ஸ்மிருதி, லகு ஹாரித ஸ்மிருதி ஆகியவைகளைக் கொள்வார்.

அச்சமே கீழ்களது ஆசாரம் (1075) எனத்திருக்குறளும் ஆசாரம் என்பது கல்வி (93) என நான்மணிக்கடிகையும் அறியாத் தேயத்து ஆசாரம் பழியார் (3:8) என முதுமொழியும் ஆசாரம் என்னும் தொடர் பயில்வைக் காட்டியுள்ளன. முள்ளியாரோ ஆசாரத்தை ஒழுக்கம், நெறி, முறை, வழி என்னும் வேற்றுச் சொற்களாலும் பயன்கொள்வர்.

ஆசாரவித்து என்ற முடிநிலை பாடல் தொட்டு ஆசாரம் வீடு பெற்றார் எனும் முடிப்புடை பாடல் ஈறாய் 100 பாடல் தொகையது முள்ளியார் நூல். இந்நூற்பயன் வீடு அடைதல் என்னும் பொதுமை அறத்தை முன்னிறுத்தும் மனித வாழ்க்கைப்பயன் பிறவாமை - அஃதாவது வீடடைதலே என்னும் குறிக்கோளோடு இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது என்பது வெள்ளிடை மலையாகும். நூலினுள் நாள்தோறும் வாழ்க்கையில் மனிதன் பின்பற்றி ஒழுகுவனவே யாண்டும் அணிபடும். அவ்வணி அகத்தூய்மையும் புறத்தூய்மையும் பெட்பாகப் பூண்டறம்படும்.

உண்ணும் முறை

நீரின்றியமையாது உலகெனின் உணவின்றி உயிர் இயக்கம் இல்லை. மணிமேகலை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என உரத்துப் பேசும். தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் சகத்தினை அழித்திட பாரதி அறைகூவல் விடுத்தான். உண்ணும் முறையினைப் பெருமுள்ளியாரே 13 பாடல்களில் இயம்புவர்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்". "உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என உயிர்நிலை இயக்கத்திற்கு உடலே முதன்மை எனப் பல்லோரும் பகர்வர். அந்த உடலின் தூய்மையை முள்ளியார் பெரிதும்

வலியுறுத்துவர். தினமும் நீராடல் அவசியம் என்பார். உணவு உண்ணும் முன்னர்க் கை, கால், வாய் கழுவ வேண்டும். அதோடு காலின் ஈரமுணருமுன்னர் உண்க என நெறி காட்டுவர். ஔவையார், "கூழானாலும் குளித்துக்குடி" என வேறொரு வகையான் இதனை உறுதிப்படுத்துவார். உணவு உண்ணும் திசை கிழக்கு நோக்கியும் வாயில் நோக்கியும்,இருப்பது சிறப்பு. " உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்கு " (20) என்பது முள்ளியார் முடிவு.

கீழ்த்திசை நோக்கி உண்ண முடியாதோர் பிறதிசைகள் நோக்கி உண்டாலும் தவறன்று என உண்ணும் திசைக்கோர் அமைதிகாட்டும் ஆசாரக்கோவை. இதனை,

ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல (22)

என்ற அடியால் கற்கலாம். கீழ்த்திசை சூரியன் உதிக்கும் திசை. சக்தியின் பிறப்பிடமும் அதுவே. (positive terminal) அத்திசைக் கடவுள் இந்திரன். அவன் மேகத்திற்கு அதிபதி. உலக இயக்க சக்திக்கும் ஜீவாதார சக்திக்கும் உரிய திசைமுகம் நோக்கி உண்பது சாலச்சிறந்தது என்ற முள்ளியாரின் கருத்து விளக்கம் பெறும். பரந்து கிடக்கும் சக்தி வாயில் வழியேதான் இல்லத்திற்குள் நுழையும் என்பதாலும் அம்முகம் நோக்கி உண்ணப்பணிக்கின்றார் முள்ளியார். இன்றைய வாஸ்து வல்லுநர்களும் இத்திசையைப் பெரிதும் போற்றிப் பேசுவர். திசை அறிவில் பெருவாயின் முள்ளியாரை முன்னோடியாகக் கொள்வதில் தவறேதுமில்லை.

மக்கள் நற்பழக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். செய்தொழிலில் கவனம் சிதையாது காப்பதனைய ஒவ்வொருவரும் இல்லுறை தெய்வங்களுக்குப் படைத்துப் பெருநிலை இறைவனை வணங்கி ஆடாது, அசையாது, பேசாது தன் மனத்தினைப் பிறிதொன்றின் மீது செலுத்தாது உணவைக் கீழே கொட்டாது உண்ண வேண்டும். இறைவழிபாட்டிற்குப்பின் உணவருந்தும் பழக்கம் இன்று கிறிஸ்துவர்களிடம் பெருகிய வழக்காக வளர்ந்துள்ளது. இன்றைய நகர்ப்புற நாகரிகமான நின்றும் நடந்தும் பேசியும் திறந்த வெளியிலும் உண்ணும் நெறி (Buffa System) கூடாது என்பதனை அன்றே முள்ளியார் அழுத்தமாகக் கூறிச்சென்றார் எனலாம். இதனை,

"கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்
சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்
இறந்தொன்றும் தின்னற்க நின்று" (23)

என்ற பாடல் வலியுறுத்துகின்றது. உணவில் முதலில் இனிப்பையும் இறுதியில் கசப்பையும் இடையில் பிற சுவைகளும் கலந்து உணவாகக் கொள்ளுதல் வேண்டும். இதனையே இன்றைய மருத்துவ அறிஞர்கள் சத்துள்ள உணவு (Nutrirtious food) என்பர்.

பெரியவர்கள் பசியுடன் காத்திருக்க நாம் உண்ணுவது குற்றம். அவர்களுடன் பந்தியில் அமர்ந்து உண்ணுங்கால் அடக்கமும் சிறிது இடைவெளியும் தேவை. அவர்கள் உண்ணத் தொடங்கிய பின்னரே நாம் உண்டும் அவர்கள் எழுந்த பின்னரே நாம் எழுதலும் சிறப்பு. உணவைப் பழித்துரைத்தலோ பெரியவர்கள் உண்ட உணவை வினவுதலோ சிறப்பாகா.

ஈத்துண்க

உலகில் சிறந்த இன்பம் ஈத்துவக்கும் இன்பம். அவ்வின்பத்திற்கு ஈடுவேறொன்றும் இல்லை. முள்ளியார் ஒழுக்கம் விரும்பிகள் எவர்எவர்க்கெல்லாம் கொடுத்துண்ண வேண்டுமெனப் பட்டியலிடுவர். இதனை,

"விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க் கூண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்."

என்ற பாடல் பேசும். ஒழுக்கம் பிழையாமைக்கு அறம், கொடுத்துண்பதுதான் என்பது முள்ளியார் அறம். இவ்வறம் இன்று தடம் தவறிச் செல்வதால்தான் முதியோர் இல்லங்களும் பிற காப்பகங்களும் மலிந்துள.

வாய் சுத்தம்

உண்டபின்னர் வாய்சுத்தம் செய்தல் ஆசாரத்தின் தலையாய பண்பு. வாய் கழுவும் நீர் வயிற்றினுள் செல்லாதவாறு நன்றாகக் கொப்பளித்து அதை உமிழுதல் வேண்டும். பின்னர் உழுந்து அமிழும் அளவு நீரினை எடுத்துக் கண், மூக்கு, செவிகளாம் முப்பொறிகளை விரலால் தொட்டு மனத்தால் நினைத்து மும்முறை நீரருந்த வேண்டும். இதனையே ஆசிரியர் 'விரலுறுத்தி வாய்பூசல்' என மொழிவார். சீவகசிந்தாமணியும்,

"வாசநற் பொடியுந் நீரும் காட்டிடக் கொண்டு வாய்ப்பப்
பூசுறுத் தங்கை நீரை மும்முறை குடித்து முக்கால்
காசறத் துடைத்த பின்றைக் கைவிரலு றுப்புத் தீட்டித்
தூசினா லங்கை நீவி யிருந்தனன் தோற்ற மிக்கான்"

பதுமையார் இலம்பகம் - 137

என உரைத்துப் போகும். ஆசாரம் அழுத்தமாகக் கடைபிடிப்பவரிடம் இந்நெறி இன்று காணப்படுவதன்றி பிறரிடம் காணப்படவில்லை.

உடுத்தல் நெறி

இன்றைய நாகரிக வளர்ச்சியின் ஆடை நாகரிகத் தன்மையை முள்ளியார் அன்றே திறம்பட நவின்றுள்ளார். நீராடுகையில் உண்ணுகையில், அவை புகுகையில் ஆடை உடுத்தும் நாகரிகத்தினை,

"உடுத்தலால் நீராடார் ஒன்றுபடுத்து உண்ணார்
உடுத்தாடை நீருள் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத்து என்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை." (11)

என்பர் ஆசிரியர். ஈற்றடி உடையின் பழமையை விளக்கும் தொடராகும். "உடுத்தாடை யில்லாதார் நீராட்டும்" எனத் திரிகடுகம் நீராடும் முறைமை பேசும். இது நீராட்டுடை (Swimming Suit) வளர்ந்ததின் நாகரிக வாழ்க்கையை அளவிடும் கோலாகும்.

உடைகாட்டும் பண்பு

மனிதரின் பண்பு அவர் உடுத்திருக்கும் ஆடை பாங்கில் புலப்படும். உடுத்தாடையின் காற்றுப் பிறர்மேல் படுதலோ, பல்லோர் சூழ் இடத்தில் ஆடையை அவிழ்த்தலோ, உதறுதலோ முறைமாறி செயலாகும். புத்தாடையை வாசலின்மேல் விரித்து வைத்தல் கூடாப் பழக்கம். ஆனால் இன்றும் புதுவீட்டில் வைக்கப்படும். புது நிலைப்படிமேல் உடுத்த பழம்பட்டுப் புடவையை வைக்கும் மரபைக் காணலாம். ஆனால் மற்றவர் மாசுணி ஆடையினை இட்டு அதன் மேலிருத்தலோ போர்த்துதலோ ஒழுக்கம் ஆகா. அங்ஙன் பிறருடுத்த அழுக்காடையை எவ்வகையிலும் ஒருவர் தொடுதல் கூடாப் பழக்கம்.

'இடரெனினும் மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்' (36) என்பது ஆசிரியரின் வேண்டுகோள்..

தூக்க நெறி

மனித மூளை வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது தூக்கம். உறங்கும் முறை, திசையாவும் முள்ளியார் ஓர்ந்துரைக்கும் வழி அறிவியல் பூர்வமாய் ஏற்கும் நெறியதாய் உள்ளது. உறங்கு முன்னர் இறைவனை வணங்க வேண்டும். இது முள்ளியார் ஆணை. விழித்திருக்கும் வேளையில் செய்யும் செயல்களும் அச்செயல் செய்ய ஏதுவான உடலும் மனமும் செம்மையனவாக நின்று அன்றைய பொழுதின் இன்பத்திற்கு இடந்தந்தன. உறக்கம் மறுநாள் செயலாண்மை களத்தின் சக்தி கூட்டுயிர்ப்பாகும். எனவே அந்தச் சக்திப் பிரளயத்தை மிகுத்துத்தர, இன்றுபோல நாளும் வளம்பெற இறைவணக்கம் அவசியம். திருமூலரோ,

உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

எனச் சாக்காடு பிறப்புகளின் விளக்கத்திற்கு உறக்கத்தையும் விழிப்பையும் விளக்கப்படுத்துவர்.

வடதிசை, கோண திசைகளில் உறங்குதல் கூடா ஒழுக்கம். உடலில் போர்வை போர்த்தி உறங்குதல் கூடும் ஒழுக்கமாகும். வடதிசை காந்த ஈர்ப்புத்

திசையாகவும் கோண திசைகள் மாறுபட்ட இணைப்புத் திசைகளாகவும் இருப்பன. அத்திசைகளில் தலைவைப்பு உறக்கம் ஈர்ப்பு அலைகளால் மூளையின் அமைதியின்மையை ஏற்படுத்துமியல்பினவென இன்றைய அறிஞர் உலகம் ஒப்ப மொழிந்த கருத்தாகும். வாஸ்து வல்லுநர்களும் இக்கருத்தின் விலக்காகார்; உடன் மறையினராவர்.

சூரியன் மறையும் காலத்தில் வீட்டில் படுத்துறங்குதல் பிழையாகும் என்பது ஆசாரம். 'மாலை முழுதும் விளையாட்டு இதனைப் பழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா' என வேறு தொடரால் இதனை விவரிப்பர் பாரதியார். 'நல்ல பொழுதை யெல்லாம் தூங்கிக் கெடுப்பவர்கள் தானும் கெடுவதுடன் நாட்டையும் கெடுப்பர்' என்பது இன்றைய திரைத்தமிழ். கட்டிலில் தூங்கும்போது எவையெவை செய்யத்தகாதன என்பவனவற்றைக்,

"கிடந்தாரைக் கால்கழுவார் பூப்பெய்யார் சாந்து
மறந்தானும் எஞ்ஞான்றும் பூசார் கிடந்தார்கண் நில்லார்" (87)

என மொழிகுவர் முள்ளியார். இன்றைய வாஸ்து சாஸ்திரம் விளம்பும் படுக்கை அறை, திசைஞானம் கட்டிலிடம் உறங்கும் விதம் யாவும் அற்றைய முள்ளியாரின் மொழியின் அடிச்சுவட்டில் அழுத்தமாக மொழியப் பட்டுள்ளதைக் கற்பார் ஏற்பர்.

சான்றோர் வணங்கு

பெரியவரை வணங்கும் வழக்கம் தமிழனின் பண்பாட்டின் அடி ஊற்று. வணக்கத்திற்குரிய சான்றோர்கள் யார் எவரெனப் பட்டியலிடுவர் முள்ளியார். இதனை,

"அரசன் உவர்த்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக" (16)

என்று ஆசாரக்கோவை அடுக்கும். சான்றோரைக் காணுங்கால் எண்சாண் உடம்பும் நிலந்தோய விழுந்து வணங்கலும் தும்முவோரை வாழ்த்தும் பெரியாரைத் தொழுதெழுதலும் மேன்மையனவாகும். தந்தை தாயரை வணங்கும்பொழுது வைகறையென வழிகாட்டுவார் முள்ளியார். மேலும் சான்றோர் பால் பேசுகையில் வாய்பொத்தி மெய்யொடுங்கித் தலைதாழ்த்திக் குற்றமின்றித் தெளிவாகப் பேசவேண்டுமென முறைவழிப் படுத்துவாரவர். இவை அடிமைக்கோலமன்று; உரிமைக் கோலம்; ஏக்கற்றும் கற்றார் கோலம். அஃதாவது ஆசையால் அன்பால் தாழ்ந்த கோலமாகும். சான்றோர் வணக்க விலக்காகத் தெய்வ அரச ஊர்வலங்களை முள்ளியார் சொல்லுவார். இவற்றை வணக்கப் புறனடையாகக் கொள்ளத் தேவையில்லை. அவ்வூர் வலங்களில் தெய்வம் அரசர்களின் முதன்மைப் பாட்டைக் குறித்தே முள்ளியார் மொழிந்தார் எனக் கொள்வதில் தவறேதுமில்லை.

அறிவுடையோர் செயல்கள்

யார் அறிவுடையர்? அவர் செயல்பாட்டுத்திறன்தான் என்ன? என்பனவற்றையெல்லாம் முள்ளியார்போல் முறைப்படுத்தி உரைத்தாரிலர் எனலாம். அறிவுடையாருக்கு இலக்கணம் இந்திர பதவியே தனக்குக் கிடைப்பினும் முறை திறம்பா ஆண்மை; இளையோர் செய்பிழை பொறுக்கும் திண்மை, சொன்ன சொல்பேணும் வன்மை, புனிதப் பொருட்களை உறுப்புக்களில் ஒற்றிக்கொள்ளும் ஒண்மை எல்லாமுமாகும்.

"பழியார் இழியார் பலருள் உறங்கார்
இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்
தாங்கருங் கேள்வியவர்" (50)

என அறிவுடையோர் செயல்களை ஆசாரக்கோவை கூறும். வஞ்சகப் பேச்சும் பயனற்ற சொற்களும் நாவடக்கமற்ற தடிப்புரையும் பழிசொல்லுதலும் புறங்கூறலும் அவர்கள் அறியாதன. சின எழுச்சியால் பொருள் எறிதல், கல் எறிதல் கனைத்தும் கூவியும் அழைத்தல், பழித்துக் காட்டல், மறைத்தல், ஏளன கைதட்டல், பிறர்முன் தன் உறுப்பழித்தல் அவர்கள் செயல்களில் இல்லாதன. வறுமை உள்நின்று வாட்டினும் குலமானம் அழியார் சான்றோர். அவர்கள் துறந்தாரைப் பேணல், பழிக்கு நாணல், தம் கல்வித் திறத்தைத் தாமே புகழல் போல்வனவற்றிற்கு இடந்தராதவர்கள் ஆன்றோர் ஆவரென முள்ளியார் வகைப்படுத்துவர்; தொகுத்துரைப்பர்.

நூல் முழுமையும் அகத்தூய்மையும் புறத்தூய்மையுமே பன்முகப் பாங்காய்ப் பேசப்பட்டுள்ளன.

செய்ய வேண்டிய நெறிகளைக் கூறும் முள்ளியார் முடியாகாலத்து அவற்றிற்குப் புறனடை தரவும் தயங்கவில்லை.

மேல்நாட்டு மரபின் உண்ணல்முறை தவறு எனக் கடிந்து நம்மரபைச் சரியாக விளக்கியுள்ளார் பெருமுள்ளி.

முதியோர் இல்லங்களும் பிறகாப்பகங்களும் மலிந்துள்ளமை ஈந்துண்ணா அறக்கேடு என்ற முள்ளியாரின் கூற்று முற்றிலும் ஏற்புநெறியது.

பெரியவரைப் பேணும் நெறி குறைந்துவரும் இற்றைச் சமுதாயத்தில் முள்ளியாரின் அறிவுரை காலத் தேவையை மையப்படுத்தி மொழிந்ததாகும்.

ஆடை உடுத்தலின் இன்றியமையாமை உடுத்து நடத்தலின் முறைமையெல்லாம் ஆசாரக் கோவையார் காட்டுமுரைகளாம்.

இன்றைய வாஸ்து சாஸ்திர ஆசாரம் முள்ளியார் மொழிந்த மொழியின் அடிச்சுவட்டையே பெரிதும் ஒத்துள்ளது.

அறிவுடையோரை அடையாளப்படுத்தும் அளவுகோல் முள்ளியாரிடம் பேணிப்பெறத்தக்கதாகும்.

✲ ✲ ✲ ✲ ✲ ✲

நாலடியார் - ஊழ் வலிமை

இராம. மோகன்
விரிவுரையாளர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி

சங்ககாலம் சான்றோர்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அகத்தையும் புறத்தையும் பாடி மகிழ்வித்தனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு சங்கம் மருவிய காலமாகிய ஆறாம் நூற்றாண்டுவரை தமிழகம் களப்பிரர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பினும் இக்காலத்தே மக்கள் நல்வழிச் செல்லவும், உலகியல் உண்மைகளையும் அறக் கருத்துக்களையும் உணர்ந்து உய்ய வழி கொள்ளவும், உயரிய பொருளோடு நூற்கள் பல தோன்றின. அவற்றுள் அறம், பொருள், இன்பம் எனும் முப்பிரிவு கொண்டு அமையப்பெற்ற நாலடியார் திருக்குறளோடு ஒப்ப மதிக்கத்தக்கது. சமண முனிவர்களால் பாடப்பெற்ற நானூறு வெண்பாக்களும் மனிதனின் உளம் சார்ந்த மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. அறத்துப் பாலில் அமையப்பெற்ற 'பழவினை' எனும் பகுதி குறிப்பிடத்தகுந்தது.

நிலம், நீர் காற்று ஆகாயம் நெருப்பு எனும் ஐந்து பூதங்களின் கூட்டு வடிவே வினைக்கேற்பக் கருவாகிறது. நிலம் என்பது உடல்,நீர் என்பது உணர்வு காற்று - உயிர், வெளி; மனம், தீ - ஆன்மா நிலமும் நீரும் போன்றது. உடலும் உணர்வும் உயிர் இயக்கத்தின் தன்மையாகும். வெளியாகிய மனம் என்பதே ஊழாகும். மனமே ஆன்மாவோடு கருவில் அமைந்து பிறப்பிற்கு வித்திடுகிறது.

போனார் தமக்கோர் புக்கில் உண்டு என்பது
யானோ அல்லேன் யாவரும் உணர்குவர்
....
அங்க நன்போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளி நீ

சாதுவன் கூற்றாக மணிமேகலையில் இடம்பெறும் இவ்வரிகள் மூலம் பிறப்பு விதியை அறியமுடியும். ஆக ஊழ்வினைய்யை உயிரின் தன்மையைத் தீர்மானிக்கிறது. இத்தகைய ஊழின் வலிமைபற்றி எளிய நயங்கள் மூலம் 'பழவினை' எனும் பகுதியில் நாலடியார் மிகத் தெளிவுபடுத்துகிறது.

முதல் வெண்பாவில் பசுக்களின் கூட்டத்தில் இளைய பசுங்கன்று தன் தாயை எளிதாகச் சென்றடைவதைப் போல ஊழானது வினைக்குரியவரை எளிதாகப் பற்றும் என்கிறார் சமணமுனி. தொடர்ந்த

பாடல் ஒரு வழி 'ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு நின்று வீழ்ந்தக்கதுடைத்து' எனும் வரிகளின்மூலம் நற்செயல் இல்லாதான் வாழ்க்கை வெறும் உடல்பெற்றுச் சிலகாலம் நின்று பயனின்றி அழிந்து போவதாகும் என அச்சுறுத்தும். இங்கு 'ஒரு வழி ஒன்றேயும் இல்லாதான்' என்பது உடல்கொண்டு அமைந்திருக்கும் காலத்தே உடல்போக்கும் 'யோகம்' 'ஞானம்' முதலிய நல்வழிகளைத் தேடாத வீணர்களைக் குறிக்கும்.

'வளமான வாழ்வை வேண்டாதார் யார் உளர்' ஆனாலும் ஊழின் தன்மைக்கேற்பவே அவரவர் வாழ்வு தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. எப்படியெனில் விளங்காய் ஒருவரால் திரட்டபடாமல் இயற்கையாகத் திரண்டிருப்பது போலவும், களாப்பழம் ஒருவராலும் கறுப்பாக்கப்படாமல் இயல்பாகவே கறுப்பாய் இருப்பதுபோலவும், அவரவர் வினைக்கேற்ப அவரவர்க்குத் தன்மை அமையும் என்பதாம். இதனை

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்

எனும் பாடல் உணர்த்தும். மழை பெய்யாதிருக்கும் காலத்து அதனை பெய்விப்பார் எவரும் இல்லை; மழை மிகுத்துப் பெய்யும் காலத்து அதனைத் தடுப்பாரும் இல்லை. இத்தகைய இயல்பினைப் பெற்றது ஊழ் என நான்காவது பாடல் உறுதிப்படுத்தும். தாழ்ந்தவர் உயர்வதும், உயர்ந்தவர் தாழ்வதும் செய்வினை பொறுத்தமையும், எத்தனை வேதங்களைக் கற்றுணர்ந்தாலும் பெற்றிருக்கும், அகத்தன்மையே விஞ்சி நிற்கும். வேண்டினாலும் வேண்டாதிருந்தாலும் அவரவர்க்குரியனவே வந்து நிற்கும் என அடுத்தடுத்த பாடல்களும் வலியுறுத்துகின்றன.'உயிர்தோன்றிய காலத்து அமையப்பெற்ற ஊழ் குறையாது வளராது முறை பிறழாது இறுதி காலத்தில் வருந்த வேண்டாம்' எனும் முடிவோடு நிற்கும் இறுதிவெண்பா.
வள்ளுவத்தின் ஊழ் எனும் முப்பத்தெட்டாவது அதிகாரத்தில்

ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

எனும் இறுதிக் குறள் ஒப்புநோக்கத்தக்கது.

ஊழ் என்பது மனமெனின் ஆன்மாவோடு படிந்துகிடக்கும் மனதை ஒடுக்கும்போது வினைப் பதிவு தடுக்கப்பெறுகிறது. ஆதலால் ஆன்மா தனித்து நிற்கும். தனித்த ஆன்மா பிறப்பறுக்கும்.

'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்ற வள்ளுவர் வாக்கு இங்கு ஒப்பிடத்தக்கது. மனமாகிய கருமத்தை ஒழித்தல் பற்றிய நெறிமுறைகள் சமய

இலக்கியங்களில் விரிவாகக் கூறப்பெற்றிருப்பினும் கீதையின் மூன்றாவது அத்தியாயமாகிய கருமயோகம் மிக நெறியானதாகும். பற்றற்ற நிலையில் வெறும் செயல் மட்டுமே வினையைப்போக்கும் என்பதே இவ்யோகத்தின் சிறப்பு. உடல் வினைக்குரியது. வினை பிறப்புக்குரியது. ஒரு செயலே புலன்களின்பற்றோடு நிகழ்த்தும்போது அச்செயலின் முடிவாகிய பதிவு ஊழாகிறது. 'எவனொருவன் புலன்களை மனத்தால் கட்டுப்படுத்தி எத்தகைய பற்றும் இல்லாமல் கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைத் தொடங்குகின்றானோ அவன் உயர்வடைகிறான்' என கீதை III - 7வது சூத்திரம் விளக்கம் தரும். 'இருள்சேர் இருவினை' என்பார் வள்ளுவர் இருளாகிய பிறப்பிற்கு நல்ல - தீய இருவினைகளும் வித்தாகும். வினையொழித்து உயிரை வீடுபேற்றிற்கு இட்டுச்செல்லும் அருமருந்தாக நீதியிலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. எனவேதான் உலகில் எந்த மொழிக்கும் இல்லா உயர்வும் சிறப்பும் தமிழ்மொழிக்கு உண்டு.

* * * * * *

பதினெண் கீழ்க்கணக்கில் சாதிய அடுக்கு முறை

முனைவர் க. கனகராசு
இணைப்பேராசிரியர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி

இலக்கியப் புலவர்கள் தாம் வாழும் சமூக அமைப்பைப் பிரதி பலிப்பதும் உண்டு. தாம் வாழும் சமூகம் இன்னவாறு இருக்க வேண்டும் என்ற தம் எதிர்பார்ப்பை மொழிவதும் உண்டு. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் பெரும்பாலும் புலவர்களின் எதிர்பார்ப்பை எடுத்துரைப்பன வாகவே உள்ளன.

ஒவ்வொரு காலத்திலும் அரசியல், பொருளாதாரம், சமயம், சாதி ஆகிய மாறுதல்களுக்கேற்ப இலக்கியங்களின் உருவமும் உள்ளடக்கமும் மாறி மாறி வந்துள்ளமையைத் தமிழ் இலக்கியப் பரப்பைப் படித்தோர் அறிவர். அது போலவே பதினெண் கீழ்க்கணக்கின் பாடுபொருளும் பாவடிவமும் முன்னைத் தமிழ் இலக்கிய மரபினின்றும் மாறியுள்ளன.

அரசியல், பொருளாதாரம், சமயம், சாதி முதலியவற்றில் மாறுபாடுகள் தோன்றும் பொழுது முரண்படும் சமூக அமைப்பில் அதிக அளவில் இலக்கியங்கள் தோன்றுவதில்லை. தோன்றுகின்ற சிற்சிலவும் அக்காலச் சூழலை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்துவதாகவோ, அச்சூழலை எதிர்ப்பதாகவோ அமையும்.

சங்க இலக்கியப் புலவர்கள் பன்னூறு பேர் காணப்பட பதினெண் கீழ்க்கணக்குப் புலவர்களாகப் (நாலடியார் நீங்கலாக) பதினேழு பேர் மட்டுமே காணப்படுகின்றனர். பாடல்களும் எண்ணிக்கை அளவில் மிகக் குறைந்தே இடம் பெற்றுள்ளன. இதுவே அக்காலத்தில் ஏற்பட்ட சமூகச் சூழலில் மக்களுக்குத் தோன்றிய வெறுப்பைப் புலப்படுத்துவதாய் உள்ளது.

வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்குமானது. அவரவர் வாழ்க்கையை அவரவர் வாழ்வதே பொருத்தமானது என்று இல்லாமல், இன்னின்னார் இப்படித்தான் வாழவேண்டும் என்று விதிகளை வகுப்பனவாக அறநூல்கள் காணப்படுகின்றன.

இதற்கான காரணிகளாகப் பல காணப்பட்டாலும் சாதிய அடுக்கு முறைக் காரணியை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்க இலக்கியத்தில் காணப்பெறுவது போல் பதினெண் கீழ்க்கணக்கில் பற்பல தொழிற்சாதிகள் காணப்படவில்லை. வருணாசிரம நெறிப்படி அந்தணர்,

அரசர், வணிகர், வேளாளர் என்ற சாதிகளும் அவர்கள் வாழவேண்டிய முறைகளுமே வகுக்கப்பட்டுள்ளன. அறம் என்பதும் தமிழரின் அகம் மக்கள் குலத்திற்குப் பொது என்று சொல்லப்பட்டது போல் சொல்லப்பெறவில்லை.

பாரதப் பெருநாட்டில் ஒரு குழந்தை பிறந்ததும் அது வாழவேண்டிய இடம், வாழவேண்டிய முறை, பிறரோடு அது கொள்ளத்தக்க உறவு அனைத்தும் சாதியை மையமாகக் கொண்டே அமைக்கப்படுகிறது. படைப்புக்கடவுள் பொருத்தமான சமுதாய அமைப்பு ஒன்றை உருவாக்கத் தன்னையே தியாகம் செய்தபோது தோன்றியவையே நால்வகை வருணங்கள் என்று நம்பப்படுகிறது.

தலையில் இருந்து பிராமணரும், புஜங்களில் இருந்து சத்திரியரும், தொடைகளில் இருந்து வைசியரும் பாதங்களில் இருந்து சூத்திரரும் பிறந்ததாகச் சொல்லப்பட்டது. தலை, புஜம், தொடை, பாதம் நான்கும் ஒன்றின் கீழ் ஒன்றாக இறங்கு முகமாக உள்ளன. இவர்களுக்குரிய வாழ்வியல் முறைகளும் இவ்வாறே வரிசைப்படுத்தப்பட்டன.

சாதிகள் அக மனக்கட்டுப்பாடு உடைய சமுதாயக் கூறு. அவை படிநிலை அமைப்பைக் கொண்டு விளங்குகின்றன. ஒவ்வொரு சாதிக்கும் என்று மாறாத தொழில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. கல்வி, தூய்மை, பொருள் முதலியவற்றைக் கொண்டு உறவின் தன்மைகள் நிச்சயிக்கப்பட்டன.

மனிதரிடையே பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சங்ககாலத் தமிழர் அறியாதது. வருணாசிரம நெறி அடிப்படையில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சாதியப் படிநிலை வடமொழிப் பண்பாட்டினரால் பின்னர் புகுத்தப்பட்டது.

திருவள்ளுவர்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் - குறள் 972

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிலிருந்தும்
கீழல்லார் கீழல் லார் - குறள் 973

என்று கடுமையாக எதிர்க்கிறார். ஆயினும் பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வினைக் கற்பிக்கும் வருணாசிரம நெறி, பிற நீதி இலக்கிய ஆசிரியர்களால் சொல்லப்படுகின்றது. அவர்கள் சொல்லும் கருத்தும் சொல்லும் முறையும் அச்சூழலை ஏற்றுக்கொள்ளுமாறு மக்களை வற்புறுத்துவதாக உணரமுடிகிறது. பிறப்பு அடிப்படையில்

"அந்தணரின் நல்ல பிறப்பில்லை" நா.ம.க. 35:1

என்றே வலியுறுத்தப்படுகிறது.

உலகம் எனப்படுவது யாது எனக்கூற வரும் திரிகடுக நூலின் ஆசிரியர்.

"மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து
முறைநிலை கோடா அரசும் - சிறை நின்று
அலவலை இல்லாக் குடியும் இம்மூவர்
உலகம் எனப்படு வார்" - திரி. 34

என்று குறிப்பிடுகின்றார்.

இதில் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற நிலை மாற்றப்பட்டு, மன்னரினும் மேம்பட்ட நிலை அந்தணருக்கு வழங்கப்பட்டமை அறியத்தக்கது.

அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று வேள்விகள் செய்து, அவர்களுக்குப் புண்ணியம் தேடித் தர வைதீக சமயத்தினர் முயன்றனர். அதே சமயத்தில் வருணாசிரம தருமத்தை நிலை நிறுத்தவும், தாங்கள் காட்டும் நெறிப்படி இச்சமூகம் நடக்கவேண்டும் என்று விரும்பினார். அறம் என்னும் பெயரில் "நான் மறை யாளர் வழிச்செலவு" (திரி. 2:3) என்று ஆவன செய்துள்ளனர்.

அந்தணர்கள் ஒரு காலால் பெடையை வயப்படுத்தும் சேவற் கோழியைப் போல் எவர் பகையையும் ஏற்காமல் யாரையும் வயப்படுத்தி வாழ்பவர் (நா. ம. க. 55) என்று நான்மணிக்கடிகை கூறுகிறது.

வேட்பவன் பார்ப்பான் : சிறு. ப. மூ. 33 : 1
வேதம் மறவாமை : இ. நா. 7:1
வேதம் ஓதாத அந்தணர் சொல் துன்பம் : இன். நா 21:4

என்பன அவர்களின் தலைமைத் தன்மை பெறுவதற்கான காரணமாம்.

செல்வர்யார் என்னும் வினாவிற்குத் திரிகடுக நூலின் ஆசிரியர்.
"வேதம் கரைகண்ட பார்ப்பான்" - திரி. 70 என்று பதிலீடுகின்றார்.
வள்ளுவர் "ஈதலே நன்று" என்ற பொழுதும் "ஆவோடு பொன்னீதல் அந்தணர்க்கு முன்னினிதே" இ. நா 23:4
என்று ஆவும் பொன்னும் அந்தணர்க்கு வழங்குதல் வேண்டும் என்று இனியவை நாற்பது புலப்படுத்துகின்றது.

பார்ப்பாரை உடல் போல் பாதுகாக்க வேண்டும் இல்லையேல் ஐம்பூதம் அன்றே கெடும் என்று ஆசாரக் கோவை வலியுறுத்துகின்றது. "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்பால் ஒருவன் கற்பின் மேற்பால் உள்ளோன் அவன்கண் படுமே" என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பிறர் அந்தணரோடு கொள்ள வேண்டிய உறவு நிலைகளென பலகாலம் தொடர்ந்து பழகினும் அந்தணரைத் தீயினுக்கு அஞ்சி நடப்பதைப் போன்று நடத்தல் வேண்டும் (திரி.42)
பார்ப்பாரை எச்சிலால் தீண்டக்கூடாது (ஆ.கோ.5)

அந்தணர் இல்லத்தில் விருந்துண்ணக்கூடாது (இ. நா. 23) ஓரிடத்திற்குச் செல்லும் பொழுது அந்தணர் நடுவில் செல்லக்கூடாது (ஆ. கோ. 31) என்பன சொல்லப் பெறுகின்றன.

உலகத்தார் யார் சொல்லைக் கேட்பது என்ற வினாவிற்கு "தலைஇய நற்கருமஞ் செய்யுங்கால் என்றும் புலையர்வாய் நான் கேட்டுச் செய்யார் தொலைவில்லா அந்தணர் வாய்ச் சொற்கேட்டுச் செய்க" (ஆ. கோ. 92) என்ற பதில் மொழியப்படுகிறது.

செங்கோலன் ஆகுதல், கொல்லாமை, கோல்கோடிமாராயம் செய்யாமை (இ. நா. 5) யானையை வெற்றி பெறல் (இ. நா. 8) பகைவரைப் போரில் வெல்லுதல் முதலியன மன்னருக்குரிய கடமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

எருதுடையான் வேளாளன் (நா.ம.க 56:1) என்று உழவுத்தொழில் வேளாளருக்கு என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆக பதினெண் கீழ்க்கணக்கில் காணப்பெறும் சாதிய அடுக்கு முறையின் மேல்தளத்தில் அந்தணர் சொல்லப்படுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து மக்களைக் காப்பாற்றும் மன்னரும், வணிகரும் வேளாளரும் ஆகிய அங்கீகரிக்கப்பட்ட சாதிகள் மொழியப் பெற்றுள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் சமூகத்தின் மேல்தளத்தை அந்தணர்கள் பிடித்துக்கொண்டு, தங்களின் சுகபோக வாழ்க்கைக்கு ஏற்றவாறு அறம் என்ற பெயரில் நீதி சொல்லியுள்ளமையைத் தெளிவாகக் காணமுடிகிறது.

* * * * * *

இன்னிலை - ஓர் மீள்பார்வை

முனைவர் **அ. அறிவுநம்பி**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழியல்துறை
புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடும்போது 'இன்னிலை' எனப்பெயரிய நூலொன்றையும் குறிப்பர். அதைமறுத்துக் 'கைந்நிலை' என்றொரு நூல்பற்றியும் குறிப்பிடுவர். 'இன்னிலை' என்ற தலைப்புடன் வெண்பாக்களால் உருவாக்கப்பெற்றுள்ள நூலுக்குச் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி உரையெழுதியுள்ளார். பொய்கையார் என்ற புலவர் பெருமானால் இந்நூல் அமைக்கபெற்றுள்ளது. இந்நூலைத் தொகுத்தவராக மதுரையாசிரியர் என்பாரும், கடவுள் வாழ்த்துச் செய்யுலைப் படைத்தவராகப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பாரும் சுட்டப்பெறுகின்றனர். இந்நூல் குறித்த சிந்தனைகள் சிலவற்றை இக்கட்டுரை முன் வைக்கின்றது.

ஐயப்பாடுகள் சில :

1. இந்நிலை, கைந்நிலை என்ற சொற்கள் அவரவர்தம் கருத்திற்கேற்ப ஏற்கப்பெற்றோ விலக்கப்பெற்றோ உள்ளமை குறித்தலுக்குரியது. உரையாசிரியர்கள் சிலர் இந்நூலின் பாக்களைச் சான்று காட்டியுள்ளனர் என்பது உண்மையே. அவர்கள் இந்நூலைப் பதினெண் கீழ்க்கணக்கு நூலாகக் கருதினரா என்பது தெளிவுறப் புலனாகவில்லை. இச்சூழலில் இந்த நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூலே தான் என எவ்வாறு கொள்ளுவது?

2. ஆசிரியராகப் பொய்கையார் பெயரமைய வ.உ.சி, பக்தி இலக்கிய காலப் பொய்கையாழ்வரை இணைத்து, பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் இந்நூலாசிரியர் எனக்கொள்ளுவது பொருத்தமாக அமையவில்லை. நக்கீரர், ஔவையார் போன்ற பெயர்கள் பல்வேறு காலங்களில் அமைந்துள்ளமை தெளிவு. அதனையொப்ப, பொய்கையார் என்ற பெயரமைவும் பல்வேறு காலத்ததாகக் கொள்ளுவதில் பிழையில்லை. நக்கீரர், ஔவையார் பெயரமைவுகளில் எவ்வித மாற்றமும், பின்னொட்டும், முன்னொட்டும் இல்லை. பொய்கையார், பொய்கையாழ்வார் பெயரமைவுடன் அவ்வாறில்லை.பொய்கையார் என்ற பெயரே ஆழ்வார்ப்பின்னொட்டுடன் பொய்கையாழ்வாராயிற்று எனக் கொண்டாலும் இருவரையும் ஒருவராகக் கருதிட ஏதுக்கள் குறைவு என்பது வெள்ளிடைமலை. களவழி நாற்பது, புறநானூறு போன்ற பாக்களை இயற்றிய பொய்கையார், இன்னிலை ஆசிரியரிலிருந்து வேறுபட்டாரெனக்

குறிக்கும் உரையாசிரியர் வலிந்து பற்றித் திருவந்தாதி பாடியவரே இன்னிலை பாடினார் எனக் குறிப்பது ஏனென்று புரியுமாறில்லை. களவழி நாற்பது, புறம் ஆகியவை குறிக்கும் பொய்கையார் அதே காலகட்டத்தை ஒட்டிய இன்னிலை குறிக்கும் பொய்கையாரினின்றும் மாறானவர் எனக்குறிக்க வலுவான சான்றுகள் இல்லை. இதனாலான குழுப்பங்கட்குத் தீர்வுயாது?

3. பெரும்பான்மையாக அனைத்து இலக்கியங்களும் பத்தின் மடங்காக முடிவது பொதுமரபு. திருக்குறள், பழமொழி நானூறு, திணைமாலை ஐம்பது, இன்னாநாற்பது என்ற நூற்களின் பாடல் எண்ணிக்கை கவனிக்கத்தக்கது. இன்னிலை நாற்பத்தைந்து பாடல்களைக் கொண்டுள்ளது. ஐம்பதாக எழுதப்பெற்று, காணாமல் போனதாக ஐந்து பாடல்களைக் கருதலாம். அல்லது நாற்பதாக எழுதப்பெற்று இடைச் செருகல், பிற்சேர்க்கை ஆகியவை காரணமாக எண்ணிக்கை வேறுவிதமாக மாறியிருக்கவும் வாய்ப்புண்டு. நானாற்பது, ஐந்திணை என்ற சொற்கள் வழி நாற்பது, ஐம்பது பாடல்களுடன் கூடிய நூற்பெயர்களை உணரலாம். பத்தின் மடங்காயமையாமைக்கான காரணம் ஏன் கூறப்பெறவில்லை?

4. நான்கு பால்களாகப் பிரிக்கப்பெற்ற முறையிலும் இச்சிக்கல் தொடர்கின்றது. அறத்துப்பாலான 'அறப்பாலில்' பத்துப்பாக்கள் உள. பொருட்பாலில் ஒன்பது பாக்களே உள. மீளவும் ஆழ்ந்து நோக்க வேண்டிய தேவையை இப்பகுதி கொண்டுள்ளது.

5. மூன்று பாடல்களில் (1,3,21) இடம்பெறும் குறிப்புகள் மூலம் இந்நூலாசிரியர் மாலினடியார் என உரைகாரர் குறிப்பிடுவார். இங்கும் பல சிக்கல்கள் உள.

(அ) போர்க்களத்தில் சொல்லப்பெற்ற அறவுரையை நுவலும் முதலாவது பாடலில் மகாபாரதப்போர் என்ற குறிப்பு ஏதுமில்லை. களமும் உரையும் சுட்டப்பெற்றன. கண்ணன், பாரதப்போர், அர்ச்சுனன் என்ற பெயர்களோ, குறியீடுகளோ, பிறவோ ஏதுமில்லை.

(ஆ) கந்தழி என்ற சொல்லைக் கடவுளுக்கான சொல்லாக மொழியும் இன்னிலையாசிரியர் சங்க நூல் முதன்மைப்படுத்தாத நப்பின்னையைப் பற்றியும் பாடியுள்ளமை எவ்வாறெனப் புரியுமாறில்லை.

6. கடவுள் வாழ்த்தில் வேலவன், சிவன், உமை குறிக்கப் பெறுவர். விநாயகரில்லை. அக்கால சங்கம் மறுவிய காலப்போக்கு ஃது. நப்பின்னையின் வரவு நெருடலாகின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனார் நூல் எழுந்ததன்பின் எவ்வளவு காலம் கழித்துக் கடவுள் வாழ்த்து எழுதினாரென்பதும் தெரியுமாறில்லை.

7. திருவள்ளுவரைப் பின்னிக்கிழுக்கும் வ.உ.சி அதற்குரிய வலுவான சான்றுகளைக் கூறினாரில்லை. 'நாலடி நாற்பது . . . ' எனத் தொடங்கும் பாடலில் உள்ள முப்பால் திருக்குறள் தானா என்றும், முப்பாலெனுஞ்சொல் அடுத்த சொல்லான திரிகடுகத்தின் அடையென்றும் குறிப்பாருண்டு. குறள் மூன்று பால்களாக அமைய இந்நூல் நான்கு பால்களாக உள்ளமையே 'இன்னிலை' காலத்தால் பின்வந்தது எனக் கருதப் போதுமானதென்பர். வ.உ.சியின் கருத்துரைக்கு மறுப்பேதுமில்லை. ஏன்?

8. வீட்டுப்பால் பகுதியில் இல்லியல், துறவியல் என்ற பாகுபாடுகள் உள. இல்லியல் பகுதியில் இல்லறத்தாரின் கடமைகள் முன் நிறுத்தப்பெறுகின்றன. இப்பகுதியில் வீடு, சொர்க்கம், அவ்வுலகம், முக்தி போன்ற எந்தச்சொற்களும் இல்லை. முப்பத்திரண்டாம் இன்னிலைப் பாடல் 'நாப்பண்' என்ற சொல்லைக் கொண்டுள்ளது. நடுவிடம் என்பது அதன் பொருள். எவ்விடத்தும் மேலுலகு பற்றிய கோடிகாட்டல் கூட இல்லாத சூழலில் இப்பாடல் முக்தியைக் குறிப்பதாக எங்ஙனம் கருதுவது?

9. இல்லறத்தாற் தம் இல்லறப் பணிகளை முடித்தக்கால் துறவறம் மேற்கொள்வது தமிழ் மரபு. 'காமஞ்சான்ற கடைக்கோட்காலை' என்ற சொல்லாடல்கள் கருதத்தகுவன. இன்னிலை நூலோ இல்லறத்தாரிலிருந்து துறவு மேற்கொண்டாரைக் குறிக்கவில்லை. மாறாக

'அழுக்குடம்புச் சீழ்நீரான் யாத்த சீர் மெல்லியலையான

முழுக்காட்டி மன்றின்முன் "கையகத்து" என்று கூறி இல்வாழ்க்கையை இழித்துப்பேசும் துறவியை இந்நூல் இயம்புகிறது.

இன்னிலை எனப்பெயரிய நூலின் அகத்தும் புறத்தும் மறுபார்வைக்கான பகுதிகள் ஏராளமாக உள்ளன. உரைகாரர் தம் மனக்கருத்தையே நூற்செய்திகளில் திணித்துக் கூறினாரெனக் கொள்ளவும் வாய்ப்புண்டு. உரையைவிடுத்து நூலை மட்டும் மறு ஆய்வுக்கு உட்படுத்தும்போது பாக்களின் எண்ணிக்கை, நூலாசிரியரின் பெயர், உட்செய்திகள் போன்ற பல கூறுகள் குழப்பங்களையே மிகுவிக்கின்றன. வெண்பாக்களில் கூடச் சிந்தியல் வெண்பாவகை ஊடுகலந்திருப்பதும் குறிக்கத்தக்கது. புறச்சயமவாதிகளும் நூல்படைத்த காலத்தில் இந்நூல் வந்துள்ளதாகக் கருதின் அவர்களின் தாக்கமும் இந்த நூலாசிரியர்மாட்டு எழுந்திருக்க வாய்ப்புண்டு. அவை எவை? இல்வாழ்க்கைச் சிறப்பை இந்நூல் போல அக்கால நூல் வேறெதுவும் கூறவில்லை என்பார் ஒருபுறம். துறவுவழியான முக்தியையே இந்நூல் முதன்மைப்படுத்துகிறது என்பார் மறுபுறம். இவ்விரண்டு மருங்கிலும் சாயாமல், மூலநூலை மட்டுமே ஆய்வுப்பொருளாகக் கொண்டு உள்ளடக்கப்பகுப்பாய்வால் விடைதேடுங்கால் வெளிச்சம் கிட்ட வாய்ப்புண்டு. மயக்கந்தரும் உரைபோல் வனவற்றைப் புறத்தொதுக்கி 'இன்னிலை' நூலாய்வு மேற்கொள்ளப்பெறல் தேவையாகின்றது.

தமிழிலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் பதினெண் கீழ்க்கணக்குப் படைப்புகளை மீள்வாசிப்புச் செய்து கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகள் **இன்றைய நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு** என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றுள்ளது. இவை முன்னெப்போதையும் விட சிக்கலாகியிருக்கும் இன்றையத் தமிழர் வாழ்வில், அறநூல்கள் பெறுமிடத்தையும் அவற்றின் செல்வாக்கையும் ஆழமாக மதிப்பிடுகின்றன; பண்டைய இலக்கிய ஆய்வில் புத்தொளி பாய்ச்சுகின்றன. இவையே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஆய்வுக் கட்டுரைகளின் பலம்.